கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(18.02.2018 - 18 மாசி 2018 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 08, கதிர் - 178, 20 பக்கங்கள் ரூபா: 30.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /72 / NEWS / 2018




ஞான ஒளி
ඥාන ඔළි
GNANA OLI
ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05

# பணத்தின் மீது வளரும் மோகம் பிறரன்பை அழித்துவிடுகிறது



## தவக்காலத்திற்கான திருத்தந்தையின் செய்தி

இம்மாதம் 14ம் திகதி திருநீற்றுப்புதனோடு தொடங்கும் இவ்வாண்டு தவக்காலமானது மனமாற்றத்தின் அடையாளச் சின்னமாக சாம்பல் பூசி ஆரம்பிக்கின்றோம். “நெறிகேடு பெருகுவதால் பலருடைய அன்பு தணிந்துபோகும்” (மத்தேயு 24:12)மத்தேயு நற்செய்தியிலுள்ள இயேசுவின் சொற்களை மையமாக வைத்து, இவ்வாண்டுக்குரிய தவக்காலச் செய்தியை வெளியிட்டுள்ளார் திருத்தந்தை. தன் இறுதி நேரம் நெருங்கிவருவதை உணர்ந்த இயேசு, எருசலேமுக்கருகே ஒலிவ மலை மீது அமர்ந்து, தன் சீடர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த வேளையில், பல்வேறு துன்ப இடர்கள் சூழும் காலத்தில், பல போலி இறைவாக்கினர் தோன்றி, பலரை நெறிதவறி அலையச் செய்வர்...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

# மரியன்னைக்கு தினமும் செபமாலை செபிப்போம்



- மாதத்தின் முதற்சனிக்கிழமை திருப்பலியும், மெழுகுதிரி பவனியும் இடம்பெறும்
- மறைக்கோட்டம், பங்கு ரீதியாக மக்களை பங்குகொள்ள வைக்குமாறு அருட்தந்தையர்களுக்கு அழைப்பு (வேண்டுகோள்) விடுக்கப்படுகின்றது.
- மரியன்னை பக்தி மூலம் இறைவனை கண்டடைவோம்

15

# நீர்கொழும்பு மறைக்கோட்ட கத்தோலிக்க மக்களிடையே பரவிவரும் போதைப்பொருள் பாவனைக்கு எதிரான செப பவனி

**எனதன்பான சகோதர சகோதரிகளே!**

நீர்கொழும்பு மற்றும் அயற்சூழலில் போதைப்பொருள் பாவனையானது விரைவாக பரவி வருகின்றது. இந்நிலையானது இளைஞர் யுவதிகள், பாடசாலை செல்லும் மாணவ மாணவிகளின் வாழ்வை சீர்குலைக்கும் நிலையியுள்ளதெனவும் இதற்கு பாதாள உறுப்பினர்களின் பங்களிப்பு அதிகரித்துள்ளதெனவும் அப்பிரதேச பங்குத்தந்தையர்கள் மூலம் நான் அறியப்பெற்றேன்.

இதன் நிமித்தம், இந்நிலைக்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்ற 2018 மாசி மாதம் 25ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு நீர்கொழும்பு நகரத்தின் பல பிரரேதசங்களிலுள்ள மக்கள் ஒன்று திரண்டு, நீர்கொழும்பு மணிக்கூட்டுக் கோபுரம் வரை பவனி வருவார்கள் என்பதை அறியத்தருகின்றேன். அதனைத் தொடர்ந்து மணிக்கூட்டுக் கோபுரத்தினருகே ஓர் கூட்டம் நிகழ்த்த...


தொடர்ச்சி 15ம் பக்கம்..

# இறைபதம் அடைந்தார்.



தளுகம பங்கின் பொல்கஹகமத கிராமத்தில் பிறந்து, கண்டி மறைமாவட்டத்தில் பணியாற்றிய **அருட்பணி. நிலங்க டயஸ் அடிகளார்** இம்மாதம் முதலாம் திகதி இறைபதம் அடைந்தார். அவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக ஞான ஒளி பிரார்த்திக்கின்றது.

## மதிப்பிற்குரிய தேரர் பெல்லன்வில விமலரத்த அவர்களின் இறப்பைக் குறித்து, கொழும்பு பேராயரின் ஆழ்ந்த அனுதாபச் செய்தி



கோட்டை ஸ்ரீ ஜயவர்த்தன பல்கலைக்கழகத்தின் ஆலோசகர் மதிப்பிற்குரிய தேரர் பெல்லன்வில விமலரத்த அவர்களின் திடீர் மரணமானது என்னை துன்பத்தில் ஆழ்த்தியது. மிகவும் சாந்தமாக, நேர்மையாக செயற்பட்ட...

15

# “நாட்டின் சுதந்திரம் முழுமையடைவது மக்களின் ஆன்மீகம் உறுதிபெறும் போதே!”


## 70வது சுதந்திரத்தின திருப்பலியின் போது கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் இவ்வாறு தெரிவித்தார்.



ஒரு நாட்டின் அரசியல் சுதந்திரம் முழுமையடைவது அந்நாட்டில் வாழும் மக்களின் ஆன்மீக உறுதிநிலையினாலேயே ஆகும். நாட்டின், சமூகத்தின் வளர்ச்சியானது ஆன்மீகத்தில் ஊட்டம் பெற்ற மக்களிலே அன்பு, இரக்கம், பகிர்ந்துகொள்ளல், வெற்றி தோல்வியை ஏற்றுக்கொள்ளல் போன்ற மனித மதிப்பீடுகளை கட்டியெழுப்புவது...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

# இயேசு சபையின் உலகளாவிய தலைவரின் இலங்கை விஜயம்



இயேசு சபையின் உலகளாவிய தலைவர் அருட்பணி. ஆதரோ சூசா அவர்கள் இம்மாதம் 17ம் திகதி தொடக்கம் 25ம் திகதி வரை இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு, கண்டி இயேசு சபை தியான, நடுநிலையத்தில் நடைபெறும் வடஆசிய மாநாட்டு இயேசு சபை சம்மேளனத்தில் கலந்து கொள்ளவுள்ளார்.

# "mass in G major by Franz Schubert"

## திருப்பலிக் கொண்டாட்டம்

இம்மாதம் 18ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணிக்கு கொழும்பு கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலயத்தில் நடைபெறுகின்றது.

# கொழும்பு உயர் மறைமாவட்ட சிறுவர் தினம் - 2018

வருடந்தோறும் நடாத்தப்பட்டு வரும் கொழும்பு உயர் மறைமாவட்ட சிறுவர் தினமானது இவ்வருடம் பங்குனி மாதம் 3ம் திகதி சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு வரவுப்பதிவும் இதனைத்தொடர்நது செபமாலை தியானமும் வரவேற்பும் தேவத்தை புதிய புனித லூர்து கெபியில் ஆரம்பமாகும். பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தலைமை தாங்கி சிறப்பிப்பார் என்பது குறிப்பிடத்தக்கது. அனைத்து கத்தோலிக்க பாடசாலையிலும் தரம் 6ற்கு மேல் கல்விப் பயிலும் மாணவர்கள் மாத்திரமே பங்குகொள்ள முடியும். பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், வட்டார இயக்குனர்கள், பங்குத்தந்தையர்கள், உதவிப்பங்குத்தந்தையர்கள், மறைப்பணியாளர்கள் மற்றும் பெற்றோர்கள் அனைவரும் இதனை கருத்திற்கொண்டு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

# உலக அமைதிக்காக செபிப்போம்

மாசி 23

தொடர்ச்சி 15ம் பக்கம்..

**ஆண்டவரே இரக்கமாயிரும். ஏனெனில் நாங்கள் பாவம் செய்தோம் (தி.பா 51)**

# கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் உள்ள கத்தோலிக்க தனியார் பாடசாலைகளில், தரம் 01ல், 2019ஆம் ஆண்டு மாணவர்களை சேர்ப்பதற்கான விண்ணப்பப்படிவங்கள் வழங்குதல் தொடர்பான விபரம்

| இல | பாடசாலையின் பெயர் | திகதிகள் | நேரம் |
|---|---|---|---|
| 01 | திருக்குடும்ப கன்னியர் மடம், கொழும்பு 04 | மாசி 16ம், 19ம் திகதிகள் 2018 | - |
| 02 | கிறிஸ்து அரசர் கல்லூரி, பன்னிப்பிட்டிய | மாசி 22ம், 23ம் திகதிகள் 2018 - கத்தோலிக்கர்கள் திருமுழுக்கு சான்றிதழ் கொண்டுவருதல் வேண்டும். | காலை 8.00 - 11.00 மணி வரை |
| 03 | ஆவே மரியா கன்னியர் மடம், நீர்கொழும்பு | மாசி 24ஆம் திகதி 2018 : ஆவே மரியா பாலர் பாடசாலையில் கற்கும் மாணவர்கள், பாடசாலையில் படிக்கும் மாணவிகளின் சகோதரிகள் மற்றும் பழைய மாணவர்களின் பிள்ளைகள்,<br>03 பங்குனி 2018 : ஏனைய மாணவர்கள் | காலை 8.00 - 01.30 மணி வரை<br>காலை 08.00 - 4.00 மணி வரை |
| 04 | புனித சூசையப்பர் ஆண்கள் கல்லூரி, நுகேகொடை | பங்குனி 01ம் திகதி தொடக்கம் பங்குனி 31ஆம் திகதி வரை 2018 | காலை 7.30 - 01.30 மணி வரை |
| 05 | வெற்றிமாதா கன்னியர் மடம், மொறட்டுவை | பங்குனி 02, 03ஆம் திகதிகள் 2018 - குழந்தையின் பிறப்பு சான்றிதழ், ஞானஸ்நான சான்றிதழ், பெற்றோர் திருமண சான்றிதழ், அடையாள அட்டை, குடும்ப புத்தகம் ஆகியவற்றை கொண்டு வருதல் வேண்டும். | - |
| 06 | புனித பேதுரு கல்லூரி, கொழும்பு - 04 | பங்குனி 05ஆம் திகதி 2018 : பாடசாலையில் படித்த பழைய மாணவர்களின் பிள்ளைகள் பங்குனி 05ஆம், 06ஆம், 7ஆம் மற்றும் 8ஆம் திகதிகள் 2018 : எல்லா கத்தோலிக்க மாணவர்கள் | காலை 09.00 - 12.00 மணி வரை |
| 07 | புனித சூசையப்பர் கல்லூரி, கடோல்கலே, நீர்கொழும்பு | பங்குனி 05 தொடக்கம் 07ம் திகதி வரை 2018 - குழந்தையின் அசல் பிறப்பு சான்றிதழ், ஞானஸ்நான சான்றிதழ், குடும்ப புத்தகம் ஆகியவற்றை கொண்டு வருதல் வேண்டும். | காலை 08.30 - 01.30 மணி வரை |
| 08 | புனித செபஸ்தியார் கல்லூரி, மொறட்டுவை | பங்குனி 05 தொடக்கம் 08ம் திகதி வரை 2018 | - |
| 09 | புனித சூசையப்பர் கல்லூரி, வத்தளை | பங்குனி 05 தொடக்கம் 09ம் திகதி வரை 2018 - குழந்தையின் பிறப்பு சான்றிதழ், ஞானஸ்நான சான்றிதழ், பெற்றோர் திருமண சான்றிதழ், குடும்ப புத்தகம் ஆகியவற்றை கொண்டு வருதல் வேண்டும். | காலை 9.00 - 01.30 மணி வரை |
| 10 | ஆவேமரியா கன்னியர் மடம், போலவலானை | பங்குனி 07, 08 மற்றும் 09ம் திகதிகள் 2018 | பி.ப 12.30 - 3.00 மணி வரை |
| 11 | புனித பேதுரு கல்லூரி, உடுகம்பொல, | பங்குனி 07, 02, மற்றும் 09ம் திகதிகள் 2018 | பிற்பகல் 2.00 - 04.00 மணி வரை |
| 12 | லொயலா கிளைக் கல்லூரி, போபிட்டிய | பங்குனி 08ஆம், 09ஆம் திகதிகள் - 2018 | பிற்பகல் 02.00 - 5.00 மணி வரை |
| 13 | நல்லாயன் கன்னியர் மடம், பானந்துறை | பங்குனி 08ஆம், 09ஆம் திகதிகள் - 2018 | காலை 11.00 - 01.00 மணி வரை |
| 14 | திருக்குடும்ப கன்னியர் மடம், களுத்துறை | பங்குனி 08ஆம், 09ஆம் திகதிகள் - 2018 | பிற்பகல் 02.00 - 05.00 மணி வரை |
| 15 | மாரிஸ்டெலா கல்லூரி, நீர்கொழும்பு | பங்குனி 10ம் திகதி 2018 - குழந்தையின் அசல் பிறப்பு சான்றிதழ், ஞானஸ்நான சான்றிதழ், பெற்றோர் திருமண சான்றிதழ், குடும்ப புத்தகம் ஆகியவற்றை கொண்டு வருதல் வேண்டும். | காலை 8.00 - 12.00 மணி வரை |
| 16 | டி மெசனட் கல்லூரி, கந்தானை | பங்குனி 10ம் திகதி 2018<br>பங்குனி 11ம் திகதி 2018 | காலை 08.30 - 02.30 மணி வரை<br>காலை 09.30 - 12.00 மணி வரை |
| 17 | புனித பெனடிக்ட் கல்லூரி, கொழும்பு - 13 | பங்குனி 10ஆம், 17ஆம் திகதிகள் 2018 - குழந்தையின் அசல் பிறப்பு சான்றிதழ், ஞானஸ்நான சான்றிதழ், பெற்றோர் திருமண சான்றிதழ், அடையாள அட்டை, குடும்ப புத்தகம் ஆகியவற்றை கொண்டு வருதல் வேண்டும். | காலை 9.00 - 12.00 மணி வரை |
| 18 | லொயலா கல்லூரி, நீர்கொழும்பு | பங்குனி 13 தொடக்கம் 15ம் திகதி வரை 2018 | காலை. 9.00 - 2.00 மணி வரை |
| 19 | புனித பிரிஜட் கன்னியர்மடம், கொழும்பு -07 | பங்குனி 13 தொடக்கம் 15ம் திகதி வரை 2018 - குழந்தையின் அசல் பிறப்பு சான்றிதழ், ஞானஸ்நான சான்றிதழ், பெற்றோர் திருமண சான்றிதழ், அடையாள அட்டை, குடும்ப புத்தகம், PPA உறுப்பினர் அட்டை ஆகியவற்றை கொண்டு வருதல் வேண்டும். | காலை 8.30 - 10.30 மணி வரை |
| 20 | புனித லோரன்ஸ் கன்னியர் மடம், கொழும்பு - 06 | பங்குனி 15ஆம் திகதி 2018 : பாலர் பாடசாலையில் கற்கும் மாணவர்கள், பாடசாலையில் படிக்கும் மாணவிகளின் சகோதரிகள் மற்றும் பழைய மாணவர்களின் பிள்ளைகள்,<br>பங்குனி 16ஆம் திகதி 2018 : அனைத்து கத்தோலிக்க மாணவர்கள் | பிற்பகல் 2.00 - 4.00 மணி வரை |
| 21 | திருச்சிலுவை கல்லூரி, களுத்துறை | பங்குனி 17ம் திகதி 2018 - குழந்தையின் பிறப்பு சான்றிதழ், ஞானஸ்நான சான்றிதழ், பெற்றோர் திருமண சான்றிதழ், குடும்ப புத்தகம் ஆகியவற்றை கொண்டு வருதல் வேண்டும். | காலை 8.00 - 02.00 மணி வரை |
| 22 | தூய சம்மனசுகள் மகளீர் பாடசாலை, பயாகலை | பங்குனி 19ம் திகதி 2018 | காலை 8.30 - 02.30 மணி வரை |
| 23 | புனித யூட் கல்லூரி, குரண, நீர்கொழும்பு | பங்குனி 19 தொடக்கம் 21ம் திகதி வரை 2018 | காலை 08.00 - 03.30 மணி வரை |
| 24 | கொட்டாஞ்சேனை நல்லாயன் கன்னியர் மடம், கொழும்பு - 13 | பங்குனி 20, 2018 : நல்லாயன் பாலர் பாடசாலையில் கற்கும் மாணவர்கள், பாடசாலையில் படிக்கும் மாணவிகளின் சகோதரிகள் மற்றும் பழைய மாணவர்களின் பிள்ளைகள், பழைய மாணவர்கள் அல்லாத பெற்றோர்களின் பிள்ளைகள் பங்குனி 21ஆம், 22ஆம் திகதிகள் : அனைத்து கத்தோலிக்க மாணவர்கள் - குழந்தையின் அசல் பிறப்பு சான்றிதழ், ஞானஸ்நான சான்றிதழ், பெற்றோர் திருமண சான்றிதழ், அடையாள அட்டை, குடும்ப புத்தகம் ஆகியவற்றை கொண்டு வருதல் வேண்டும். | காலை 8.00 - 9.00 மணி வரை |
| 25 | திருச்சிலுவை கிளை பாடசாலை, பயாகலை | பங்குனி 24ஆம் திகதி 2018 | காலை 8.00 - 12.00 மணி வரை<br>பி.ப 01.00 - 04.00 மணி வரை |
| 26 | கிறிஸ்து அரசர் கல்லூரி, வெலிவேரிய | பங்குனி 26ஆம், 27ஆம் திகதிகள் - 2018 | காலை 8.30 - 10.30 மணி வரை |
| 27 | புனித சூசையப்பர் கல்லூரி, கொழும்பு - 10 | சித்திரை 02 தொடக்கம் 06ஆம் திகதி 2018 - குழந்தையின் பிறப்பு சான்றிதழ், நகல் ஞானஸ்நான சான்றிதழ், குடும்ப புத்தகம் ஆகியவற்றை கொண்டு வருதல் வேண்டும். | காலை 8.30 - 01.00 மணி வரை |
| 28 | திருச்சிலுவை கல்லூரி, கம்பஹா | சித்திரை 07ஆம், 08ஆம் திகதிகள் 2018 | காலை 8.00 - 12.00 மணி வரை |
| 29 | புனித தோமையார் சர்வதேச பாடசாலை, சீதுவ | பங்குனி 02, 05, 09 திகதிகள் - 2018 | காலை 9.00 - ந.ப. 12.00 மணிவரை |
| 30 | புனித நிக்கோலஸ் சர்வதேச பாடசாலை, பலாவட்ட | பங்குனி 12 தொடக்கம் 16ஆம் திகதி வரை - 2018 | காலை 9.00 - ந.ப. 12.00 மணிவரை |
| 31 | புனித நிக்கோலஸ் சர்வதேச பாடசாலை, நீர்கொழும்பு | பங்குனி முதல் புரட்டாதி 2018 வரை | காலை 08.00 - 03.30 மணிவரை |

தொடர்ச்சி 15ம் பக்கம்..

ஞான ஒளி
GNANA OLI

இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
18 மாசி, 2018 ஞாயிற்றுக்கிழமை.


# தவக்காலத்தில் இறைவனின் இரக்கத்தை அதிகமாக அனுபவிப்போம்.

நாம் வாழும் வாழ்வானது நாம் விரும்பி கிடைத்ததும் அல்ல எமது உழைப்பினால் நாம் பெற்றுக்கொண்டதும் அல்ல மாறாக, இறைவனுடைய இரக்கத்தினால் நாம் பெற்றுக் கொண்டதாகும். நாம் ஆரம்பித்திருக்கும் இத்தவக்காலத்தில் இறைவனின் இரக்கத்தை அதிகமாக அனுபவிக்க முயற்சி செய்வோம். தவக்காலம் ஆரம்பமாகி முதலாம் வாரத்தில் இருக்கின்றோம். தவக்காலம் மனிதன் மீட்படையவும் ஆன்மாவையும் காத்துக்கொள்வதற்குமான வசந்த காலம். எனக்கு மீட்பே இல்லையா? எனக்கு எப்போது விடுதலை என்று ஏங்கி தவிப்போருக்கு இறைவன் பாதம் சென்றிட வாழ்க்கைக்கு விடை தந்திட தரப்பட்டதுதான் இந்த வசந்த காலம். நமது வாழ்வு நமது கையில். நமது வாழ்வை திருத்தி அமைத்து, புதுவாழ்வில் நுழைந்திடவும் நாம் நலமாக வளமுடன் வாழ்ந்திட தரப்பட்டுள்ளதுதான் தவக்காலம். இந்த பொன்னான தருணத்தை எமதாக்கிக் கொள்வோம். நாம் பிறந்தபோது எதைக் கொண்டு வந்தோம் இறக்கும்போது எடுத்துச் செல்வதற்கு. இவ்வுலகில் வெறுமையாய் பிறந்த எமக்கு இறைவன் தந்த நன்மைகளோ எண்ணிலடங்காதவை. அடிப்படைத் தேவைகள், சொத்து, கல்வி இப்படியாக நிறைய நன்மைகளைப் பெற்றிருக்கின்றோம். பெற்றுக்கொண்டே இருக்கின்றோம். ஆனால் இவை அனைத்திற்கும் ஈடாக நாம் இறைவனுக்கு எதை தரப்போகின்றோம். இதற்கான நல்ல தருணமாக இறைவனோடு பயணிக்க இந்த தவக்காலத்தை பயன்படுத்திக் கொள்வோம். எப்படி வாழ்ந்திருக்க வேண்டுமோ அப்படி வாழ்ந்திருக்க மாட்டோம். எப்படி வாழக்கூடாதோ அப்படியே வாழ்ந்திருப்போம். இதுதான் மனித இயல்பு. சிலர் பிறவியிலே நற்பண்புகள் கொண்டவர்களாக நல்லவர்களாகவே இருக்கின்றார்கள். சிலர் இதற்கு மாறாக இருக்கின்றார்கள். நாளடைவில் சந்தர்ப்பச் சூழ்நிலைகளால் பலர் வாழ்வில் தடுமாறி, தடம்மாறி போகின்றார்கள். ஆக அனைவருக்கும் தேவையாக இருப்பது உளமாற்றம் ஒன்றே.

திருநீறு திருச்சபையின் அருள் கருவிகளுள் ஒன்று. மனவருத்தம், தாழ்ச்சி மற்றும் ஒப்புரவின் அடையாளமாக இது இருக்கின்றது. விபூதிப்புதன் அன்று எமது நெற்றியில் இடப்பட்ட திருநீறு இறை வல்லமை, அநீதி, தவறுகள், உலகப்பற்று, பாவமன்னிப்பு இவற்றை உணர்த்தி நிற்கின்றது. இக்காலத்தில் இறைவனோடும், எம்மோடும், பிறரோடும் உள்ள உறவை புதுப்பித்துக்கொள்வதற்கு இத்தவக்காலம் எம் ஒவ்வொருவரையும் அழைத்து நிற்கின்றது. செபிப்பதனால் இறைவனோடும், ஒறுத்தல் தவத்தால் எம்மோடும், பிறரன்புச் செயல்களால் நம் அயலாரோடும் உறவுகளை புதுப்பித்துக்கொள்கின்றோம். உண்மையான முழுமையான மனநிலையோடு செயற்படும்போதுதான் தவக்காலம் பொருள்தரும். வாழ்க்கை சுவர்க்கமாக மாற வேண்டுமானால் சோதனைகளை சவாலாக ஏற்றுக்கொள்ள வேண்டும். சோதனை-யின்றி துன்பமின்றி எந்தவொரு மனிதனுக்கும் மீட்பு கிடைக்காது. போராட்டத்திற்குட்பட்ட மனிதனே வீரனாக திகழ முடியும்.

இத்தவக்காலத்தின் எமக்கு ஏற்படுகின்ற சோதனை-கள் வேதனைகள் போராட்டங்கள் அனைத்தையுமே தாங்கிக் கொள்ளும் பக்குவமான மனநிலையை எமது குடும்பங்க-ளிலிருந்தே ஆரம்பிப்போம். ஒருவரொருவர் மீது பழி பாவம் சுமத்தாமல் செய்த தவறுகளை நாமே திருத்தி மன்னிப்புப் பெற்று உறவை புதுப்பிப்போம். நாம் எமது குடும்பத்தினருக்காக எத்தனை எத்தனையோ நன்மைகளை செய்திருந்திருந்தும் சிலவேளைகளில் எம்மை தூற்றிவிடுவார்கள். அச்சமயங்களில் நாம் இதையெல்லாம் அவர்களுக்கு செய்தோமே என்று சுட்டிக்காட்டி எமக்குரிய பலனை இழந்துவிடாமலும் அவர்களின் வெறுப்பையும் கோபத்தையும் பன்மடங்காக்கி விடாமலும் எமக்காக துன்புற்ற இயேசுவை ஒருகணம் நினைத்துப்பார்த்து நம்மை நாமே தேற்றிக்கொள்வோம். இதுதான் இத்தவக்காலத்தில் நாம் செய்யும் பெரிய தியாகமாகும். குடும்ப பகையுடன் நாம் திருப்பலி செல்வதும் காணிக்கை தருவதும் திருயாத்திரை செல்வதும் உபவாசமிருப்பதும் எந்த விதத்திலும் பயன் தரப்போவதில்லை. நாம் கடவுளோடு சேர்ந்து நடக்க அவருக்கு இடமளிக்க வேண்டும். அப்போது கடவுள் நம்மைத் தூய்மைப்படுத்தி வழிநடத்துவார். நல்லாயன் ஆண்டில் வாழ்ந்துக்கொண்டிருக்கும் நாம் அவரது மந்தைகளான எம்மை நிச்சயம் நல்வழியில் நடத்திச் செல்வார்.

**இறையாசீருடன் ஆசிரியர்**

# ஆண்டவர் என் ஆயர்



உரோமைப் பேரரசன் வெஸ்பாசியன் பேரவையில் ஒரு சர்ச்சை "கடவு-ளுக்கு என்ன பெயர் வைக்கலாம்?" அனைத்தையும் கடவுள் தனது கட்டுக்குள் வைத்திருப்பதால், அவரை "எல்லாம் வல்லவர்" என்று அழைக்கலாம் என்றார் ஒருவர். தூய்மையே வடிவானவர் என்பதால் "தூயவர்" என்று சொன்னால் என்ன என்றார் இன்னொருவர். இப்படிப் பல யோசனைகளும் மன்னனுக்குத் திருப்தி தரவில்லை. "அன்பின் உறைவிடம் இரக்கத்தின் இருப்பிடம்" என்றால் பொருத்தமாக இருக்குமே என்று மூத்த உறுப்பினர் சொன்னதும், "ஏற்ற பெயர் இதுவே" என்றனர் அனைவரும். கடவுள் அன்பின் உறைவிடம் இரக்கத்தின் இருப்பிடம் என்ற உண்மைக்கு இயேசு தந்த விளக்கம், வெளிப்பாடுதான் "நானே நல்லாயன்" என்பது.

இயேசுவின் வாழ்வும் சாவும் அவர் தன் ஆடுகளுக்காக உயிரையும் இழக்கத் துணியும் நல்லாயன் என்பதற்குக் கட்டியம் கூறவில்லையா?

நல்லாயன் மடியில் ஓர் ஆடு. சுற்றிலும் பல ஆடுகள் மேய்ந்து கொண்டிருக்கின்றன. இப்படி ஒரு படத்தைப் பார்த்ததும், இயேசுவின் மடியில் இருக்கும் ஆடு எவ்வளவு கொடுத்து வைத்தது என்று நினைக்கத் தோன்றுகிறதா? அது சிறந்த ஆடு என்பதால் அன்று, அது நோயுற்றது, பலவீனமானது, துன்புறுவது என்ற காரணத்தால் இயேசு தன் மடியில் தூக்கி வைத்திருக்கிறார். நீ முக்கியமானவன் என்பதால் கடவுள் உன்னை அன்பு செய்யவில்லை, கடவுள் அன்பு செய்வதால் நீ முக்கியமானவன். இப்போது புரிகிறதா நூறு ஆடுகளில் ஒன்று காணாமற் போனால் அதனைக் கண்டு மகிழும் ஆயனின் மனநிலை?

இயேசு வெறும் ஆயனல்ல, நல்லாயன். இந்த நன்மைத்தனம் வெளிப்படும் மூன்று வடிவங்கள்.

**1. அறிந்து அன்பு செய்யும் நெருக்கம்**

தானும் தந்தையும் ஒருவர் ஒருவரை அறிந்திருப்பது போல் என்கிறார் இயேசு (யோவா 10:14). விவிலியத்தில் அறிதல் என்பது உறவு கொள்ளுதல், அன்பு செய்தல், சொந்தமாகுதல் என்றல்லவா பொருள்படும்! ஆயன் கையில் உள்ள "கோலும் நெடுங்கழியும்" (தி.பா 23:4) கூட நட்பின் சின்னம்தான்.

**நீ முக்கியமானவன் என்பதால்**
**கடவுள் உன்னை அன்பு செய்யவில்லை,**
**கடவுள் அன்பு செய்வதால்**
**நீ முக்கியமானவன்.**

**2. தன்னையே கையளிக்கும் தியாகம்**

"எனது ஆடுகளுக்காக எனது உயிரைக் கொடுக்கின்றேன்" (யோவா 10:15) தன்னையே பலியாக்குபவர், தன்னையே நமக்காக உணவாக்குபவர் அன்றோ இயேசு! "சிங்கக் குட்டிகள் உணவின்றிப் பட்டினி இருக்க நேரிட்டாலும், ஆண்டவரை நாடுவோர்க்கு நன்மை ஏதும் குறையாது" (தி.பா 34:10)

**3. ஒன்றிப்புக்காக அணையாத் தாகம்**

"இக்கொட்டிலைச் சேரா வேறு ஆடுகளும் எனக்கு உள்ளன" (யோவா 10:16) ஒரே மந்தையும் ஒரே ஆயனும் என்னும் நிலைவேண்டும். இயேசுவையே கூறுபோடுவதுபோல் எத்தனை பிளவுபட்ட பிரிவினைச் சபைகள்!

நல்லாயனின் முக்கியமான பண்பும் பணியும் வாழ்வு தருவதாகும். நிறைவாழ்வு மட்டுமல்ல நிலைவாழ்வு தருவதாக வாக்களிக்கிறார் இயேசு. "நான் அவற்றிற்கு நிலை வாழ்வை அளிக்கின்றேன். அவை என்றுமே அழியா" (யோவா 10:28)

"கடவுள் நமக்கு நிலை வாழ்வை அளித்துள்ளார். இந்த வாழ்வு அவர் மகனிடம் இருக்கிறது" (1யோவா 5:11) "உண்மையான ஒரே கடவுளாகிய உம்மையும் நீர் அனுப்பிய இயேசுக்கிறிஸ்துவையும் அறிவதே நிலைவாழ்வு" (யோவா 17:3)

இதை அறிந்து கொள்ளுதலில் நான்கு நிலைகள் அல்லது படிகள் உள்ளன.

**1. நிலைவாழ்வு பெற முதல் தேவை – இயேசுவின் மீது ஆழந்த நம்பிக்கை**

"தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்கு கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார். (யோவா 3:16)

**2. நிலைவாழ்வு பெற இரண்டாவது தேவை – இயேசுவின் வார்த்தைகளைக் கேட்பது, ஏற்பது**

"ஆண்டவரே நாங்கள் யாரிடம் போவோம்? நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடம்தானே உள்ளன" (யோவா 6:68). "கடவுளின் வார்த்தையை உங்களுக்குத் தான் முதலில் அறிவிக்க வேண்டியிருந்தது. ஆனால் நீங்கள் அதனை உதறித் தள்ளி நிலை வாழ்வுக்குத்...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

# உண்மை உறைக்கும்

கமிலஸ்





# விபூதிப் புதன்



“மனிதா நீ மண்ணே, மண்ணுக்கே திரும்புவாய் மறவாதே” வெளுத்த நீல வானம் மழை பெய்யும்முன் கருமுகிலைக் கூட்டி மழைவரும் அறிகுறியைக் காட்டுவதைப் போல் தவக்காலம் வந்து விட்டது, மனம் மாற்றம் பெறும் வாய்ப்பு கிடைக்க தக்க தருணம் இதுவே எனக்குறித்து நிற்பது விபூதிப் புதன். இத்திருநாள் திகதி மாறிவரினும் கிழமை மாறுவதில்லை. தவக்காலம் விரதம் அல்லது நோன்பு இருக்கும் காலம். மனமாற்றம் அடையும் காலம். ஒப்புரவு அடையும் காலம் என்பதில் முன் அடையாளமாக விபூதிப்புதனின் முந்திய நாளாகிய செவ்வாய்க்கிழமையை பாவம் கழியும் நாளென்றும் அதனால் அதனை விடுமுறை நாளாகவும் பேணிக்கொண்டாடுவது சில ஐரோப்பிய நாடுகளின் சம்பிரதாயமாக விளங்குகிறது.

தவக்காலத்தின் ஆரம்ப நாள் சாம்பல் நாளென்று, எட்டாம் நூற்றாண்டு முதல் திருச்சபையில் அழைக்கப்பட்டு வருகிறது. சாம்பல் சோகத்தை, மனத்தாக்கத்தை வெளிப்படுத்தும் அடையாளப் பொருளாக பழங்காலம் தொட்டு இன்றுவரை கருதப்பட்டு வருகிறது. தவறை உணர்ந்த வேளைகளில் பாவமன்னிப்பிற்காக யூதமக்கள் சாம்பல் பூசி, கோணியுடுத்தி, தம்மை துன்புறுத்தி மன்னிப்பு கேட்டு, இறை வேண்டல் செய்த சம்பவங்கள் விவிலியத்தில் பழைய ஏற்பாட்டு புத்தகத்தில் நிறையக் காணப்படுகின்றன.

லென்ட் (Lent) என்ற ஆங்கில வார்த்தை ஜெர்மனிய மொழியிலிருந்து எடுக்கப்பட்டது. இதன் கருத்து வசந்த காலமாகும். இந்த வசந்த காலத்தில் கிறிஸ்தவர்கள் மனமாற்றம் பெறவும், வளர்ந்தோர் திருமுழுக்கு, ஒப்புரவு, தேவநற்கருணை, உறுதிப்பூசுதல் போன்ற அருட்சாதனங்களைப் பெற்றுக்கொள்ளவும் தங்களை ஆயத்தம் செய்துகொள்வர். இப்பருவ காலத்தில் ஞான ஒடுக்கம் செய்தல், மறைபோதகங்களுக்குச் செவிமடுத்தல், ஒறுத்தல் முயற்சிகள் போன்ற பலதரப்பட்ட நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன. நாற்பது நாட்கள் தவக்கால நிறைவுடன் கொண்டாட இருக்கின்ற அதிமுக்கிய விழாவாகிய உயிர்த்த ஞாயிறு, 325ம் ஆண்டில் நிசேயா சங்கத்தில் வெளிவந்த ஓர் உள்ளடக்கம் QUADRAGESIMA, குவாட்ரகசிமா என்று அழைக்கப்பட்ட நாற்பது நாள் தவக்காலம் என்ற விசேஷ அமைப்பு, மோசே, எலியா, ஆண்டவர் இயேசுக்கிறிஸ்து அனுசரித்த 40 நாள் உபவாச நோன்பைக் குறிப்பதாக அமைகிறது.

விபூதிப் புதனன்று ஆரம்பமாகும் தவக்காலம் அல்லேலூயா சனிக்கிழமை இரவுடன் நிறைவு பெறுவதை நாமறிவோம். இவ்வழக்கம் உரோமையரால் 7ம் நூற்றாண்டு முதல் இன்று வரை நம் தவக்கால செயல்பாடாக இருந்து வருகிறது. தவக்கால நோன்பு அனுசரிக்கும் விதம் பலவாறு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விசுவாசிகள் ஒரு நாளுக்கு ஒரு முறை மாத்திரம் உணவு உட்கொண்டனர். சிலர் உலர்ந்த ரொட்டியை ஒருவேளை உணவாக மாலை வேளையில் பெற்றுக் கொண்டனர். தவக்காலத்தில் பொதுவாக, மாமிசம், மதுபானம் முற்றிலும் தவிர்க்கப்படுவது முழுமையான நோன்பின் அனுஷ்டானமென கருதுகின்றனர். புனித மகா கிரகோரியாரின் காலம் தொடக்கம், 540ம் ஆண்டு தொடக்கம் 604ம் ஆண்டு வரை 19ம் நூற்றாண்டு வரை பால், வெண்ணெய், பாற்கட்டி, முட்டை போன்ற சத்தான உணவு பண்டங்கள், அனுபவிக்கும் உரிமை துறவியருக்கு தடை செய்யப்பட்டிருந்தது. மகா. கிரகோரியார் 600ம் ஆண்டு காலத்தில் தவக்காலத்தின் முதல் நாள் விபூதிப்புதன் எனவும் மிகுதி நாட்களை ஆறு பாவப்பரிகார வாரங்களாகவும் தவக்காலத்தை அமைத்தார். 800ம் ஆண்டளவில் விபூதிப்புதனை சமூகப் பாவிகள் என அடையாளம் காணப்பட்டவர்களுக்காக நடத்தப்படும் வழிபாடாக சில ஐரோப்பிய ஆலயங்களில் மேற்கொண்டனர்.

11ம் நூற்றாண்டு காலப்பகுதியில் கத்தோலிக்க திருச்சபையின் அனைத்து உறுப்பினர்களின் மனமாற்ற காலமாகவும், பாவப் பரிகார காலமாகவும் அனுசரிக்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் விபூதிப் புதனன்று முன்னைய ஆண்டில் குருத்தோலை ஞாயிறு விழாவில் இறை இயேசுவின் இறுதி எருசலேம் நகர விஜயத்தையும் இயேசு மனுக்குலத்தின் மீட்பிற்காக கையளிக்கச் சித்தமான நாட்களையும் அடையாளப்படுத்தும் முகமாக வழங்கப்பட்ட ஓலை மற்றும் இலைகளை எரித்து அதன் சாம்பலை விபூதியாக ஆலயக் குரு நம்நெற்றியில் சிலுவை அடையாளம் இட்டு கூறுவதை நாம் நன்கு அறிவோம். “மனிதா நீ மண்ணே, மண்ணுக்கே திரும்புவாய் மறவாதே” என்று கூறும் இறைவாக்கை நாம் மனதில் நிறுத்துவோம். மேலும் “பாவத்திலிருந்து மனம் திரும்பி, நற்செய்தியை நம்பு” என்ற இறை வார்த்தைகள் நம் சிந்தனையை எழுப்பி மனமாற்றம் பெற வழியமைக்கிறது.

விசுவாசிகளின் மனமாற்றத்தின் அவசியத்தை நினைவு கூறும் ஓர் அடையாளமாக விபூதி விளங்குகிறது. மேலும் விபூதி, உலக வாழ்வு நிலையற்றது, கிறிஸ்துவ விசுவாசமே இறைதந்தையோடு நிலையான வாழ்வில் இணைக்கிறது என்ற மறையுண்மையையும் நமக்கு உணர்த்துகிறது.

விபூதிப் புதனின் முன்தினமாகிய செய்வாயன்று முட்டை பெருநாள் என்று பெயர்சூட்டி கிறிஸ்தவர்களாகிய நம்மில் (இலங்கையில்) சிலர் விலை கொடுத்து சத்தான உணவாகிய முட்டைகளை வாங்கி உறவு முறையானவர்களின் தலையில் அடித்து உடைத்து, அசிங்கப்படுத்தி, பகிடி விழாவாக கொண்டாடுகின்றனர். இப்பழக்கம் இன்று பலதரப்பட்டவர்கள் கலந்துகொள்ளும் போது மூட விழாவாக மாறிக்கொண்டு வருகிறது. “முட்டைப் பெருநாள் என்று கிறிஸ்தவர்கள் ஆரம்பித்த நிகழ்வு இன்று சாதி, மத பேதமின்றி பகிடி விழாவாக நம் மறையைக் கொச்சைப்படுத்தும் அவல விழாவாக மாறிக்கொண்டிருப்பது கவலைக்குரியதே.

எனவே விபூதிப் புதனின் ஆரம்பம், எம்மை நாமே மாற்றிக் கொள்ள நாம் செய்து கொண்ட பாவங்களுக்குப் பரிகாரம் செய்துகொள்ள எம்மை வழிநடத்தும் அர்த்தமுள்ள ஆரம்பமாக அமைத்துக் கொள்வோம்.

**சந்தியாகு ஞானப்பிரகாசம்**

**இராஜகிரிய**






# அருளின் காலம்

## இதுவா தவக்காலத் தயாரிப்பு?

வாங்கி வந்த பாத்திரங்களும், தட்டுகளும், டம்ளர்களும் அவர்களை கேலியாக பார்த்தன.

மறு நாள் திருநீற்றுப் புதன் செவ்வாய் அன்று வீடு வாசல் கழுவியாயிற்று. நாளை முதல் அசைவம் சமைக்கப் போவதில்லை. எனவே ஒரு செட் புதிய சமையல் பாத்திரமும், வீட்டிலுள்ள தட்டுகளுக்குப் பதில் காகித தட்டுகள், டம்ளர்கள் வந்து இறங்கிவிட்டன. தவக்காலத்தை வரவேற்க எல்லாம் ரெடி அந்த பாரம்பரிய கத்தோலிக்க குடும்பத்தில். அப்போது பாடசாலையில் இருந்து வந்த மகன் கடைவீதியில் தன் அத்தையைப் பார்த்ததாக கூறினான். அத்தை வீட்டாரும், இக்குடும்பமும் பல வருடங்களாக கதைப்பதில்லை. குடும்ப தொடர்பற்று ஒருவரை ஒருவர் பார்க்காமல் பழகாமல் இருந்தார்கள். அத்தை, அவனிடம் வந்து நலம் விசாரித்து சொக்கலேட்டுக்களை வாங்கித் தந்து “ஏண்டா இப்படியே கதைக்காமல் இருந்துவிடுவீர்களா? உறவுகளே இல்லாமல் வாழ முடியுமா” என்று அழுதுக்கொண்டு கேட்டதாக அம்மாவிடம் கூறினான். தலையில் நறுக்கென்று ஒரு குட்டுவிழுந்தது அவனுக்கு. சொக்கலேட் வாங்கித் தந்து சின்னப்பிள்ளையை மயக்கி உறவாட வாறாளா? இனிமே அவளைப் பார்த்தா ஓடிவந்திடனும். ஈஸ்டர் முடியட்டும் வச்சிக்கிறேன் கச்சேரியை என்றாள் அம்மா.

**உங்கள் வீடுகளில் எப்படி?**



31

# அமைதிக்கு ஓர் அன்னை
# புனித அன்னை திரேசா



## பிறருக்கு பகிர்ந்து கொடுப்பதில் இன்பம் கண்ட அன்னை அமரத்துவம் அடைந்தார்

1997 புரட்டாதி 5ம் நாள் வெள்ளிக்கிழமை காலையிலிருந்து அன்னைக்கு உடல்நிலை சரியில்லை. நெஞ்சுவலி எடுப்பதாகக் கூறினார். வழக்கமாக அவரைக் கவனித்து வந்த மருத்துவர் ஹசீம் பர்தன் வரவழைக்கப்பட்டார். இதய இயல் நிபுனர் ஆல்ஃப்ரட் உட்வார்டு அவர்களும் வந்து அன்னையைப் பரிசோதித்துப் பார்த்தார். அன்னையின் இதயம் மிகவும் பலவீனமாக இருந்தது. இரவு சுமார் 8.00 மணி இருக்கும் "என்னால் மூச்சுவிட முடியவில்லை" என்றார் அன்னை. இவைதான் அன்னையின் இறுதி வார்த்தைகள். 8.30 மணி அளவில் அன்னை தம் இன்னுயிரை பரமன் கரங்களில் ஒப்படைத்துவிட்டார். அன்னை அமரராகி விட்டார்.

முதுமையினாலும் இதயக் கோளாறினாலும் அவதிப்பட்டிருந்த அன்னை சபையின் தலைமைப் பொறுப்பை 1997 பங்குனி 13ம் நாளிலேயே மாற்றுக் கரங்களில் ஒப்படைத்திருந்தார். தற்போது அப்பொறுப்பை ஏற்றிருப்பவர் 63 வயதுடைய சகோதரி நிர்மலா.

அன்னை காலமானார் என்னும் துயரச் செய்தியைக் கேட்ட கல்கத்தா மாநகர் மக்கள் கூட்டம் கூட்டமாகத் தாய் மடம் நோக்கி வரத்தொடங்கினர். அதற்குள் அன்னையின் உடலைத் தாய்மடத்தின் அருகிலுள்ள புனித தோமையார் தேவாலயத்தில் மக்கள் பார்வைக்காக வைத்திருந்தனர். புரட்டாதி 10ம் நாள் அன்னையின் வாழ்வில் ஒரு முக்கியமான நாள். 51 ஆண்டுகளுக்கு முன் அதே நாளில்தான் அன்னையின் வாழ்வில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. அதை "இறை ஏவுதல் நாள்" என அவர் குறிப்பிட்டுள்ளார். ஆகவே புரட்டாதி 10ம் நாளில் அவருடைய உடலை நல்லடக்கம் செய்வதென முடிவு எடுத்திருந்தனர் சபைச் சகோதரிகள். ஆனால் அது நடைபெறவில்லை. மத்திய அரசு எடுத்துக் கொண்ட முடிவுப்படி அன்னைக்கு அரச மரியாதையுடன் 13ம் நாள் நல்லடக்கம் செய்யப்போவதாக அரசினர் அறிவித்தனர். எனவே 13ம் திகதி வரை அன்னையின் உடல் புனித தோமையார் தேவாலயத்திலேயே வைக்கப்பட்டிருந்தது.

"கர்மயோகி" என்னும் தம் நூலில் திருமதி. ராணி சேவியர் குறிப்பிட்டிருப்பது போல "இயேசு பெருமானின் மலைபொழிவினை அரசியல் தளத்தில் செயல்படுத்தியவர் காந்தியடிகள், அதனைச் சமுதாய தளத்தில் செயல்படுத்தியவர் அன்னை தெரசா. அன்னை பிறப்பால் ஓர் இந்தியர் அல்லர். ஆயினும் அவர் இறந்த மறுநாள் 06.09.1997 சனிக்கிழமையன்று இந்திய நாட்டின் எல்லைக்குட்பட்ட மாநிலமனைத்திலும் இந்திய தேசியக் கொடிகள் அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டு இந்திய மண்ணின் பேரிழப்பு அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

அன்னை ஒரு புகழ்மிகு அரசியல்வாதியல்லர். ஆயினும் அவர் மறைந்துவிட்ட நிகழ்வினை இந்திய அரசு தனது கடந்தகால மரபுகள் அனைத்தையும் மீறி கறுப்புக் கோடிட்ட செய்தியாக அரசாங்க ஜெகட் மூலம் வெளியிட்டது. அன்னை ஓர் அரசியல் மேதையுமல்லர், உயர்நிலை அரசு அதிகாரியுமல்லர். ஆயினும் அவர் பூதவுடல் இந்திய தேசியக் கொடியால் மூடப்பட்டு 48 மணி நேரம் முப்படையினரால் பாதுகாக்கப்பட்டு இராணுவ பீரங்கி வண்டியில் ஏற்றப்பட்டு இந்திய அரசின் சகல இராணுவ மரியாதைகளுடனும் அடக்கம் செய்யப்பட்டது.

**தொடரும்**

தொகுப்பு
**அருட்சகோதரர் R. ஜோசப் ஜெயகாந்தன்**

# நோன்பிருப்பது எப்படி?
## தவக்கால சிந்தனை



பிறருக்குத் தீர்ப்பிடுவதைத் தவிருங்கள்
அவர்களில் வாசம் செய்யும் இயேசுவில் மகிழுங்கள்

வெளிப்படையான இருளைத் தவிருங்கள்
உண்மை ஒளியில் மகிழுங்கள்

தோல்வி மனப்பான்மையைத் தவிருங்கள்
நல்லார்வ நலத்தில் மகிழுங்கள்

நோய்பற்றிய சிந்தனைகளைத் தவிருங்கள்
இறைவனது குணமாக்கும் வல்லமையில் மகிழுங்கள்

மாசுபடுத்தும் வார்த்தைகளைத் தவிருங்கள்
தூய்மையாக்கும் வார்த்தைகளில் மகிழுங்கள்

கோபத்தைத் தவிருங்கள்
பொறுமையில் மகிழுங்கள்

கவலையைத் தவிருங்கள்
இறைவனது பராமரிப்பில் மகிழுங்கள்

தணியாத அழுத்தத்தைத் தவிருங்கள்
இடைவிடாத செபத்தில் மகிழுங்கள்

எதிர்மறைகளைத் தவிருங்கள்
உடன்பாடுகளில் மகிழுங்கள்

முறைப்பாடுகளைத் தவிருங்கள்
பாராட்டுக்களில் மகிழுங்கள்

எதிர்புணர்ச்சியைத் தவிருங்கள்
சமரசத்தில் மகிழுங்கள்

கசப்புணர்ச்சியைத் தவிருங்கள்
மன்னிப்பில் மகிழுங்கள்

மனக்கவலையைத் தவிருங்கள்
நம்பிக்கையில் மகிழுங்கள்

"நான்" என்பதைத் தவிருங்கள்
மௌனமாக இதயத்தில் மகிழுங்கள்

அருட்பணி. றெகிஸ் இராஜநாயகம்

# நோன்பிருப்பதற்கு 20 காரணங்கள்

1. உடலையும் உயிரையும் ஆன்மாவையும் சுத்தப்படுத்தித் தூய்மையாக்க
2. இறைவனது வழிகாட்டுதலையும் வெளிப்பாட்டையும் பெற்றுக் கொள்ள
3. இறைவனது திருமுகத்தை நாடி அவரோடு இன்னும் நெருங்கிய உறவு கொள்ளும் படியாக.
4. இறைவனது குரலை நன்கு செவிமடுத்து அவரது திருவுளத்தை இன்னும் நன்றாக அறிந்து கொள்ளும் படியாக
5. இறைவனின் வல்லமை உங்களூடாக ஆற்றலுடன் பாய்ந்து செல்ல வேண்டும் படியாக.
6. ஆன்மீக வலிமையும் மேலாட்சியுமுடைய நிலையை ஏற்படுத்துவதற்காக.
7. உங்களுக்குள் இருக்கும் எந்த அடிமைத்தனத்தையும் தகர்ப்பதற்காக.
8. மனத் தெளிவைப் பெறுவதற்காக.
9. தீங்கான அல்லது தளர்ச்சி தரும் எண்ணங்களிலிருந்து விடுபடுவதற்காக
10. மனச்சோர்வை மேற்கொள்வதற்காக.
11. உங்கள் வாழ்வில் அலகையின் வலிமையைக் குன்றச் செய்வதற்காக.
12. வாழ்வு கைம்மீறிச் செல்வதுபோல் தோன்றும் போது சமநிலையை ஏற்படுத்துவதற்காக.
13. உடலிலும் ஆன்மாவிலும் வலுப்பெறுவதற்காக
14. எதன்மீதும் உடல் கொள்ளும் இச்சையை முறியடிப்பதற்காக

15



# மனம் மாறுவோம் மன்னிப்பும் பெறுவோம்

> "இதோ தீவினையோடு என் வாழ்வைத் தொடங்கினேன். பாவத்தோடே என் அன்னை என்னைக் கருத்தாங்கினாள்" (51:5).

இரக்கத்தின் திருப்பாடல்களில் சிறப்பிடம் பெறும் ஒன்று 51ம் திருப்பாடல். அதைப் பார்த்தவுடனே பின்வரும் செய்திகளைத் தெரிந்துகொள்கிறோம். "பாவ மன்னிப்புக்காக மன்றாடல்" என்று தலைப்பிடப்பட்டிருக்கிறது திருப்பாடல் 51.

மேலும், "பாடகர் தலைவர்க்கு : தாவீதின் புகழ்ப்பா" என்றும், "தாவீது பத்சேபாவிடம் முறைதவறி நடந்தபின் இறைவாக்கினர் நாத்தான் அவரிடம் வந்தபோது அவர் பாடியது" என்றும் தலைப்புக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தன் பாவங்களுக்காக மனம் வருந்தி, இறைவனிடம் உருக்கமாக மன்றாடிய தாவீது என்னும் இறையடியாரின் அனுபவம் இந்தத் திருப்பாடல் என்பதை அறிந்து கொள்கிறோம்.

திருப்பாடல் 51க்கு இரண்டு சிறப்புக்கள் இருக்கின்றன. இறைவனின் பார்வையில் அது ஓர் இரக்கத்தின் திருப்பாடல். மானிடரின் பார்வையில் அது ஒரு மனத்துயர் திருப்பாடல். வேறொரு வகையில் சொல்வதென்றால், இறைவனின் இரக்கத்தை எண்ணி மகிழவும், நன்றி செலுத்தவும், இறைவனைப் புகழவும் இதைப் பயன்படுத்தலாம். இறைவனிடம் மனம் வருந்தி, மன்னிப்புக் கேட்கவும் இத்திருப்பாடலைப் பயன்படுத்தலாம்.

இறைவன் "பேரன்பு மிக்கவர்", "அளவற்ற இரக்கம் உடையவர்" என்றே தொடங்குகிறது இத்திருப்பாடல் (51:1). மேலும், அவர் "நீதியுள்ளவர்", "தண்டனைத் தீர்ப்பில் மாசற்றவர்" (51:4) என்றும், "நொறுங்கிய குற்றமுணர்ந்த உள்ளத்தை நீர் அவமதிப்பதில்லை" (51:17) என்றும் இறைவனின் மேன்மையான இயல்புகளை எடுத்துரைக்கிறது இத்திருப்பாடல். இவ்வரிகளைப் பயன்படுத்தி இறைவனைப் போற்றலாம்.

"எனக்கு இரங்கும்", "என் குற்றங்களைத் துடைத்தருளும்", "என்னைக் கழுவியருளும்", "என்னைத் தூய்மைப்படுத்தியருளும்" (51:1-2) என்னும் சொல்லாடல்களும், "என்னைக் கழுவியருளும், நான் தூய்மையாவேன்" (51:7) என்பவையும் இறைவனின் மன்னிப்பைக் கோருகின்றன. இவற்றைப் பயன்படுத்தி இறைவனின் இரக்கத்தை வேண்டலாம். திருவிவிலிய அறிஞர்கள் இத்திருப்பாடலை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கின்றனர்.

### 51:1-9 பாவ அறிக்கையும், மன்னிப்புக் கோரலும்

திருப்பாடலின் இந்த முதற்பகுதியே அதன் இதயம்போல் அமைகின்றது. மனந்திரும்புதலுக்கானப் பாடங்களை இதில் நாம் கற்றுக்கொள்கிறோம்.

**1. பாவத்தை உணர்தல்**

"என் குற்றங்களை நான் உணர்கின்றேன். என் பாவம் எப்போதும் என் மனக் கண்முண் நிற்கின்றது" (51:3).

**2. பாவ நிலையை ஏற்றுக்கொள்தல்**

"இதோ தீவினையோடு என் வாழ்வைத் தொடங்கினேன். பாவத்தோடே என் அன்னை என்னைக் கருத்தாங்கினாள்" (51:5). மானிடர் அனைவருமே சென்மப் பாவத்தோடு பிறக்கின்றனர் என்னும் இறையியல் உண்மையையும், நம்மில் பாவம் இல்லாதவர் எவருமே இலர் (1 யோவா 1:8,10), நாம் அனைவருமே பாவம் செய்து கடவுள் கொடுத்த மேன்மையை இழந்திருக்கிறோம் (உரோ 3:23) என்னும் அனுபவ உணர்வையும் வெளிப்படுத்த வேண்டும்.

**3. பாவத்தை அறிக்கையிடுதல்**

"உமக்கு எதிராக நான் பாவம் செய்தேன். உம் பார்வையில் தீயது செய்தேன்" (51:4) என்று இறைவனிடமும், ஒப்புரவு அருளடையாளத்தில் அருள்பணியாளரிடமும், உறவுகளில் நாம் காயப்படுத்தியவரிடமும் அறிக்கையிடவேண்டும்.

**4. மன்னிப்பு கோரல்**

"கடவுளே, எனக்கு இரங்கும்", "என்னைக் கழுவியருளும்" போன்ற வேண்டுதல்கள் வழி இறைவனின் மன்னிப்பைக் கோர வேண்டும். நாம் ஒப்புரவு அருளடையாளத்தில் பங்குபெறும்போதும், இதர நேரங்களில் இறைவனின் மன்னிப்புக்காக மன்றாடும்போது இந்த நான்கு படிகளையும் மனதில் கொள்வோம்.

### 51:10-19 இறைவனோடு புதிய உறவு வேண்டி மன்றாடல்

திருப்பாடலின் இந்த இரண்டாம் பகுதி உறவைச் சீர்படுத்தும் உத்தியை நமக்குக் கற்றுத் தருகின்றது.

**1. தூய ஆவியாருக்காக மன்றாடுதல்**

பாவத்தின் தீய விளைவுகளுள் ஒன்று இறைவனின் அருளையும், தூய ஆவியாரையும் இழத்தல். எனவே, இறைவனின் மன்னிப்பை வேண்டுவதோடு, "உமது தூய ஆவியை என்னிடமிருந்து எடுத்துவிடாதேயும்" (51:11) என்றும், "உறுதி தரும் ஆவியை, புதுப்பிக்கும் ஆவியை, என்னுள்ளே உருவாக்கியருளும்" (51:10) என்றும் மன்றாடுகிறார் இறையடியார்.

**2. மகிழ்ச்சிக்காக மன்றாட்டு**

"உம் மீட்பின் மகிழ்ச்சியை மீண்டும் எனக்குத் தந்தருளும்" (51:12)

**3. இறைப்புகழ்ச்சி**

"என் இதழ்களைத் திறந்தருளும். அப்பொழுது என் வாய் உமக்குப் புகழ் சாற்றிடும்" (51:15)

மனம் வருந்தும் ஓர் உள்ளம் இறைவனிடம் மீண்டும் ஒப்புரவு கொள்வதற்கான அருமையான மன்றாட்டாக அமைந்துள்ளது இத்திருப்பாடல். இத்திருப்பாடலை மனப்பாடம் செய்வோம். அடிக்கடி செபிப்போம், வாழ்வாக்குவோம்.



# ஆன்மீகம்

இன்று இளம் சமுதாயம் இறை விசுவாசம் இல்லாமல் வாழ்வதைக் காணக் கூடியதாக உள்ளது. பெரியவர்கள் எமது விசுவாசத்தை இளம் சந்ததிக்குக் கடத்தியுள்ளோமா? அவர்கள் எமது வாழ்வைப் பார்க்கிறார்கள். நாம் சொல்வது ஒன்று செய்வது ஒன்றென அவர்கள் நினைக்கிறார்கள்.

பொதுவாக மக்கள் ஆன்மீகம் என்று எதை நினைக்கிறார்கள்? வழிபாடுகளும் சடங்குகளுமே ஆன்மீகம் என நினைக்கின்றனர். விரதம் இருத்தல், செபமாலை சொல்லுதல், பூசைக்குச் செல்லுதல், நவநாட்கள் செய்தல், யாத்திரை போதல் போன்றவற்றையே ஆன்மீகம் எனப் பலர் நினைக்கிறார்கள். இவைகள் ஆன்மீகம் அல்ல. ஆன்மீக வளர்ச்சிக்கு இவைகள் உதவுகின்றன எனலாம்.

திருமண வாழ்வு நாளுக்கு நாள் பெலவீனமாவதைக் காண முடிகிறது. விவாகரத்துக்கள் அதிகரிக்கின்றன. மனித உறவுகள் சீர்குலைந்து செல்கின்றன. குழுவாகச் செயற்படுகின்ற நிலை மாறி தனது வளர்ச்சி முன்னேற்றத்தையே ஒவ்வொருவரும் எண்ணுகின்றனர். பணத்துக்கு முதலிடம் கொடுப்பது. உறவுக்கு அல்ல. எங்கும் எதிலும் போட்டி மனப்பான்மை வளர்கிறது. மற்றவர்களைத் தனது தேவைக்காகப் பயன்படுத்திவிட்டு ஒதுக்குகின்ற நிலை வளர்கின்றது. இறைவனைச் சந்தோசப் படுத்தாமல் மக்கள் என்ன நினைப்பார்கள் என்றே எப்போதும் நினைக்கின்றனர்.

இதனால் மனிதன் மன அழுத்தம், மனப்பதட்டம் போன்றவற்றிற்கு அடிமையாகி நிம்மதி இழந்து அலைகின்றான். மாணவர்கள் பலர் புகைத்தல், போதைக்கு அடிமையாகிப் பிழையான பாதையில் செல்கின்றனர். கைத் தொலைபேசிக்கு அடிமையாகி அது இல்லையேல் வாழ்வு இல்லை என்ற நிலைக்கு வந்து விட்டார்கள். இதனால் பல பக்க விழைவுகளை அனுபவிக்கின்றனர். நோயாளிகளாகவே சிறு வயதிலிருந்து நடமாடுகின்றனர்.

பெற்றோருக்குப் பிள்ளை வளர்ப்புப் பற்றிய அறிவு இல்லை. கணவன் மனைவிக்கு இடையில் ஆழமான உறவு இல்லை. பொருட்கள் பட்டம் பதவி சொத்து புகழ் சேர்ப்பதிலேயே அதிகமான நேரத்தைச் செலவிடுகின்றனர்.

நாட்டிலே மிகவும் முக்கியமான பிரச்சினையாக ஆன்மீகம் இல்லாத நிலையே தலைவிரித்தாடுகின்றது. ஆன்மீகம் என்பது என்ன? அறிவோடும் சுதந்திரத்தோடும் அன்பு செய்கின்ற நிலையே ஆன்மீகமாகும். ஒருவரில் ஆன்மீக வளர்ச்சி இருப்பதைக் கண்டு பிடிப்பது எப்படி?



# குடும்பம் பெற்றோர் பிள்ளை உறவு

150


1. அன்பு செய்கின்ற ஆற்றல் இருக்க வேண்டும்.
2. மன்னித்து மறக்கப் பழக வேண்டும்.
3. நீதி நேர்மையோடு வாழப் பழக வேண்டும்.
4. அவசியமானதை மட்டும் பாவித்து எளிமை வாழ்வு வாழ்தல் வேண்டும்.
5. இருப்பவர்கள் தம்மிடம் உள்ளதை இல்லாதவர்களோடு பகிர்ந்து வாழ வேண்டும்.
6. சமத்துவம் பேண வேண்டும். சாதி வேற்றுமை பிரதேச வேற்றுமை பாராது அனைவரும் இறைவனது பிள்ளைகள் என்ற மன நிலை உருவாதல் வேண்டும்.

இவற்றை வளர்ப்பதற்கே வழிபாடுகளும் பக்தி முயற்சிகளும் சடங்குகளும் தேவை. ஆனால் இன்று மேற்கூறிய ஆறும் இல்லாது வெறும் பக்தி முயற்சிகளும் சடங்குகளும் வழிபாடுகளுமே இடம்பெறுகின்றன.

எம்மில் மாற்றம் தேவை. இறை வார்த்தையின் படி வாழ வேண்டும். இறைவனது விருப்பப்படி வாழப் பழக வேண்டும். அப்படி வாழ்ந்தால் விவாகரத்துக் குறையும். நோய் குறையும். ஒற்றுமை நிலவும் மகிழ்ச்சி ஒற்றுமை ஏற்படும்.

தொடரும்

பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா
உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம்.



## இறைவாக்கைக் கேட்பதால் திருச்சபை கட்டியமைக்கப்படுகிறது

# இறைவார்த்தை வழிபாடு

## பேதுரு

### தவக்காலத்தின் 1வது ஞாயிறு (18.02.2018)

**வாசக விளக்கம்:** எமது வாழ்வை மாற்றியமைக்கும் தவக்காலத்தின் முதல் வாரத்தில் கால்பதிக்கும் இறை நெஞ்சங்களே! சோதனைகள் நிறைந்த நமது மனித வாழ்வை சாதனைகள் நிறைந்த வாழ்வாக மாற்ற இன்றைய நற்செய்தி வழிகாட்டுகின்றது. சோதனைகளை வெற்றி கொண்ட இயேசு நாமும் வெற்றி பெற வழிகாட்டுகின்றார். முதல் வாசகத்தில் நோவாவின் தூய மனதைப் பார்க்கின்றோம். இரண்டாம் வாசகத்தில் தூய பவுல் அடியார் கிறிஸ்தவர்கள் வேதனையை மகிழ்ச்சியோடு ஏற்று அனுபவிக்க வேண்டும். அப்போது கடவுள் அவர்களோடு இணைந்து நட்புறவு கொள்கிறார். அவர்களை உயர்த்துகிறார் எனக் கூறுகின்றார். சோதனைகளைக் கண்டு நாம் சோர்ந்துபோகக்கூடாது. முள் நிறைந்த செடியில் தான் அழகிய ரோஜா புன்னகையுடன் மலர்கின்றது. சோதனை நிறைந்த வாழ்வில் தான் இறையருள் இடைவிடாமல் ஒளிர்கின்றது. சோதனைகளையும் வேதனைகளையும் கடந்து வந்தவர்கள்தான் வரலாற்று நாயகர்களாகவும், மகான்களாகவும் உயர்ந்துள்ளார்கள். நாமும் சோதனைகளை வெல்ல செபத்தில் நிலைத்து இறைவார்த்தையை வாழ்வாக்க வேண்டும். இதற்கு வேண்டிய அருளை இறைவனிடம் இருந்து கேட்போமாக.

**முதல் வாசகம் : தொ.நூ 9:8-15**
வெள்ளப்பெருக்கிலிருந்து மீட்கப்பட்ட நோவாவுடன் கடவுள் செய்த உடன்படிக்கை

**பதிலுரைப் பாடல் :**
ஆண்டவரது உடன்படிக்கையை கடைப்பிடிப்போரின் பாதைகள் உண்மையானவை.

**இரண்டாம் வாசகம் : 1 பேதுரு 3:18-22**
இப்போது உங்களை மீட்கும் திருமுழுக்கிற்கு இந்த நீர் முன்னடையாளமாக இருக்கிறது.

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**
மனிதர் அப்பத்தினால் மட்டுமல்ல கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வர்.

**நற்செய்தி வாசகம் : மாற் 1:12-15**

#### விசுவாசிகளின் மன்றாட்டு

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

எத்தனை சோதனைகள் வந்தாலும் அத்தனை-யையும் எதிர்கொண்டு தன் பணியில் உறுதியாய் நிலைத்து நிற்கும் திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர், குருக்கள், துறவியர், இறைமக்கள் அனைவரும் இத்தவக்காலத்தில் செபத்தில் நிலைத்து இறைவார்த்தையில் ஊன்றி நின்று எதிர்ப்புக்களையும், சவால்களையும் முறியடிக்கத் தேவையான வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

மனிதன் தனது பாவத்திற்காக மனம் வருந்தி கடவுளின் மன்னிப்பை பெறும்போது கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையே ஒரு அன்பின் உடன்படிக்கை உருவாகின்றது. இதை உணர்ந்தவர்களாக இவ்வுலக ஆசைகளை விட்டு விட்டு கடவுளோடு இணைந்து வாழ்ந்து புதுவாழ்வு பெற்றிட வரமருள வேண்டு-மென்று...

நாம் சந்திக்கும் பிரச்சினை, கவலை, துன்பம், இடர் சோதனை அனைத்தையும் நம்மால் செல்ல முடியும் என்று நம்பும் போது, கடவுள் நமக்கு உதவி செய்கின்றார். இதை உணர்ந்து இயேசுவைப் போல் செபத்தில் நிலைத்திருந்து துன்பத்தை வென்று சாதனை படைத்திட வரமருள வேண்டுமென்று...

### தவக்காலத்தின் 2வது ஞாயிறு (25.02.2018)

**வாசக விளக்கம்:** தவக்காலத்தின் 2வது ஞாயிறு வாரத்தில் கால்பதிக்கும் அன்பான இறை உள்ளங்களே! இன்றைய வழிபாட்டு வாசகங்கள் ஆபிரகாமின் ஆழமான விசுவாசம், பரிசுத்த ஆவியின் வல்லமை, இயேசு பற்றிய கடவுளின் வெளிப்பாடு என்பனவற்றை வெளிப்படுத்துவதைப் பார்க்கின்றோம். ஆபிரகாமிடம் கடவுள் நீ அன்பு செய்யும், உனது மகனை கொடுக்க முடியுமா? என்று கேட்கிறார். அவரும் கொடுக்கிறார். இயேசு தமது வாழ்வையே கொடுக்கவேண்டும் எனக் கடவுள் விரும்பினார். அவரும் கொடுத்தார். இதனால் இறைவன் “என் அன்பார்ந்த மைந்தர் இவரே!” என்று சான்று பகர்கின்றார். இத்தவக்காலத்தில் கடவுள் நம்மிடம் நம் பாவங்களை கேட்கிறார். நாம் கொடுக்கத் தயாரா? இதற்கு பரிசுத்த ஆவியின் வல்லமை நமக்குள் செயல்படவேண்டும். “எனக்கு வலுவூட்டுகிறவரின் துணை கொண்டு எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு” என்கிறார் தூய பவுல் அடியார். நமது துன்பங்களை இயேசுவின் பாடுகளோடு ஒப்புக்கொடுக்கும் போது நாம் புதிய படைப்பாகின்றோம். உருமாற்றம் பெறுகின்றோம். இதற்கு எமக்கு ஆழமான விசுவாசம் வேண்டும். இதற்காக இறைவனிடம் மன்றாட பலியில் இணைவோம்.

**முதல் வாசகம் : தொ.நூ 22:1-2, 9-13, 15-18**
நம் முதுபெரும் தந்தை ஆபிரகாமின் பலி

**பதிலுரைப் பாடல் :**
உயிர் வாழ்வோர் நாட்டில் நான் ஆண்டவர் திருமுன் வாழ்ந்திடுவேன்.

**இரண்டாம் வாசகம் : உரோ 8:31-34**
கடவுள் தம் சொந்த மகனென்றும் பாராமல் அவரை நமக்காக ஒப்புவித்தார்.

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**
மேகத்தினின்று தந்தையின் குரலொலி கேட்டது. என் அன்பார்ந்த மைந்தர் இவரே, இவருக்குச் செவிசாயுங்கள்.

**நற்செய்தி வாசகம் : மாற்கு 9:2-10**

#### விசுவாசிகளின் மன்றாட்டு

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

புறத்தூய்மையை விட அகத்தூய்மையே மேலானது எனப் போதிக்கும் திருச்சபைக்காகவும், திருத்தந்தை, ஆயர், குருக்கள், இறைமக்கள் அனைவருக்காகவும், எமது ஆலயங்களினதும் எமது உள்ளங்களினதும் தூய்மைக்காகவும் திருவருள் புரிந்தருள வேண்டுமென்று...

இறைவன் ஆபிரகாமிடம் நீ அன்புகூரும் உன் ஒரே மகனை எனக்குத் தா என்று கேட்டது போல் நம்மிடம் நாம் அன்பு செய்யும் பாவங்களைக் கேட்கிறார். இதை உணர்ந்தவர்களாக நாம் எமது பாவங்களுக்காக மரித்து புதுவாழ்வுக்கு உயிர்த்தெழத் தேவையான அருள்வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

மனமாற்றத்தின் காலமாகிய இத்தவக்காலத்தில் செப, தப, தானதர்மங்களில் நிலைத்து ஒப்புரவு அருட்சாதனத்தின் உதவியோடு எமது அகத்தூ-ய்மையை வெளிப்படுத்தி கடவுளையும் அயலானையும் அன்பு செய்து இறைவனின் கட்டளைகளை நிறைவேற்றி வாழவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

தவமிருந்து தன்நலம் துறக்க அழைக்கும் காலம்
தாசர்கள் நாமமெல்லாம் தன்னைத்தானே
திருத்தியமைக்க திரும்பிப் பார்க்கும் காலம்

தினம், தினம் தேவனைத் தேட - நம் வாழ்வை
திரும்பிப் பார்க்க ஒரு “யு-ரேன்” எடுக்க ('U"TURN)
திருயேக தேவன் நம்மவருக்கு அருளும் காலம்!
திருச்சபை நமக்கு உவப்புடன் அளிக்கும்
அருளின் காலம் தவக்காலம்!

தாய் திருச்சபை தாசர்கள் எமக்கு
காலங்களை பிரித்துள்ளது.
தாழ்மையுடன் தான தர்மங்கள் புரிய
நமக்குகந்த காலம்!
தவக்காலமானது கிறிஸ்துவின்
உயிர்ப்பு விழாவிற்கான ஆயத்த காலம்!
தான தர்மங்கள் புரிந்து நம்மை வழிநடத்த
அழைக்கும் காலம்!

இறைமகன் இயேசு பட்ட இன்னல்கள் துன்பங்களை
இடைவிடாது தியானிக்க ஈடுபாடு கொண்டு செபிக்க
இருகரம் கூப்பி எந்நாளும் வேண்டிச் செபிக்க
இனிதே எம்மனைவரையும் அழைக்கும்
காலம் தவக்காலம்.

காலாதி காலமாய் கடவுளின் கருணையையுணரவும்
காக்கும் கரங்களால் கண்மணிபோல் காக்கப்படவும்
கர்த்தர் இயேசுவின் பாடுகள் மரணம்
தியானிக்க அழைக்கப்படவும்

கட்டுப்பாட்டுடன், கடமையுணர்வுடன் வாழ
அழைக்கப்படும் காலம் தவக்காலம்.


செப, தப, தான தர்மங்களை
தேடி வருபவர்க்கு உதவி புரியவும்,
செல்லுமிடமெல்லாம் தேவன் பக்கம்
திசை திருப்பி வாழவும்
செருக்குற்ற வாழ்வை சீரமைத்து வாழவைக்கவும்
செழிப்புடன் சேவை செய்து தேவனின் இராட்சியம் பரப்ப
அழைக்கும் காலம்

மனம் திரும்பி, மனம் வருந்தி வாழ்வை வாழ்வாக்கவும்,
மன்னன் இயேசுவின் பாதச்சுவட்டினை
பின்பற்றி வாழவும்,
மனம்மாறி மனமுருகி மகிழ்வுடன் வாழவும்
மாசின்றி வாழ்ந்து மானிட வாழ்வை
அர்த்தத்துடன் வாழவும் அழைக்கும் காலம்!

இறையாட்சியில் ஈடுபட்டுழைத்து இணைந்து வாழவும்
இறையரசை கட்டியெழுப்பி இறைவன் பால்
இட்டுச் செல்லவும்
இன்னல் இடைஞ்சல் இடையூறுகள்
மட்டில் இறைவனை இறுகப் பற்றவும்
இனிதே இன்புற்று வாழ ஈசன் எமக்கு அருளும்
காலம் தவக்காலம்!

உடைந்த உறவுகளை உறுதிப்படுத்தி வாழவும்
உலகப் போக்கை உதறித் தள்ளி
ஆன்ம வாழ்வை ஆழப்படுத்தவும்
உயிர்த்த இயேசுவின் சாட்சிகளாய்
ஊரெங்கும் பறைசாற்றவும்
உன்னத கடவுளின் பிள்ளைகள் என்ற
பேற்றை பெருமையுடன் வாழவும் அழைக்கும் காலம்!

அருட்சகோ. டெலாறோஸ், அ.கா



# தவக்காலத் தீர்மானங்கள்



14 மாசி
புதன்
இத்தவக்காலத்தில்
மனமாற்றம்
பெற முயற்சிப்பேன்



15 மாசி
வியாழன்
எப்போதும்
இறைவனின்
இரக்கத்தைப்
நினைப்பேன்



16 மாசி
வெள்ளி
அனுதினமும்
திவ்விய
நற்கருணையை
சந்திப்பேன்



17 மாசி
சனி
எவரையும்
மனம்
புண்படும்படி
பேச மாட்டேன்



18 மாசி
ஞாயிறு
என்னால்
இயன்ற அளவிற்கு
தர்மம் செய்வேன்



19 மாசி
திங்கள்
என்னை வழி நடத்துபவர்
இறைவன் என்ற
நம்பிக்கையில் இருந்து
மாற மாட்டேன் என
உறுதிக் கொள்வேன்



20 மாசி
செவ்வாய்
தாழ்ச்சி என்ற
புண்ணியத்தைக்
கைவிட மாட்டேன்




21 மாசி
புதன்
தேவையற்ற கோபத்தை
மனதில் வளர்த்துக்
கொள்ள மாட்டேன்




22 மாசி
வியாழன்
வயதில்
மூத்தோரை மரியாதைக்
குறைவாக
நடத்த மாட்டேன்



23 மாசி
வெள்ளி
பிறரையும்
என்னைப் போலவே
மதிப்பேன்



24 மாசி
சனி
பிறருக்கு
நம்பிக்கையூட்டும்
நல்வார்த்தைகளையே
பேசுவேன்



25 மாசி
ஞாயிறு
அருட்பணியாளர்களின்
சேவைகளுக்கு
மனமார ஒத்துழைப்பு
அளிப்பேன்



26 மாசி
திங்கள்
அன்றாடம்
குடும்ப செபத்தில்
ஈடுபடுவேன்



27 மாசி
செவ்வாய்
அடிக்கடி ஒப்புரவு
அருட்சாதனத்தைப்
பெற்றுக்கொள்வேன்



28 மாசி
புதன்
மனச்சாட்சிக்கு
எதிரான செயல்களில்
ஈடுபட மாட்டேன்




01 பங்குனி
வியாழன்
வயதும் அனுபவமும்
மிக்க பெரியோர்களின்
அறிவுரையை கேட்டு
நடப்பேன்



02 பங்குனி
வெள்ளி
பிறர்
குறைகளைப்
பெரிதுபடுத்திப்
பேச மாட்டேன்



03 பங்குனி
சனி
அவசியமற்ற
காரியங்களில்
இக்காலத்தில் ஈடுபட
மாட்டேன்



04 பங்குனி
ஞாயிறு
எல்லோரிடமும்
அன்புடனும்,
நட்புடனும்
பழகுவேன்.

தொடர்ச்சி அடுத்த இதழில்....

எதிலும் குறை கண்டு பிடிப்பது, எவரையும் குறைத்து மதிப்பிடுவது, மற்றவர்கள் செய்யும் செயல்களில் சிறு குறைகள் காரணமாக எண்ணி நகைப்பது என்பது நமது சமுதாயத்தில் நாம் அன்றாடம் காணும், ஒரு நிகழ்ச்சி. இதில் இருந்து மனிதன் எப்போது மாறுகிறான்?

## குறையைக் காணும் மனிதா நீ நிறையைக் காண்பது



**குறையைக் காணும் மனிதா - நீ நிறையைக் காண்பதெப்போது.**
**எங்கும் எதிலும் நானே என்ற எண்ணத்தை மாற்றிடு!**
**தன்னைத் தானே நம்பி நாளும் வாழ்க்கையில் போரிடு!**
**உன்னதமான நோக்கத்தை உன் மனதிலே கொண்டிடு!**
**உயர்வாய் உனை நீயே எண்ணியே பயணத்தை தொடர்ந்திடு.**
**எந்நாளும் எப்போதும், எளியோரை மதித்திடு.**
**உனக்குள் இருக்கும் திறமையை உன்னிப்பாய் கணித்திடு.**
**உண்மையை துணைக்கொண்டு நேர்மையாக வாழ்ந்திடு.**
**குறையைக் காணும் மனிதா, நிறைவைக் காண்பாய் இப்போது.**

# ஆயிரக்கணக்கான மக்களின் முன்னிலையில்

# தேவத்தை லூர்து அன்னையின்

# புதிய ஆலயம் திறந்து வைக்கப்பட்டது.





புனித லூர்து அன்னையின் மகிமையை வெளிப்படுத்தும் முகமாக தேவத்தையில் புதிதாக அமைக்கப்பட்ட ஆலயமும், லூர்து அன்னையின் குகையும் திறந்து வைக்கப்பட்டு மக்களின் கையில் ஒப்புவிக்கப்பட்டது.

இலங்கையின் 70வது சுதந்திர தினத்தை கொண்டாட ஆயத்தமாகி இருந்த நாளுக்கு முன்னைய நாளாகிய மூன்றாம் திகதி மாலை இறைமக்கள் முன்னிலையிலும், கர்தினால், துணை ஆயர், குருக்கள், துறவிகள் அனைவரும் இப்புதிய ஆலய திறப்பு விழாத் திருப்பலியில் பங்கேற்று இந்நிகழ்வை சிறப்பித்தனர்.

ஆயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் சிறப்பு ஆசீர்வழங்கி பிரான்சில் இருந்து விசேட விதத்தில் கொண்டுவரப்பட்ட லூர்து அன்னையின் அழகிய திருச்சுரூபமானது, மெருகூட்டிய நிலையில் காணப்பட்டதோடு மெழுகுதிரி பவனி செல்ல அமைக்கப்பட்ட பாதையில் கொண்டு செல்கையில் மேலும் அழகூட்டப்பட்ட காட்சியாக விளங்கியது.

பிரான்சின் லூர்து நகரில் சிறப்பம்சங்களை வெளிக்கொணரும் விதத்தில் அமைக்கப்பட்ட இவ் ஆலயத்தின் வெளிப்புறமாக நீர் வடிந்தோடும் விதத்தில் உள்ள குகையினருகே உள்ள நீர்த்தடாகமானது கர்தினால் ஆண்டகையின் ஆலோசனைக்கும் எண்ணத்திற்கும் ஏற்ற விதத்தில் அமைக்கப்பட்டதாகும். இதற்கிணங்க அருட்பணி. டெரல் கூஞ்ஞ அவர்களின் சிந்தனைகள் பொதிந்த கட்டிக்கலை நிபுனர் திரு. ஜோசப் தல்வத்தகே அவர்களின் தலைமையில் உருவாக்கப்பட்ட இவ் ஆக்கச் செயற்பாட்டிற்கு மெக்வரன்ஸ் இயக்குனர் திரு. ரொஷான் டி சில்வா மற்றும் அவரது மனைவி பிள்ளைகள் அனுசரனை வழங்கினார்கள்.

மாதத்தின் முதற் சனிக்கிழமை இடம்பெறவிருக்கும் திருப்பலியிலும், மெழுகுதிரி பவனியிலும் கலந்து கொள்ளுமாறு இலங்கை வாழ் கத்தோலிக்க மக்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகின்றது.

ஊடகங்கள் மூலம் பிரான்சின் லூர்து நகர சிறப்பைப் பற்றி வாசிக்கும் மக்களுக்கு அங்கு செல்ல பண வசதிகள் இல்லை. இலங்கை அன்னையின் திருத்தலத்தில் அமைக்கப்பட்ட இப்புதிய ஆலயம் பிரான்சின் லூர்து அன்னையின் ஆலயத்தை போன்ற அமைப்பில் உள்ளது இந்நாட்டு கத்தோலிக்கர்களுக்கு கிடைத்த பெரும் பாக்கியமே. இத்திருத்தலத்திலுள்ள ஆலயத்திற்கு வருபவர்கள் பிரான்ஸ் லூர்து நகரம் சென்ற திருப்தியை அடைவர்.

கர்தினால் ஆண்டகை தமது மறையுரையிலே "தேவத்தை புனித பூமி மறைமாவட்டத்தின் (கொழும்பு) கடந்த காலங்களில் பணியாற்றிய ஆயர்களின் விசுவாசத்தின் வெளிப்பாடாகும்" எனத் தெரிவித்தார்.

விசேட விதமாக "இரண்டாம் உலகப் போரின்போது வரவிருந்த ஆபத்துக்களை தவிர்த்து நாட்டைக் காப்பாற்ற அன்றிருந்த ஆயர் விடுத்த வேண்டுகோளை இறையன்னை ஏற்றுக்கொண்டார். அதிமேதகு தோமஸ் கர்தினால் கூரே ஆண்டகையின் வழிநடத்தலின் கீழ் 1974ம் ஆண்டில் முடிவடைந்தது" என்பதை கர்தினால் அவரது உரையில் கூறினார்.

"இப்புனிதத்தலத்தின் உயரிய சிறப்பம்சம் வாய்ந்த இடமாக லூர்து அன்னையின் குகையை நாம் கருதுவதோடு இச்சந்தர்ப்பம் வரலாற்றில் இடம்பெற்றுள்ளது" என்பதையும் குறிப்பிட்டு கி.பி 1858ல் லூர்தில் பெர்னதெத் என்பவருக்கு மசபியேல் எனப்படும் மலைக்கு அருகாமையில் இறையன்னை காட்சி கொடுத்து பேசியமை எம் ஞாபகத்தில் உள்ள புதுமையாகும். ஏன் எம் இறையன்னை எமக்கு இவ்வளவு அன்பு செலுத்துகின்றார்? ஏன் இறையன்னை பல்வேறுபட்ட இடங்களில் காட்சி கொடுத்தார்?

"1531ல் ஜுவாம், தியாகோ எனும் புனிதருக்கு மெக்சிக்கோ நாட்டின் குவாட்டலுபே எனும் இடத்தில் மரியன்னை காட்சி கொடுத்தார். 1846 புரட்டாதி 19ந் திகதி லாசலெத் எனும் இடத்தில் சிறுபிள்ளைகள் இருவருக்கு காட்சி கொடுத்தார்" 1917 வைகாசி 13ம் திகதி போர்த்துக்கல்லில் லிஸ்பன் நகர அருகாமையிலுள்ள பாத்திமாவில் லூசி, ஜசிந்தா, மற்றும் பிரான்சிஸ்கோ ஆகிய 3 சிறுபிள்ளைகளுக்கும் காட்சி கொடுத்தார்.

1933 தை மாதம் 15ம் திகதி தொடக்கம் பங்குனி 2ம் திகதி வரை பெல்ஜியம் பெனோ எனும் இடத்தில் மரியா தெபோ எனும் பிள்ளைக்கு காட்சி கொடுத்தார். அவரின் காட்சி கொடுத்தல்கள் முடிவுறவில்லை. இன்னும் பழைய யுகோஸ்வாவியில் மெஜகோரி எனும் இடத்தில் காட்சி கொடுக்கின்றார்

இச்சம்பவங்களை ஒன்றுதிரட்டி கர்தினால் அவர்கள் இவ்வாறான கருத்தை தெரிவித்தார். அன்று சிலுவையடியில் உயிரை தியாகம் செய்து, முழு மனித குலத்தையும் இறையன்னைக்கு அர்ப்பணித்தார் இயேசு. ஆகவே கத்தோலிக்கர்களாகிய நாங்கள், வாழ்வில் துன்ப துயரங்களுக்கு மத்தியில் எதிர்பார்ப்புடனும், பய உணர்வின்றியும் இருத்தல் அவசியம். காரணம் நம் தாய் நம்மோடு என்றும் இருக்கின்றார்.

இயேசுவின் அன்பை சுவைத்த, அவரை நன்றாக புரிந்து கொண்ட மரியன்னையைப் போன்று இன்னுமொரு பெண் உலக வரலாற்றிலே இல்லை. இயேசு தமது தூதுப்பணிக்காக ஆயத்தமாகிய வேளை பிரிவின் வலி பற்றி அன்னை மரி உணர்ந்திருப்பார்

"இயேசு அவரது தாய் மீதான அன்பை சிலுவையினடியில் அவரது சீடனுக்கு தம் தாயை பொறுப்பாக கொடுப்பதன் மூலம் வெளிப்படுத்தினார். இதன் மூலம் முழு மனித குலத்தையும் மரியன்னைக்கு ஒப்புக்கொடுத்தமையால், இறைவனால் எமக்கு கொடுக்கப்பட்ட உயரிய பரிசு மரியன்னை என்பதால், இறைவனிடத்திற்கு செல்வதற்கான ஒரே வழியாக, பாலமாக மரியன்னை திகழ்வதால், கத்தோலிக்கர்களாகிய நாம் பாக்கியவான்களே. எதற்கும் பயப்படத்தேவையில்லை"..

15













மார்க் வினுஷன், தரம் 8T, புனித பேதுரு கல்லூரி, கொழும்பு – 04.



மேரி கிஷாந்தி, தரம் 6C, புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலயம், கொழும்பு – 13.

**மாணவர்களே! உங்களது ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்ப வேண்டிய முகவரி**

**இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08.**

**மின்னஞ்சல் :**

**cgnanaoli@yahoo.com**

# 3. திருமறைப் பழக்கங்கள்.

### உணவருந்திய பின் செபியும்

**தனியாக உணவருந்திய பின் :**

முதலில் பீங்கானையும், கைகளையும் நன்றாகக் கழுவும். பின்னர் உண்ட இடத்துக்குத் திரும்பிவந்து (நின்று அல்லது இருந்து) இருகரம் கூப்பி

**வானகத் தந்தையே, அப்பா! நீர் எனக்குத் தந்த இந்த உணவுக்காகவும், செய்துவரும் எல்லா நன்மைகளுக்காகவும், இயேசு ஆண்டவர் வழியாக நான் உமக்கு நன்றி சொல்கிறேன். ஆமென்.** என்று செபித்த பின்னரே வெளியே செல்லும்.

**குடும்பமாக உணவருந்திய பின் :**

எல்லோரும் உணவருந்திய பின், முதலில் பீங்கானையும் கைகளையும் நன்றாகக் கழுவுங்கள். பின்னர் உண்ட இடத்துக்கு எல்லோரும் திரும்பிவந்து (நின்று அல்லது இருந்து) இருகரம் கூப்பி, அப்பா அல்லது அம்மா பின்வருமாறு செபிக்க, நீரும் மௌனமாக அவரோடு சேர்ந்து செபியும்.

**வானகத் தந்தையே, அப்பா! நீர் எங்களுக்குத் தந்த இந்த உணவுக்காகவும், செய்துவரும் எல்லா நன்மைகளுக்காகவும் இயேசு ஆண்டவர் வழியாக நாங்கள் உமக்கு நன்றி சொல்லுகின்றோம்** என்று செபிக்க, எல்லோரும் **ஆமென்.** என்று சொல்லிய பின்னரே வெளியே செல்லுங்கள்.

### 7. நல்லது ஒன்றை நாளும் செய்யும்

ஒவ்வொரு நாளும் வானகத் தந்தையை நினைத்து அவருக்காக ஒரு நல்ல செயல் செய்யும். நீர் செய்யப்போவதை நீரே தீர்மானியும். இது

1. ஒருவருக்கு கல்விகற்க உதவுவதாக இருக்கலாம்.
2. ஒருவரைப் பற்றி நல்லதைப் பேசுவதாக இருக்கலாம்
3. ஒருவருக்காக நேரம் ஒதுக்குவதாக இருக்கலாம்.
4. ஒருவருக்காகச் செபிப்பதாகவும் இருக்கலாம்.

### 8. தேவநற்கருணை ஆண்டவரோடு இவ்வாறு பேசும்

ஆலயத்தினுள் நுழைந்ததும் தேவநற்கருணைத் திருப்பேழைக்கு அருகில் ஒரு இடத்தில் தனிமையாக அமர்ந்துகொள்ளும். அம்மா அப்பாவோடும், அண்ணன் அக்கா, தம்பி தங்கையோடும் பேசுவதைப் போல் இயேசுவோடு மனம் திறந்து மனதுக்குள்ளே பேசும். எதைப்பற்றியும் நீர் அவரோடு பேசலாம். அவரும் உம்மனதுக்குள்ளே சில நல்ல எண்ணங்களைத் தந்துகொண்டிருப்பார். இவ்வாறு நீர் அவரோடு பேசவும், அவர் உம்மோடு பேசவும், நீர் முன்னதாகவே திட்டமிட்டு இதற்காக நேரம் ஒதுக்கி வரவேண்டும். அவசரத்தில் அவரோடு பேசமுடியாது. முதலில் அதிக நேரம் எடுக்காது, சிறிது நேரம் பேசினால் போதும் இவ்வாறு அடிக்கடி அவரோடு பேசும் பழக்கத்தை ஏற்படுத்தினால், நாளடைவில் அவரோடு பேசும் நேரம் கூடிக்கொண்டே போவதை நீரே கண்டுகொள்வீர்.

### 9. தேவநற்கருணை ஆண்டவரை இவ்வாறு உள்வாங்கும்.

தேவநற்கருணை ஆண்டவரை நாவில் வாங்கும்போது இவற்றைச் செய்யும்.

1. தேவநற்கருணை ஆண்டவரை வாங்குமுன் ஒரு மணி நேரத்துக்கு மேலாக எதையும் வாயிலே போடாது விரதமிரும். (தண்ணீரை மட்டும் குடிக்கலாம்)
2. தேவநற்கருணை ஆண்டவரை வாங்குமுன்பே, முழந்தாளில் இருந்து இருகரம் கூப்பி அவருக்கு மரியாதை செய்யும்.
3. குருவானவர் உம்மிடம் வருமளவும், இயேசுவே! என்னிடம் தங்க வாரும் என்றும், உம்மிலே தங்க எனக்கும் இடம் தாரும் என்றும் மனதுக்குள்ளே சொல்லும்.
4. குருவானவர் கிறிஸ்துவின் திருவுடல் என்று சொல்லும் போது ஆமென் என்று ஒலியெழுப்பி, நாவை வெளியே நீட்டி அவரை மரியாதையோடு வாங்கிக் கொள்ளும்.
5. இயேசுவை உள்வாங்கி உண்டபின், இயேசுவே! நீர் என்னிடம் வந்ததற்கு உமக்கு நன்றி என்று மனதுக்குள்ளே சொல்லிக்கொண்டு இருப்பிடம் செல்லும்.

**தொடரும்**

**அருட்தந்தை அ. பிலிப் அடிகளார் (ivDei)**




### லூக்கா 12-24 அதிகாரங்கள்

01. நூறிலிருந்து ஐம்பதானேன் நூறிலிருந்து எண்பதானேன் ஒன்று திரவப் பொருள்? மற்றது திடப் பொருள்? சொல்லுங்கள் பார்ப்போம்?

02. போய்ப் பாருங்கள் அவிழ்த்து வாருங்கள் யாரும் அமராததை கையோடு கொண்டு வாரும் யாராகிலும் மடக்கினால் பதில் கூறும்?

03. ஊரத் தெரியாதவன், உலகந் தெரியாதவன் சொந்தம் விட்டு சென்றவன், சொத்துக்களை அழித்தவன், பந்தம் தேடி வந்தவனை பாசமா அணைச்சிட்டாரு யார்? யாரை?

04. என்னை மூன்றெழுத்தில் அழைப்பர் அவ்வப்போது எல்லாருக்கும் கொடுப்பேன் கண்களில் கண்ணீர் வழி தெரிவிப்பேன் என்னால் முகமே மாறிவிடும். ஆறுதல் தருபவர் யார்? என் பெயர் என்ன?

05. சிவப்பு வண்ணக் கொண்டை விடியலை சொல்லும் தொண்டை கூவமாக காத்திருந்து மூன்று முறைக்குப் பின்னே குரல் கொடுத்தது அது என்ன?




நியல் ஜேகப், தரம் 8T, புனித பேதுரு கல்லூரி, கொழும்பு – 04.




## கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு, படத்தை பார்த்து விடை கண்டுபிடிங்க குட்டீஸ்!

1. இங்குள்ளவர்களில் ஒருவர், ஒற்றைக்கால், “ஷூ” மட்டும் அணிந்திருக்கிறார், அவர் யார்?
2. கை கடிகாரம் அணிந்திருக்கும், மூவர் யார்?
3. சட்டையில், பூ டிசைன் போட்டுள்ள, மூவர் யார்?
4. “செயின்” அணிந்திருக்கும் நால்வரில், ஒருவருடையது மட்டும் மாறுபட்டுள்ளது. அது யாருடையது?
5. இரண்டு பேர் பையில் போஸ்ட் கவர் உள்ளது. அவர்கள் யார்?

# வழிதவறிச் சென்றவர்களை, சரியான வழிக்கு மீண்டும் கொண்டு வருவது இன்றைய காலகட்டத்தில் நிலவும் சவாலாகும்

## ஜேர்மனிய மேதகு ஆயர் கிரியோ மரியா ஹன்தே ஆண்டகையுடன் ஓர் நேர்காணல்

ஜேர்மனியில் இவஸ்தே மறைமாவட்டத்தில் ஆயரான கிரிகோ மரியா ஹன்தே ஆண்டகை கடந்த ஒரு வாரமாக இலங்கையில் தங்கியிருந்த சந்தர்ப்பத்தில் எம் வாசக நெஞ்சங்களுக்காக அவருடனான நேர்காணல் இடம்பெற்றது. இந்நேர்காணலானது ஜேர்மனிய சமூகத்தின் கத்தோலிக்கரின் விசுவாசம், திருமணம், கத்தோலிக்க குடும்பங்கள், கருக்கலைப்பு மற்றும் திருவழிபாடு பற்றிய விடயங்களைத் தழுவியதாக அமைந்தது.

**கேள்வி:–** கனம் ஆயர் அவர்களே! உங்களது இலங்கை வருகை நிமித்தம் எம் வாசக நெஞ்சங்கள் சார்பில் அன்புடன் வரவேற்கின்றோம். உங்கள் பொறுப்பிலுள்ள மறைமாவட்டத்தைப் பற்றி எமக்கு விளக்கிக் கூறுவீர்களா?

**பதில்:–** என்னை அன்புடன் வரவேற்றமைக்கு எனது நன்றிகள். நான் ஜேர்மனியில் இவஸ்தே எனும் மறைமாவட்ட ஆயராக பணியாற்றுகின்றேன். முழுச் சனத்தொகை 900,000 மாகவும், அதில் 400,000 மானோர் கத்தோலிக்கர்களாகவும் இருக்கின்றனர். பெரும்பாலானோர் புரட்டஸ்தாந்தவர்கள். எனது பொறுப்பின் கீழ் உள்ள மறைமாவட்டமானது 1200 வருடங்கள் பழமைவாய்ந்தது. இம்மறைமாவட்டத்தின் 82வது ஆயராக நான் நியமிக்கப்பட்டுள்ளேன்.

**கேள்வி:–** ஜேர்மனியில் வசிக்கும் கத்தோலிக்கர்களை பற்றியும், அம்மறைமாவட்டத்தில் சேவைசெய்யும் குருக்கள் பற்றியும் கூற முடியுமா?

**பதில்:–** ஜேர்மனிய சனத்தொகையில் கிராம, நகர புறங்களில் வசிப்பவர்கள் பெரும்பாலானோர் புரட்டஸ்தா-ந்தவர்களாகும். எனினும் கத்தோலிக்கர்கள் பரந்து வாழும் நகரங்களும் இருக்கின்றன. எனது பொறுப்பிலுள்ள இவஸ்தே நகரில் 300க்குட்பட்ட குருவானவர்கள் பணியாற்றுவதோடு, அதில் 200க்கும் மேற்பட்ட குருவானவர்கள் தொடர்ந்தும், தமது பணியை செய்ய வேண்டிய கடப்பாட்டில் (அவசியத்தில்) உள்ளனர்.

**கேள்வி:–** அங்குள்ள கத்தோலிக்கர்கள் அவர்களது நாளாந்த ஞாயிறு தின வழிபாடுகளின் போதும் பக்தி முயற்சிகளின் போதும் காட்டும் ஈடுபாடும், அர்ப்பணிப்பும் எவ்வாறு அமையப் பெற்றுள்ளது என்பது பற்றி கூறுவீர்களா?

**பதில்:–** அங்குள்ள கத்தோலிக்கர்கள் ஞாயிறு தின வழிபாடுகளில் மிகவும் ஆர்வத்துடன் பங்குகொள்வார்கள். ஆனால் நகரபுறத்தில் வசிக்கும் கத்தோலிக்கர்களின் பங்களிப்பானது நூற்றுக்கு 7% பார்க்கக் குறைவாகவே காணப்படுகின்றது. எனினும் நகர்புறத்தில் வசிக்கும் கத்தோலிக்கர்களை விட, கிராமபுறத்தில் வசிக்கும் கத்தோலிக்கர்கள் ஞாயிறு தின, நாளாந்த திருப்பலிகளிலும் ஈடுபாடு காட்டுவர். அதாவது நூற்றுக்கு 20% ற்கு மேற்பட்ட வீதத்தினர் இதில் அடங்குவர். அதேபோல் பெரும்பாலானோர் ஞாயிறு தின திருப்பலியில் பங்கேற்பர். உலகமயமாக்கலே இந்நிலைக்கான பிரதான காரணமாக அமைகின்றது. எம் மக்களுக்கு தமது வாழ்வை சிறப்பாக வாழ்வதற்கான அனைத்து வசதிகளும் உள்ளன. அவர்களுக்கு அவர்களது உடல்நிலை பற்றி, நோய்கள் பற்றி கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் அவர்களுக்கு ஆயுள்காப்புறுதி உள்ளது.

அவர்களுக்கு தமது தொழில்துறைகளைக் குறித்து கவலைப்பட வேண்டியதில்லை. ஏனெனில், அவர்களது தொழில் துறைகளை பாதுகாத்துக் கொள்ளும் வகையில் காப்புறுதித் திட்டங்கள் உள்ளன. இதனால் எவ்விடயம் பற்றியும் கவலைப்பட வேண்டிய தேவை எம்மக்களுக்கு இல்லை. வாழ்வதற்குத் தேவையான அனைத்து வசதிகளும் உள்ளன. வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கோ, நாம் எடுக்கும் முடிவுகள் பற்றியோ, அதன் நன்மை தீமைகள் பற்றியோ வருந்துவதற்கான அவசியமில்லை. இதனால், கடவுளைப் பற்றி சிந்திக்கவும் முயற்சிப்பதில்லை. இந்நிலையானது எமக்கு மட்டும் சிந்தித்து கவலைப்பட வேண்டிய நிலை உருவெடுத்துள்ளது என நான் நினைக்கிறேன்.

**கேள்வி:–** "அனைத்து விதமான தேவைகளும் கிடைத்துள்ளது" என்பதிலிருந்து நீங்கள் கூற முயற்சிப்பது, அவர்கள் லௌகீக விடயங்களுக்கு அதிக விருப்பமுள்ள-வர்களாக இருக்கின்றார்கள் என்பதை குறித்தா?

**பதில்:–** நிச்சயமாக! நான் குறிப்பிடும் விதத்திற்கிணங்க ஏற்கனவே புனித 2ம் அருளப்பர் சின்னப்பர் கருத்து தெரிவித்திருக்கிறார். அதாவது, இந்நிலைக்கு பிரதான விடயமாவது லௌகீக மயமாக்கலின் காரணமாக நாட்டிலும், மக்களிலும் ஏற்பட்ட வளர்ச்சியாகும்.

**கேள்வி:–** இக்கவலைக்குரிய நிலையில் கத்தோலிக்-கர்களின் ஆன்மீகத்தை வளர்ச்சியுறச் செய்வதற்கு திருச்சபையானது எவ்வாறான விதத்தில் முயற்சிக்கின்றது?

**பதில்:–** இறைவனுக்கு மகிமை உண்டாகுக! வழிதவறிச் சென்ற கத்தோலிக்க மக்களை மீண்டும் திருச்சபையில் இணைத்துக் கொள்வதற்கான முயற்சிகளை எமது மறைமாவட்டத்தில் செயல்படுத்துகின்றோம். எனது மறைமாவட்டத்திலுள்ள குருக்கள் இவ்விடயம் குறித்து கவனம் செலுத்துவதோடு, மக்களை மீண்டும் இறைவனோடு ஒன்றிக்க வைக்க அயராது உழைக்கின்றனர்.

எனினும், இது இலகுவான காரியமன்று. இதற்கு பிரதான காரணமாக அமைவது, எமது நாட்டில் நிலவுகின்ற பௌதீக, கலைக்கலாச்சார கோலங்கள் ஆகும்.

அந்நிலையானது 19ம் நூற்றாண்டிலிருந்தே அதிகரித்து வந்துள்ளன. லௌகீகமயமாக்கலுக்கு அடிமையாகிய மக்கள், அவர்களது சுய எண்ணங்களுடன் அவற்றைப் பற்றிப்பிடித்துக் கொள்ள கேள்விக்கோட்பாடுகள் காரணமாக அமைந்தன.

எம் நாட்டில் ஏற்பட்ட புரட்சிகள், வியாபாரம், வர்த்தக நடவடிக்கைகள் இவற்றிற்கு மூல காரணமாகும். மக்கள் இவ்விடயங்கள் குறித்து சந்தேகத்துடனே பார்க்கின்றார்கள்.

**கேள்வி:–** இந்நிலைக்கு காரணங்களைக் குறிப்பிட முடியுமா?

**பதில்:–** சிக்மன்ட் ப்ரொயிட், கார்ல் மாக்ஸ் போன்றோரை உதாரணமாக குறிப்பிடலாம். இக்கால மனிதர்கள் கடவுளை நெருங்குவதற்கான முதற்படியிலேயே சந்தேகம் கொள்கின்றனர். இச் சந்தேகம், இந்நிலை எமது இரத்தத்திலேயே ஊறி உள்ளன.

இறைவனை எவ்வாறு தேடுவது என்பது இக்கால மனிதர்களுக்குள்ள பிரச்சினையே இல்லை. ஆனால், இறைவன் மனிதனிடத்தில் தம்மை வெளிப்படுத்துவது எவ்வாறு என்பதே அவர்களின் தேடலாக அமைகின்றது. பிரச்சினைக் குறித்து வேறுவிதமான திசையிலேயே கண்ணோக்குகின்றனர்.



**கேள்வி:–** குழந்தைகள், பாடசாலை செல்லும் மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள் எவ்வாறு இதனை நோக்குகின்றனர்? அக்கண்ணோட்டத்திலேயா பார்க்கின்றனர்?

**பதில்:–** ஆம். சந்தேகம் என்பது, வெளிப்படையாக வரும் நறுமணம் போன்றது. உடல், உள ரீதியாக பிள்ளைகள் வளரும் போது, இளம் வயதில் இருக்கையில் இளைஞர்கள் எனக்கு இவ்வாறு கூறுகின்றனர். நாம் பீடப்பணியாளர்களாக ஆலயத்தில் சேவை செய்கின்றோம் என்று கூறும்போது மற்ற இளைஞர்கள் அவர்களை ஏளனம் செய்கின்றார்களாம். இவ்வாறு செய்யும் போது மனமுவர்ந்து சேவை செய்யும் இளைஞர்களின் விசுவாசத்திலும் தளர்ச்சி ஏற்படுகின்றது.

எமக்குத் தேவைப்படுவது, செபத்தில் நிலைத்-திருக்கும் குடும்பங்களே, உறுதியான விசுவாசத்துடன் வாழும் கத்தோலிக்க குடும்பங்கள், பங்குச் சபைகள், ஒன்றியங்கள், சிறுக்குழுக்கள் போன்றனவே எமக்குத் தேவைப்படுகினறன.

பங்குச் செயற்பாடுகளை சீர்குலைக்க எனக்குத் தேவையில்லை. அவை மிகவும் முக்கியமானவை. பங்கு நடவடிக்கைகள் மூலம் பங்கு மக்களின் விசுவாசத்தை கட்டியெழுப்ப வேண்டும். இதுவே அத்தியவசியமாக அமையும்.

**கேள்வி:–** நீங்கள் இப்போதும் குறிப்பிட்டபடி ஜேர்மன் நாட்டின் குடும்ப வாழ்க்கை உறுதியான நிலையில் உள்ளதா?

**பதில்:–** ஜேர்மன் நாட்டில் அதிகப்படியானோர் விவகாரத்து செய்கின்றார்கள். குடும்ப வாழ்க்கை சீர்குலைந்துள்ளது. இதனைக் குறித்து முழுத்திருச்சபையும் கவனம் செலுத்த வேண்டும். குடும்ப வாழ்க்கை என்பது வெறுமனே கத்தோலிக்கருக்கு மட்டும் உரித்தான விடயமன்று. முழு சமுதாயத்திற்கும் உரித்தாகுவதாகும். சமூகத்தில் குடும்பம் என்பது சிறப்பிடம் வகிக்கின்றது. குடும்ப வாழ்க்கை இச்சமூகத்திலேயே கட்டியெழுப்பப்படுகின்றது.

**கேள்வி:–** இதனோடு தொடர்புபட்ட இன்னொரு விடயம் கருக்கலைப்பு. இவ்விடயமானது உங்கள் சமூகத்தில், மற்றும் கத்தோலிக்கர் மட்டில் எந்நிலையில் உள்ளது?

**பதில்:–** கருக்கலைப்பு என்பது எம் சமூகத்தில் நிலவும் பாரிய பிரச்சினையாகும். இது மிகவும் கவலைக்குரிய விடயமாக இருப்பினும், இன்று சாதாரண விடயமாகியுள்ளது.

**கேள்வி:-** அரசாங்கத்தின் சட்டதிட்டங்களினாலே இந்நிலை சாதாரண விடயமாகியுள்ளது. உண்மையாகவே கருக்கலைப்பு குறித்து காணப்படும் சட்டதிட்டங்கள் என்ன?

**பதில்:–** ஜேர்மன் தேசத்தில் கருக்கலைப்பு செய்வது மிகவும் இலகு. அங்கு இதற்கான ஆலோசனைக் குழு உள்ளது. கருக்கலைக்க முயற்சிக்கும் ஒரு பெண் அக்குழுவுக்கு தமது தேவை குறித்து அறிவிக்க மட்டுமே வேண்டும். அதற்காக ஒரு விண்ணப்பப்படிவம் (Form) உள்ளது. அதனை நிரப்பிக் கொடுத்தால் வைத்தியரிடம் செல்ல முடியும்.

**கேள்வி:–** ஆயர் அவர்களே! திருவழிபாட்டு அம்சங்களில் ஈடுபாடுள்ள உங்களிடம் அவை பற்றி தெரிந்துகொள்ள விரும்புகின்றேன். திருவழிபாடு குறித்து திருச்சபையின் இன்றைய நிலை என்ன?

**பதில்:–** 20 வருடங்களுக்கு முன் திருவழிபாட்டு அம்சங்களானது இன்றைய நிலையை விட உறுதியாக அமைந்திருந்தது. இன்று வியாபாரப்பொருள் போன்றே திருவழிபாடு காணப்படுகின்றன. திருவழிபாட்டு அம்சங்களில் மக்கள் ஈடுபட, மக்களின் தேவைக்கிணங்க, அவர்களது எதிர்பார்ப்புக்களை நிவர்த்திசெய்யும் வகையில், இசை மற்றும் கருப்பொருளை தெரிதல், அதற்கான ஆவல் போன்ற விடயங்கள் ஒரு பாரிய வியாபார நடவடிக்கைகளை ஒத்ததாக திருச்சபையினுள் காணப்படுகின்றன.

**கேள்வி:–** இதனைக் குறித்த இன்றைய நிலை என்ன?

**பதில்:–** ஒரு விதத்தில் இதனைக்குறித்த கவனம் மங்கிப்போனது. எதிர்பார்த்த விதத்தில் மாற்றங்கள் ஏற்படவில்லையெனினும், இன்று மக்கள் திருவழிபாடு குறித்து மேலும் கவனம் செலுத்துகின்றனர். மக்கள் திருவழிபாடு பற்றி தெரிந்து அவற்றை நல்ல முறையில் செயற்படுத்த முயற்சிக்கின்றனர்.

**கேள்வி:–** திருவழிபாடு குறித்து மேலும் கவனம் செலுத்துகின்றனர் என்று நீங்கள் குறிப்பிட்டதற்கான காரணம்?

**பதில்:–** திருவழிபாடு என்பது அழகுக்கலை அன்று. அது ஓர் மறைபொருள். மேடை நாடகம், கதை எழுதுவதுபோல இறைமக்களை ஆலயத்தின் பால் ஈர்த்தெடுக்க முடியாது என்பதை அனைவரும் தெரிந்துள்ளனர். இன்று எமது ஆலயங்கள் வெறுமையடைந்துள்ளன. 70, 80களில் பயன்படுத்திய இசை, கிறிஸ்தவ பாடல்கள், தெரிவுசெய்யும் கரும்பொருள்களை புதுப்பொழிவு செய்கையில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. எவ்வாறாயினும் இறைமக்கள் ஆலய செயற்பாடுகளிலிருந்து விலகியிருந்தனர்.

கேள்வி:- திருவழிபாடு என்பது அழகுக்கலையன்று, அது ஓர் மறைபொருள் என்று நீங்கள் கூறியதை விபரமாக விளங்கப்படுத்துவீரா?

**பதில்:–** ஆம் அது ஓர் மறைபொருளாகும்.

**கேள்வி:-** நிகழ்கால திருவழிபாட்டு அம்சங்களைக் குறித்த ஜேர்மனிய மக்களின் ஈடுபாடு எவ்வாறுள்ளது? மக்கள் அதனை விரும்புகின்றார்களா?

**பதில்:–** நீங்கள் கேட்ட இக்கேள்விக்கு இலகுவில் பதில் கூற இயலாது. ஜேர்மனியில் இதனைக்குறித்து செயல்படும் பல அமைப்புகள் உள்ளன. இதனைக் குறித்து ஈடுபாடு காட்டும் மக்கள் பெரும்பான்மையானோர் உள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் திவ்விய நற்கருணைக்கு முதலிடம் கொடுக்கின்றனர்.

**கேள்வி:–** ஈடுபாடு காட்டும் மக்களின் பங்களிப்பு அதிகரித்துள்ளதா?

**பதில்:–** ஆம் ஈடுபாடு காட்டும் மக்களின் வீதம் அதிகரித்துள்ளது.

**கேள்வி:–** இவ்விடயம் குறித்து சாதகமான நிலை வெளிப்படுவதையிட்டு நாம் பெருமகிழ்ச்சியடைய வேண்டுமல்லவா?

**பதில்:–** ஆம், ஆம். இச்சாதகமான நிலை பற்றி குறிப்பிடுவது அவசியம். இவ்விடயம் என்னை பெருமகிழ்ச்சியடைய வைக்கின்றது.

எழுத்து
அருட்பணி. கலாநிதி. கெமிலஸ் பர்னாந்து
தமிழாக்கம் : செல்வி. எனஸ்டிக்கா




# ஆண்டவரோடு நடத்தும் சந்திப்பில் அனைத்தும் ஆரம்பிக்கின்றன



விசுவாசப்பயணத்தில் பகிர்ந்துகொள்கின்ற மற்றும் இறைவார்த்தையைக் கேட்பதற்கு ஏக்கமாக இருக்கின்ற சகோதர, சகோதரிகளுடன் உண்மையான சந்திப்பை நிகழ்த்துமாறும், வாழ்வில் தொழில்நுட்பம் ஒருபோதும் உயர்ந்த இடத்தைக் கொண்டிருக்கக் கூடாது என்றும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இருபால் துறவியரிடம் கூறினார்.

இயேசு ஆலயத்தில் காணிக்கையாக அர்ப்பணிக்கப்பட்ட விழா மற்றும், அர்ப்பண வாழ்வு வாழ்வோரின் 22வது உலக நாளை முன்னிட்டு, பிப்ரவரி 02, வெள்ளி மாலை 5.30 மணிக்கு, வத்திக்கான் தூய பேதுரு பசிலிக்கா பேராலயத்தில், ஆயிரக்கணக்கான இருபால் துறவியருக்கு, திருப்பலியை தலைமையேற்று நிறைவேற்றிய திருத்தந்தை, தன் மறையுரையில், இவ்வாறு கேட்டுக்கொண்டார்.

இறைவனோடும், மற்றவரோடும் செலவழிக்கும் நேரத்தைவிட, தொழில்நுட்பங்களுக்கு ஒருபோதும் அதிக முக்கியத்துவம் கொடுக்கக் கூடாது என்று மறையுரையில் கூறியத் திருத்தந்தை, இக்காலத் தொழில்நுட்பத்தின் அதிவேக முன்னேற்றம், பல நேரங்களில் மற்றவர் மீது அச்சத்தை ஏற்படுத்தி, சந்திப்புக்களுக்கு பல கதவுகளை மூடுகின்றது என்றும், பல்பொருள் அங்காடிகளும், இணையதளத் தொடர்புகளும் எப்போதும் திறந்திருக்கின்றன என்றும் கூறினார்.

அர்ப்பணிக்கப்பட்ட துறவு வாழ்வில் இவ்வாறு அமையக் கூடாது என்றும், இறைவனால் தனக்குக் கொடுக்கப்பட்டுள்ள சகோதர, சகோதரிகள், என் வரலாற்றில் ஓர் அங்கம் என்றும், அவர்கள் கொடைகளாக நோக்கப்பட்டு, பேணி பாதுகாக்கப்பட வேண்டும் என்றும், துறவியரிடம் திருத்தந்தை கூறினார்.

நம் சகோதர, சகோதரிகளின் கண்களை உற்றுநோக்குவதைவிட, நம் கைபேசித் திரைகளை ஒருபோதும் பார்க்காதிருப்போம் என்றும், ஆண்டவரை நோக்குவதைவிட, நம் மென்பொருள்களை அதிகம் நோக்காதிருப்போம் என்றும் கூறியத் திருத்தந்தை, துறவிகள், இவ்வுலக வாழ்வில் சிக்குண்டு இருப்பதற்கு எதிராகவும் எச்சரித்தார்.

அர்ப்பண வாழ்வும், கற்பு, ஏழ்மை, பணிவு ஆகிய வார்த்தைப்பாடுகளும், என்றென்றும் நிலைத்திருக்கும் இறைவனிடமிருந்து எவ்வாறு நொடிப்பொழுதில் அடித்துச் செல்லப்படுகின்றன என்பதையும் விளக்கிய திருத்தந்தை, இவ்வுலக வாழ்வு, தன்னல இன்பங்களாலும் ஆசைகளாலும் நிறைந்துள்ளது என்றும் கூறினார்.

இந்த விழா, கீழைத் திருஅவைகளில், சிலவேளைகளில் சந்திப்பின் விழா என அழைக்கப்படுகின்றது என்றும், அர்ப்பண வாழ்வு வாழ்வோரின் அழைப்பு, ஆண்டவரோடும், அவரின் அழைப்போடும் சந்திப்பு நிகழ்த்துவதிலிருந்து பிறப்பதாகும் என்றும் கூறினார், திருத்தந்தை பிரான்சிஸ்.

வயது முதிர்ந்த சிமியோன் போன்று, கத்தோலிக்கர், தங்கள் கரங்களில் ஆண்டவரை ஏந்தியிருப்பது நல்லது என்றும், ஆண்டவரோடும், நம் சகோதர, சகோதரிகளோடும் சந்திப்பு நடத்தும்போது, நம் இதயங்கள், கடந்த காலம் அல்லது எதிர்காலம் பற்றி கவலைப்படாமல், நிகழ்காலத்தில் நிலைத்திருக்கும் என்றும், மறையுரையாற்றினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

## திருத்தந்தையின் பொன்மொழிகள்



1. வன்முறை வழியாக அமையும் வெற்றிகள் போலியானவைகளே, அதே வேளை அமைதியாக உழைப்பது எல்லோருக்கும் நன்மை பயக்கும்.
2. ஊழல் என்பது மரணக் கலாச்சாரத்திற்கு இட்டுச்செல்லும் ஒரு மரண நடவடிக்கை ஆகும்.
3. வாழ்வில் தொழில்நுட்பம் ஒருபோதும் உயர்ந்த இடத்தைக் கொண்டிருக்க முடியாது.
4. இறைவனோடும், மற்றவரோடும் செலவழிக்கும் நேரத்தைவிட தொழில்நுட்பங்களுக்கு ஒருபோதும் அதிக முக்கியத்துவம் கொடுக்கக் கூடாது.
5. கடவுளின் பெயரை பயன்படுத்துவது மிகப்பெரிய தெய்வநிந்தனைகளில் ஒன்றாகும்.
6. இறையாட்சி குறித்த இயேசுவின் நற்செய்தி அறிவிப்பு, தெருக்களிலேயே தனக்குரிய இடத்தைக் கண்டுகொள்கிறது. அங்கே அறிவிக்கப்படும், இந்த மகிழ்வுச் செய்தி, மேலும் பல ஊர்களுக்கு எடுத்துச்செல்லப்பட வேண்டும் என்பதையும், நாமும் வெளி உலகை நோக்கிச் செல்லவேண்டும்.
7. பாவிகள் புனிதர்களாக மாறமுடியும். ஆனால் வேண்டுமென்றே தவறான வழியில் செல்வோர் புனிதராக முடியாது.
8. ஒவ்வொருநாளும், நம் உள்ளத்தில் நிகழ்வனவற்றை விழிப்புடன் கண்காணிப்பது அவசியம். விழிப்புடன் வாழும் உள்ளமே, மகிழ்வுடன் வாழ முடியும்.
9. பொறுமை என்பது தோல்வியை ஒத்துக்கொண்டு ஒதுங்கிவிடுவதல்ல, மாறாக துன்பத்தையும் பொறுப்புணர்வோடு ஏற்று, மகிழ்ச்சியில் முன்னோக்கிச் செல்வதாகும்.
10. அறியாமை, மனித வர்க்கத்திற்கு எதிரான விவகாரத்தை ஏற்பதற்கு மனமின்மை, வெளிவேடம் ஆகிய மூன்றும், நவீன கால அடிமைமுறைக்குக் காரணங்கள்

# ஏழைகளோடு ஏழைகளாக வாழ்வதே நற்செய்தி அறிவிப்புக்கு பலம்



இம்மாதம் 23ம் தேதி, உலக அமைதிக்கான செப நாள் சிறப்பிக்கப்படும்போது, சிரியாவிற்காக சிறப்பான விதத்தில் செபிக்கப்படும் என கிரேக்க மெல்கித்திய ஆயர் மன்றத்தின் பிரதிநிதிகளை திருப்பீடத்தில் சந்தித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் உறுதி கூறினார்.

மத்தியக் கிழக்குப் பகுதியில் ஆழமாக வேரூன்றியுள்ள கிரேக்க மெல்கித்திய வழிபாட்டு முறை கத்தோலிக்க சபை, துன்பகரமான இந்தச் சூழலில், தங்கள் விசுவாச வாழ்வை உறுதியாக வாழுமாறும், அப்பகுதி மக்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குமாறும் அழைப்பு விடுத்தார் திருத்தந்தை.

துன்புறும் மக்கள், தங்கள் சொந்த இடங்களை விட்டு வெளியேறும் சோதனையை தடுக்கவும், ஒன்றிப்பிலும், ஒருமைப்பாட்டிலும், சாட்சிய வாழ்விலும், நெருக்கமாக வாழவும், கிரேக்க மெல்கித்திய திருஅவை அதிகாரிகள் உதவ வேண்டும் எனவும் கேட்டுக்கொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், திருஅவை அதிகாரிகள் இவ்வுலக இன்பங்களில் ஆர்வம் காட்டாமல், விசுவாசிகளின் திருப்பயணத்தில் உடன் செல்பவர்களாக இருக்கவேண்டும் என கேட்டுக் கொண்டார்.

துன்புறும் ஏழை மக்கள் நடுவே, இவ்வுலக சுகங்களை விட்டுக் கொடுத்து ஏழ்மையில் வாழும்போதுதான், உயிர்ப்பின் நம்பிக்கையை நாம் எடுத்துரைக்க முடியும் எனவும் கூறினார் திருத்தந்தை.

## லூர்து நகரில் ஒரு புதுமை அதிகாரப்பூர்வ அங்கீகாரம்




பிரான்ஸ் நாட்டின் லூர்து நகர் அன்னை மரியா திருத்தலத்தில், இவ்வாரத்தில் ஒரு புதுமை, கத்தோலிக்கத் திருஅவையால் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

லூர்து அன்னை விழாவும், உலக நோயாளர் நாளுமான, மாசி 11, ஞாயிறன்று, பிரான்ஸ் நாட்டின் Beauvais ஆயர் Jacques Benoit-Gonin அவர்கள், அந்தப் புதுமையை அதிகாரப்பூர்வமாக அறிவித்தார்.

பிரான்ஸ் நாட்டு அருள்சகோதரி Bernadette Moriau அவர்களுக்கு, முதுகுத்தண்டுவடத்தில் ஏற்பட்ட பிரச்சனையால், 1980ம் ஆண்டிலிருந்து மாற்றுத்திறனாளியாக சக்கர நாற்காலியில் வாழ்வைச் செலவழித்து வந்தார். இவர் 2008ம் ஆண்டில் லூர்து நகருக்குத் திருப்பயணம் மேற்கொண்டவேளையில், திருத்தலத்தில் நோயாளர்களை ஆசிர்வதித்த வழிபாட்டில் கலந்துகொண்டார். அதற்குப்பின் இவர் தனது உடலில் ஏதோ மாற்றம் நிகழ்வதை உணர்ந்தார். உடம்பு முழுவதும் நலமடைவதாகவும், உடலில் ஒருவித வெப்பத்தையும் இவர் உணர்ந்தார். அறைக்குச் சென்றபின், “உனது கட்டுக்களை அவிழ்” என்ற குரலை, தான் கேட்டதாகவும், சக்கர நாற்காலியின்றி தன்னால் நடக்க முடிந்ததாகவும் 79 வயது நிரம்பிய அச்சகோதரி கூறியுள்ளார்.

பின்னர் லூர்து நகரிலுள்ள பன்னாட்டு மருத்துவக் குழுவிடம் இச்சகோதரி அழைத்துச் செல்லப்பட்டார். இச்சகோதரி குணமானது, உண்மையிலேயே புதுமை என்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தப் புதுமை, லூர்து நகரில், அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட எழுபதாவது புதுமையாகும். லூர்து அன்னை மரியிடம் செபித்ததால், ஏழாயிரத்துக்கும் மேற்பட்ட புதுமைகள் நடந்துள்ளன. ஆயினும் கத்தோலிக்கத் திருஅவை, எழுபது புதுமைகளையே இதுவரை அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்துள்ளது.






தொகுப்பு : ஓய்வு பெற்ற பேராயர்
அதிமேதகு ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகை
கொழும்பு உயர் மறைமாவட்டம்

கத்தோலிக்க குடும்ப மறைக்கல்வி
Catholic Family Catechism

**70. அவரது இறப்பின் பின்பு, இயேசுக் கிறிஸ்துவுக்கு என்ன நடந்தது?**

அவரது இறப்பின் பின்பு, அவரது ஆன்மா, அவரது உடலிலிருந்து விலகியது. ஆனால் அவரது தெயிவீகத்தன்மை, அவரது உடலோடும், ஆன்மாவோடும் ஒன்றித்து இருந்தது. இயேசுவின் இறப்பின் பின்பு, அவரது ஆன்மா அவரது உடலிலிருந்து பிரிந்து கீழ் உலகிற்கு இறங்கி, அங்கு இறந்த பின்பு மீட்புக்காக காத்திருந்தோருக்கு மீட்பின் நற்செய்தி அறிவிக்கப்பட்டது.

கீழ் உலகு / பாதாளம் / நரகம் என்பது சாத்தானின் இராச்சியம் அல்லது அது ஒரு 'லிம்போ' என அழைக்கப்படும் ஓர் இடம். கிறிஸ்துவில் நிறைவாக்கப்படவேண்டிய மீட்புக்காக நீதிநெறி முறைப்படி வாழ்ந்து இறந்த ஆன்மாக்கள் காத்திருந்தார்கள். மோட்சத்தை தமதாக்கிக் கொள்ள தகுதியற்றோர் சேரும் இடமே நரகம்.

**71. இயேசுக்கிறிஸ்து இறந்த பின்பு அவருடைய உடலை அவர்கள் என்ன செய்தார்கள்?**

இயேசு இறந்த பின்பு அவரது உடலை, அவர்கள் ஒரு கல்லறையில் அடக்கம் செய்தார்கள்.

"அவர்கள், "ஐயா, அந்த எத்தன் உயிருடன் இருந்தபொழுது மூன்று நாளுக்குப் பின்பு நான் உயிருடன் எழுப்பப்படுவேன்' என்று சொன்னது எங்களுக்கு நினைவிலிருக்கிறது. ஆகையால் மூன்று நாள்வரை கல்லறையைக் கருத்தாய்க் காவல் செய்யக் கட்டளையிடும். இல்லையெனில் அவருடைய சீடர்கள் ஒருவேளை வந்து அவன் உடலைத் திருடிச் சென்றுவிட்டு, 'இறந்த அவர் உயிருடன் எழுப்பப்பட்டார்' என்று மக்களிடம் சொல்ல நேரிடும். அப்பொழுது முந்தின ஏமாற்று வேலையைவிடப் பிந்தினது மிகுந்த கேடு விளைவிக்கும்" என்றனர். அதற்குப் பிலாத்து அவர்களிடம், 'உங்களிடம் காவல் வீரர்கள் இருக்கிறார்கள். நீங்களே போய் உங்களுக்குத் தெரிந்தபடி கருத்தாய்க் காவல் செய்யுங்கள்' என்றார். அவர்கள் போய்க் கல்லறையை மூடியிருந்த கல்லுக்கு முத்திரையிட்டு, காவல் வீரரைக் கொண்டு கருத்தாய்க் காவல் செய்ய ஏற்பாடு செய்தார்கள்" (மத். 27:65-66)

**72. இயேசுக்கிறிஸ்து எப்போது இறப்பிலிருந்து உயிர்த்தார்?**

இயேசுக்கிறிஸ்து இறந்த மூன்றாம் நாள், அதாவது உயிர்த்த ஞாயிறு அன்று உயிர்த்தார்.

இறந்த பின்பு உயிர்வாழ்வுக்கு திரும்பியதுதான் இயேசு ஆற்றிய ஆகப் பெரிய அருங்குறி. அவரது உடலும் ஆன்மாவும் மீண்டும் ஒன்றிணைந்தது. இப்போது அவரது மகிமையடைந்த உடல் மீண்டும் துன்பத்துக்கு ஒருபோதும் உள்ளாகாது. அதே சமயம் கண்ணாடியூடாக ஒளி ஊடுருவி செல்வதுபோல் திண்மப் பொருட்களுடாகவும் ஊடுருவி செல்லக் கூடிய வல்லமை அவருக்கு இருக்கிறது.

"நான் பெற்றுக்கொண்டதும் முதன்மையானது எனக் கருதி உங்களிடம் ஒப்படைத்ததும் இதுவே மறைநூலில் எழுதியுள்ளவாறு கிறிஸ்து நம் பாவங்களுக்காக இறந்து, அடக்கம் செய்யப்பட்டார். மறைநூலில் எழுதியுள்ளவாறே மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்பட்டார்" (1கொரி. 15:3-4)

"இறந்து உயிருடன் எழுப்பபட்ட கிறிஸ்து இனிமேல் இறக்கமாட்டார் இனி அவர் சாவின் ஆட்சிக்கு உட்பட்டவர் அல்ல என நாம் அறிந்திருக்கிறோம்" (உரோ. 6:9)

**73. ஏன் இயேசுக்கிறிஸ்து இறப்பிலிருந்து உயிர்த்தார்?**

தாம் இறைவன் என்பதை நிரூபிக்கவும், நாமும் ஒரு நாள் இறப்பில் இருந்து உயிர்ப்போம் என்பதை நிருபிக்கவுமே அவர் இறப்பிலிருந்து உயிர்த்தார்.

பணிக்கென அனுப்பப்பட்டவர் கஷ்டங்களை சந்திக்கும்போது, அவருக்கு உதவி கொடுப்பது நமது கடமையாகும். இயேசுக்கிறிஸ்து பணி புரிய அவர் தம் தந்தையால் இவ்வுலகுக்கு அனுப்பப்பட்டார். அந்தப் பணியினை நிறைவு செய்தல் காரணமாக சாவுக்கு உள்ளானார். ஆகவே அவரை காப்பது தந்தையின் கடமையாயிற்று.

இந்த வகையில் உயிர்ப்பானது, இயேசுவின் பணியானது தந்தையால் ஏற்றுக்கொள்ளப்பட்டமைக்கும், உறுதி செய்யப்பட்டமைக்கும் சான்றாக அமைகின்றது. இது, இயேசு இப்பணிக்கென தந்தையால் அனுப்பப்பட்டதையும், அப்பணிதனை இயேசு முறையே செய்ததையிட்டும், தந்தையானவர் மிகவும் திருப்தி கொண்டுள்ளார் என்பதையும் எண்பிக்கின்றது. அவரது சீடர்கள் காண, இயேசு பரலோகத்திற்கு எழுந்தருளினது அவரது தெய்வீகத்தின் உச்ச நிலைப்பாட்டிற்கு சான்றாக அமைகிறது.

"ஆண்டவர் இயேசுவை உயிர்த்தெழச் செய்த கடவுளே எங்களையும் அவரோடு உயிர்த்தெழச் செய்து அவர் திருமுன் நிறுத்துவார் உங்களையும் அவ்வாறே நிறுத்துவார் என்பது எங்களுக்குத் தெரியும்." (2 கொரி. 4:14)

**74. கிறிஸ்து உயிர்த்த பின்பு, ஏன் 40 நாட்கள் உலகில் தங்கியிருந்தார்?**

இயேசுக்கிறிஸ்து, உயிர்ப்பின் பின்பு நாற்பது நாட்கள் இவ்வுலகில் தங்கியிருந்தது, தாம் உண்மையிலேயே இறப்பிலிருந்து எழுப்பப்பட்டார் என்பதை நிரூபிப்பதற்காகவே.

அப்போஸ்தலர்கள், இயேசுவின் உயிர்ப்பு பெறுமட்டும், அதை அவர்கள் ஒருபொழுதும் எதிர்பார்க்கவில்லை. உயிர்ப்பின் பின்பும்கூட அவர்கள் அவரை காணுமட்டும் அதை நம்ப தயங்கினார்கள். எனவே, உயிர்ப்பின் நிகழ்வு அப்போஸ்தலரது கட்டுக்கதை என்பதை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

நாற்பது நாட்களடங்கிய காலப்பகுதியில் இயேசு பல முறைகள் அப்போஸ்தலர்களுக்கும், சில பெண்களுக்கும், மேலும் கிட்டத்தட்ட ஐநூறு பேருக்கும் தோன்றினார். அவர்கள் அவரை தொடவும், காணவும், அவரோடு உணவு அருந்தவும் வாய்ப்புப் பெற்றார்கள்.

"இயேசு துன்புற்று இறந்தபின்பு நாற்பது நாள்களாக அவர்களுக்குத் தோன்றி, இறையாட்சியைப் பற்றிக் கற்பித்தார் பல தெளிவான சான்றுகளால் தாம் உயிரோடு இருப்பதைக் காண்பித்தார்". (தி.ப 1:3)

**75. எப்போதும் இயேசு விண்ணகம் எழுந்தருளினார்?**

அவர் உயிர்த்த நாற்பது நாட்களுக்குப் பின்பு விண்ணகத்திற்கு எழுந்தருளினார். இப்போது இயேசு தந்தையுடன் இருந்து நமக்காக பரிந்து பேசுகிறார்.

"இவற்றைச் சொன்னபின்பு, அவர்கள் கண்கள் முன்பாக அவர் மேலே எடுத்துக்கொள்ளப்பட்டார். மேகம் ஒன்று அவரை எடுத்துச் சென்று அவர்கள் பார்வையிலிருந்து மறைத்துவிட்டது. அவர் செல்லும் போது அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டே இருந்தார்கள். அப்போது வெண்ணுடை அணிந்த இருவர் தோன்றி, "கலிலேயரே, நீங்கள் ஏன் வானத்தைப் பார்த்துக் கொண்டே நிற்கிறீர்கள்? இந்த இயேசு உங்களிடமிருந்து விண்ணேற்றமடைந்ததைக் கண்டீர்களல்லவா? அவ்வாறே அவர் மீண்டும் வருவார்" என்றனர்." (தி.ப 1:9-11)

**76. இப்போது இயேசுக்கிறிஸ்து எங்கே இருக்கின்றார்?**

அவர் கடவுளாக எங்கும் வியாபித்திருக்கிறார். மனிதனாக விண்ணகத்திலும், பரிசுத்த நற்கருணையிலும் பிரசன்னமாக இருக்கிறார். உலக முடிவில் நம் அனைவருக்கும் தீர்ப்புக் கூற வருவார்.

**பாடங்கள் தொடரும்...**

COLOMBO CATHOLIC BOOKSHOP

# அறிவித்தல்

கொழும்பில் இல 2, ஞானார்த்த பிரதீபய, மாவத்தையில் அமைந்திருக்கும் கத்தோலிக்க புத்தகசாலையானது 12.02.2018ம் திகதி முதல் ஒருமாத காலத்திற்கு மூடப்பட்டிருக்கும் என்பதை அறியத்தருகின்றோம்.

எனவே, இரு வாரகாலத்திற்குள் எமது விநியோகஸ்தர்களுக்கு அவர்களது பொருட்களை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் : இயக்குனர்**

# மாந்தை திருத்தலத்தின் திருவிழா



மடுமாதாவின் பூர்வீக இடமாகிய மாந்தை திருத்தலத்தின் திருவிழா திருப்பலியானது 17.2.2018 சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு

**மன்னார் மறைமாவட்ட ஆயர்**

**கலாநிதி. பிடேலிஸ் லயன்ஸ் இம்மானுவேல் பர்னாந்து**

ஆண்டகையின் தலைமையில் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்படும்.

16.2.2018 வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு திருச்சிலுவைப் பாதையும் அதனைத் தொடர்ந்து மாலை ஆராதனையும் நடைபெறும். இவ்விழாவில் தாங்களும் கலந்து கொண்டு அன்னையின் ஆசீர் பெற்றுச் செல்ல அன்புடன் அழைக்கின்றோம்.

**தகவல் : பரிபாலகர், பங்கு மக்கள், மாந்தை**

# கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையினால் நியமிக்கப்பட்ட நியமனங்கள்

1. அருட்பணி. நிகால் ஐவன் பெரேரா - குருமுதல்வர் - மத்திய கொழும்பு
   - பங்குத்தந்தை - அனைத்து புனிதர்கள் ஆலயம், பொறளை
2. அருட்பணி. பிரசன்ன கிறிஸ்டோப்பர் பெரேரா - பொறுப்பாளர் - மாக்சிறி இல்லம்

**தகவல் : அருட்பணி. டெனின்டன் சுபசிங்ஹ அடிகள்**
**செயலாளர் – நிர்வாகம்**

# இரத்தினபுரி மறைமாவட்டத்தில் 5வது தடவையாக தியானிக்கும் திறந்த வெளி சிலுவைப்பாதை



இரத்தினபுரி கலகொடை பங்கு வருடா வருடம் நடாத்திவரும் திறந்தவெளி சிலுவைப்பாதை எதிர்வரும் பங்குனி மாதம் 10ம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு ஆரம்பிக்கப்படும்.

மலையக மக்களுக்கான விசேட விதத்தில் தமிழ் மொழி மூலம் ஒழுங்கு செய்யும் திருச்சிலுவைப்பாதை கலகொடை தேயிலை தொழிற்சாலையில் ஆரம்பிக்கப்பட்டு புனித சவேரியார் ஆலய வழியாக சென்று வழமையான திருகல்லறை ஆலயத்தில் திருப்பலியுடன் நிறைவுபெறும்.

**தகவல் : மேரி இருதயநாதன், மறையாசிரியர்**

## பதுளை மறைமாவட்ட ஆயரின் மேய்ப்புப்பணி மடல்

# இறைவார்த்தை மற்றும், வளர்ந்தோர் மறைக்கல்வி ஆண்டு

2018ம் ஆண்டு, திருவழிபாட்டு நாட்காட்டியிலே நற்செய்தியாளர் தூய மாற்குக்கு ஒதுக்கப்பட்டு "இறைவார்த்தை மற்றும் வளர்ந்தோர் மறைக்கல்வி" ஆண்டாக நாங்கள் அனுசரிக்கின்றோம். நான்கு நற்செய்திகளிலும் மிகவும் சிறியதாக இருக்கும் தூய மாற்குவின் நற்செய்தி ஏனைய இரண்டு ஒத்தமை நற்செய்திகளான தூய மத்தேயு, தூய லூக்கா என்பவற்றுக்கு ஊற்றாக அமைந்துள்ளது. அவர் தன்னுடைய நற்செய்தியிலே முதலாவது அதிகாரத்திலே, பதினைந்தாவது வாக்கியத்திலே இயேசு எப்படி தனது பகிரங்க பணியை ஆரம்பித்தார் என்பதை குறிப்பிடுகிறார்.

"காலம் நிறைவேறிவிட்டது, இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது, மனம்மாறி நற்செய்தியை நம்புங்கள்" (மாற் 1:15) வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் நம்மை மாற்றுவதற்கும், மனம் மாறுவதற்கும் இடமிருக்கிறது. இறைவார்த்தை மனம் மாற்றுவதற்கு அழைக்கிறதே அன்றி விரக்திக்கோ, ஏமாற்றத்திற்கோ, மனக் கவலையடையவோ, பரிதாபப் படவோ அல்ல. மாறாக, மன்னித்து, குணப்படுத்தி, நம்பிக்கையூட்டி, மகிழ்வை தருவதன் வழியாக கடவுளின் அன்பை சுவைக்க அழைக்கின்றது. இயேசு தன்னுடைய முதல் நான்கு சீடர்களை அழைத்து, அவர்களுடன் தன்னுடைய இறைவார்த்தை பணியை தொடங்கினார். "அவருடைய போதனையைக் குறித்து மக்கள் வியப்பில் ஆழ்ந்தார்கள். ஏனெனில் அவர் மறைநூல் அறிஞரைப் போலன்றி, அதிகாரத்தோடு அவர்களுக்கு கற்பித்து வந்தார்" (மாற் 1:22) இறைவார்த்தை வாழப்படுகின்ற பொழுது அது உண்மை தன்மையையும், அதிகாரத்தையும் அடைந்து கொள்கின்றது.

"திருச்சட்டத்தையோ, இறைவாக்குகளையோ நான் அழிக்க வரவில்லை. ஆனால் அவற்றை நிறைவேற்றுவதற்கே வந்தேன் என்று இயேசுவே உறுதிப்படுத்தியுள்ளார்" (மத் 5:17-18) ஆகையால் நாங்கள் திருச்சட்டங்களையும், இறைவாக்குகளையும், இறைவாக்குகளுக்கு எல்லாம் இறைவாக்காக இருந்து, இவையெல்லாம் தன்னிலே நிறைவு செய்பவருமாகிய இயேசுவையும் ஆழமாக அறிந்து கொள்வது மிகவும் அவசியமாகும். "இறைவார்த்தையை அறியாதவன் கிறிஸ்துவை அறிந்து கொள்வதில்லை" என்கிறார் இறைவார்த்தையை மொழி பெயர்த்தவரும், அதற்கு விளக்கவுரைகள் எழுதியவருமான புனித ஜெறோம்.

"நற்செய்தியை முன்னிட்டு வெட்கப்படமாட்டேன், ஏனெனில் அதுவே கடவுளின் மீட்பளிக்கும் வல்லமை" (உரோ 1:16) என்கிறார் தூய பவுல் அடிகளார். இறைவார்த்தை எங்கள் சிந்தனைகளை, வாழ்வின் செயற்பாடுகளில் ஆதிக்கம் செலுத்தி, நாம் எடுக்கும் தீர்மானங்களை, முடிவுகளை தீர்மானிக்கட்டும். "மழையும், பனியும் வானத்திலிருந்து இறங்கி வருகின்றன. அவை நிலத்தை நனைத்து, முளை அரும்பி வளரச் செய்து, விதைப்பவனுக்கு விதையையும், உண்பவனுக்கு உணவையும் கொடுக்காமல் அங்கு திரும்பிச் செல்வதில்லை, அவ்வாறே, என் வாயிலிருந்து புறப்பட்டுச் செல்லும் வாக்கும் இருக்கும். அது என் விருப்பத்தை செயல்படுத்தி, எதற்காக நான் அனுப்பினேனோ அதை வெற்றிகரமாக நிறைவேற்றாமல் வெறுமையாய் என்னிடம் திரும்பி வருவதில்லை" (எசா 55:10-11). எவ்வாறு இறைவார்த்தையைக் கேட்டு அதன்படி வாழ்பவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்களோ, அவ்வாறே இறைவார்த்தையைக் கேட்காமலும், அதன்படி வாழாதவர்களும் கடவுளின் நீதி தீர்ப்புக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கும் (இ.ச 18:19)

நாம் எம்முடனும், கடவுளுடனும், மற்றவர்களுடனும் நேர்மையாக வாழ வேண்டுமா? அப்படியானால் இறைவார்த்தை எங்கள் மனங்களில், இதயங்களில் ஆழ ஊடுறுவட்டும், எங்களை வெளிப்படுத்தட்டும், எங்கள் மனசாட்சிகளிடம் பேசட்டும், ஆண்கள், பெண்களாகிய நாம் வாழ்வின் ஒருமைப்பாட்டை அடைய உதவி புரிந்து நமது மகிழ்ச்சியின் காரணமாக அமையட்டும். எபிரேய திருமுகத்தை எழுதிய ஆசிரியர் நமக்கு இவ்வாறு கற்பிக்கின்றார். "கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது, ஆற்றல் வாய்ந்தது, இருபக்கமும் வெட்டக்கூடிய எந்த வாளினும் கூர்மையானது, ஆன்மாவையும் ஆவியையும் பிரிக்கும் அளவுக்குக் குத்தி ஊடுருவுகிறது, எலும்பு மூட்டையும் மச்சையையும் அவ்வாறே ஊடுருவுகிறது, உள்ளத்தின் சிந்தனைகளையும் நோக்கங்களையும் சீர்தூக்கிப் பார்க்கிறது. படைப்பு எதுவும் கடவுளுடைய பார்வைக்கு மறைவாய் இல்லை. அவருடைய கண்களுக்கு முன் அனைத்தும் மறைவின்றி வெளிப்படையாய் இருக்கின்றன. நாம் அவருக்கே கணக்குக் கொடுக்கவேண்டும். (எபி 4:12-13)

இவ்வார்த்தைகள் நம்மை பயப்படுத்த அல்ல மாறாக, எங்களை விடுவித்து நமக்குள் இருக்கும் நன்மைத் தனங்களை வெளிக்கொணர்ந்து, நமக்கு கடவுள் தந்த ஆற்றல்களில் வளர்வதற்குமாகும். எனவே நாம் பாவத்திற்கும், தீமைக்கும் அடிமையாகாமல் வார்த்தை மனுவுருவான கிறிஸ்து வழியாக சுதந்திரம், சக்தி, அமைதி, வாழ்வில் மகிழ்ச்சியை அனுபவிப்போமாக. நம் ஆண்டவர் தம் அன்பு மகனும், நாம் அன்பு செய்தவருமாகிய எமது மீட்பர் இயேசுவை நமது குடும்பங்களிலே, சமூகத்திலே இந்த உலகத்தின் குடி மக்களாக முதிர்ச்சி உள்ளவர்களாக, பொறுப்புள்ளவர்களாக நம்மை வாழ அழைக்கின்றார். நாமும் இறைவார்த்தை என்னும் தீபத்தை ஏந்தி, நம்மிலே, மற்றவர்களிலே, நம் அன்பான தேசத்திலே இருக்கக்கூடிய இருளின் வடிவங்களான தீமை, துன்பம் வருத்தம் முதலியவற்றை அகற்றுவோம்.

இறைவார்த்தை பணியிலே பங்கெடுத்து, சமூக மாற்றத்தின் கருவிகளாக அழைப்புப் பெற்ற நாம், நம் குடும்பங்களிலே, நம் அயலவர்கள் மத்தியிலே, நம்முடைய பல்சமய உரையாடல்களிலே, நம் வேலைத் தளங்களிலே, எல்லா விதமான சமூக நிறுவனங்களில், நம் கலாச்சாரத்திலே, அரசியலிலே, எல்லா விதமாக கல்வி சார் துறைகளிலும், துறைசார் தொழில்களிலும், கவின் கலைகளில், கலை சார்ந்த வெளிப்பாடுகள், விளையாட்டு, பொழுதுபோக்கு, புத்தூக்க முயற்சிகளிலே வாழ்வின், மகிழ்ச்சியின் பணியாளர்களாவோம்.

நம்முடைய இல்லங்களை நம்முடைய குடும்பங்களை மண்மீது அடித்தளமிட்டு கட்டாமல், இறைவார்த்தை என்னும் பாறை மீது அடித்தளமிட்டு கட்டுகின்ற கிறிஸ்துவின் உண்மை சீடர்களாவோம். (லூக் 6:46-49) இறைவார்த்தை வாசிக்கப்பட்டு, கேட்கப்பட்டு, தியானிக்கப்பட்டு, செபிக்கப்படுகின்ற பொழுது நம்முடைய இதயங்கள் அங்கலாய்த்து கிறிஸ்துவின் அன்புக்காக ஏங்கவேண்டும்.

எம்மாவு ஊருக்குச் செல்லுகின்ற வழியில் இயேசுவின் உயிர்ப்பின் பின்னர் இரு சீடர்கள் இயேசுவைச் சந்தித்து தங்கள் அனுபவத்தை இவ்வாறு வெளியிட்டார்கள். "வழியிலே அவர் நம்மோடு பேசி, மறைநூலை விளக்கும்போது நம் உள்ளம் பற்றி எரியவில்லையா?" (லூக் 24:32) தங்களின் பயணத்தின் இறுதியிலே இயேசுவினாலே இறைவார்த்தை பிட்கப்பட்ட பொழுதில்தான் அவர்கள் இயேசுவை அடையாளம் கண்டு கொள்வது அவர்களுக்கு அதிசயமான அனுபவத்தைக் கொடுத்தது. இறைவார்த்தைக்கும் நற்கருணைக்கும் ஆண்டவரின் பிரசன்னத்துக்கும் விளக்கம் தருவதைப் போல, நற்கருணை கடவுளின் வார்த்தையைப் புரிந்துகொள்ள நமக்கு வெளிச்சத்தைத் தருகின்றது.

திருப்பலியைக் கொண்டாட நம் ஆண்டவரினாலே அன்போடு அழைப்புப் பெற்ற நாங்கள் திரும்பவும் திரும்பவும் நம்முடைய இதயங்களை அவருடைய வார்த்தைக்கும் பிரசன்னத்துக்கும் திறக்க வேண்டும் என கேட்கப்படுகின்றோம். "இதோ, நான் கதவு அருகில் நின்று தட்டிக்கொண்டிருக்கிறேன். யாராவது எனது குரலைக் கேட்டுக் கதவைத் திறந்தால், நான் உள்ளே சென்று அவர்களோடு உணவு அருந்துவேன் அவர்களும் என்னோடு உணவு அருந்துவார்கள்". (திருவெளிப்பாடு 3:20) நமக்காக பரிந்துபேசுகின்ற தூய அன்னை தன் அன்பு மகன் கூறிய வார்த்தைகளுக்கு செவிமடுத்தாள். "இறைவார்த்தையைக் கேட்டு அதன்படி செயல்படுகின்றவர்களே என் தாயும் என் சகோதரர்களும் ஆவார்கள்" (லூக் 8:19-21) என்று இறைவார்த்தையிலே ஆழமாக வேரூண்றுவோம்.

### தீர்மானங்கள்

- ஒவ்வொரு வளர்ந்தோரும் குறைந்தது முப்பது வயதுக்கு மேற்பட்டவர்கள் அனைவரும் ஆளுக்கொரு பரிசுத்த வேதாகமத்தை உடைமையாக்குதல்.
- நாளாந்த இறைவார்த்தை வாசிப்புப் பழக்கத்தை ஒவ்வொரு வளர்ந்த கத்தோலிக்கரும் தமதாக்கிக் கொள்ளுதல்
- ஒவ்வொரு குடும்ப செபத்திலும் இறைவார்த்தையை வாசித்து, தியானித்து, செபிப்பதை பழக்கமாக கொள்வோம்.
- நமது எல்லா கூட்டங்களிளும் இறைவார்த்தையின் ஒரு பகுதியை வாசித்து பலதரப்பட்ட கலந்துரை-யாடல்களில் ஈடுபடல்
- வளர்ந்தோருக்கான ஒழுங்கமைக்கப்பட்ட இறைவா-ர்த்தைப் பற்றிய கல்விசார் திட்டத்தை பங்குகள் மட்டத்தில் செயல்படுத்துதல்
- மறைக்கோட்டம், மறைமாவட்டம் மட்டத்திலே வளர்ந்தோருக்கான இறைவார்த்தை கற்கை நெறிகளை ஒழுங்குபடுத்துதல்
- பங்கு மேய்ப்புப் பணி சபையோடு கலந்தாலோசித்து இவ்வருடத்துக்கான பங்குதிட்டங்களை அமைத்தல்




**மேதகு ஆயர். வின்ஸ்ரன் பெர்னாண்டோ S.S.S**
**பதுளை மறைமாவட்ட ஆயர்**
**2018**

புனித பேதுருவின் தலைமைப் பீடம் என்னும் சொற்கள் புனித பேதுருவுக்கு அகில உலக திருச்சபை மீதுள்ள அதிகாரத்தைக் காட்டுகின்றது. காரணம் ஆண்டவர் இயேசு திறவுகோளின் அதிகாரத்தை பேதுருவிடம் ஒப்படைத்தார். இவரது அதிகாரத்திற்கு மேம்பட்ட அதிகாரம் பூமியில் கிடையாது. இயேசு அவரை தம் திருச்சபையை கட்டப்பட இருந்த பாதையாகவும், அப்போஸ்தலர்களின் தலைவராகவும் நியமித்தார். பேதுரு கிறிஸ்துவின் பிரதிநிதி. அதிகாரம் அனைத்திற்கும் ஊற்று. போதிப்பதில் தவறா வரம் பெற்றவர். பரிசுத்த ஆவி இறங்கி வந்த பின் இந்த அதிகாரத்தைப் அவர் அப்பியாசித்தார். இந்தத் திருநாள் கி.பி 354ஆம் ஆண்டு முதல் கொண்டாடப்பட்டு வருகிறது.

எல்லா திருத்தந்தையர்களும் புனித பேதுருவின் வழித்தோன்றல்கள். எனவே அவர்கள் கிறிஸ்து ஏற்படுத்திய ஒரே திருச்சபையின் தலைவர்கள். இவர்களுக்கு அகில திருச்சபை மீது அதிகாரம் உண்டு.

புனித பேதுரு உரோமைக்குச் சென்று தமது தலைமைப் பீடத்தை அங்கு நிறுவினார். புனித சின்னப்பருடன் சேர்ந்து திருச்சபையை அங்கு கட்டி எழுப்பினார். "காத்தேட்ரா" என்பதற்கு ஆயரின் அரியணை என்பது பொருள். இதிலிருந்து தோன்றும் சொல்தான் "கத்தீட்ரல்" என்பது ஆயரின் அரியணை இருக்கும் ஆலயம் தான் "கத்தீட்ரல்" என்று அழைக்கப்படுகின்றது. புனித பேதுருவின் தலைமைப்பீடம் என்பது பேதுரு திருச்சபையின் தலைவர் என்பதைக் குறிக்கின்றது.




இத்திருநாளுக்குரிய கட்டளை செபத்தில் இரண்டாம் வாசகத்தில் கூறப்படுவதுபோல் இத்திரு-நாளைக் கொண்டாடுவதன் மூலம் குருத்துவப் பணி பெருமைப்படுத்தப்படுகின்றது.

## 03 ஆண்டவர் என் ஆயர்

தகுதியற்றவர்கள் என்று உங்களுக்கு நீங்களே தீர்ப்பளித்துக் கொண்டீர்கள்" (தி.ப 13:46) என்று திருத்தூதர் பவுலின் கண்டனம் சிந்திக்கத் தகுந்தது.

**3. நிலைவாழ்வு பெற மூன்றாவது தேவை – இயேசுவைப் பின்செல்வது.**

"நிலைவாழ்வு பெற செய்ய வேண்டியது என்ன என்ற கேள்விக்கு இயேசு சொன்ன பதில் "நிறைவுள்ளவராக விரும்பினால், நீர் போய், உம் உடைமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடும்... பின்பு வந்து என்னைப் பின்பற்றும்" (மத் 19:16,21)

**4. நிலைவாழ்வு பெற நான்காவது தேவை – இயேசுவோடு இணைவது.**

"எனது சதையை உண்டு என் இரத்தத்தைக் குடிப்பவர் நிலைவாழ்வைக் கொண்டுள்ளார்" (யோவா 6:54). கடவுள் நல்லாயனாகிப் புறத்தே உள்ள புல்வெளிக்கும் நீர் நிலைக்கும் அழைத்துச் சென்று பசிதாகம்போக்குவது மட்டுமல்ல, தன்னையே உணவாக, பானமாகத் தருகிறார் என்றால் தன்னோடு நம்மை ஐக்கியமாக்கிக் கொள்ள விரும்புகிறார் என்றுதானே பொருள்!. மேற்கூறிய இந்த நான்கு அம்சங்களையும் உள்ளடக்கி இயேசு கூறிய உவமைதான் "நானே நல்லாயன்" என்பது. இந்த நிலைவாழ்வு கிட்டுவது உலக முடிவிலோ, தனிநபர் இறப்பிலோ அல்ல. இப்போதே, இங்கேயே தொடங்குகிறது. திருவெளிபாடு 7:9ல் திருத்தூதர் யோவான் கண்ட காட்சியாக உணர்த்தப்படுவது செம்மறியாகிய இயேசுவைச் சுற்றியுள்ள சீடர்கள் அனைவருக்குமே உரியது.

குப்பை மேட்டில் தாய்க் கோழியின் குரலை இனம் பிரித்து நல்லதை உண்டு நஞ்சானதை விலக்கும் குஞ்சுகள் போன்று ஆயன் இறைவனின் குரல் கேட்டு மனிதன் செயல்படத் தொடங்கினால் எவ்வளவு நன்றாக இருக்கும்! இறைவனின் ஏக்கப் பெருமூச்சு இது!

## 01 பணத்தின் மீது வளரும்...

என்ற வார்த்தைகளை தன் செய்தியில் குறிப்பிட்டுள்ள திருத்தந்தை, இறைமக்கள் பலர், தற்காலிக இன்பங்களில் தங்களையே இழந்து, அடிமையாகி, தனிமையில் சிறைப்பட்டுள்ளனர் என்பதை எடுத்துரைத்துள்ளார்.

போலி இறைவாக்கினர்கள், துன்பங்களுக்கு எளிதான தீர்வுகளை முன்வைத்து, இளையோரை போதைப் பொருள்களுக்கு அடிமையாக்குவதுடன், பயன்படுத்தி, தூக்கியெறியும் உறவுகளையும், நேர்மையற்ற இலாபத்தை ஊக்குவிக்கின்றது. மற்றும் பணத்தின் மீது வளரும் மோகம், பிறரன்பை அழித்துவிடுகிறது என்பதையும் வலியுறுத்தியுள்ள திருத்தந்தை, இத்தவக்காலத்தில், செபம், பிறரன்பு செயல்கள், மற்றும் உண்ணா நோன்பு ஆகியவற்றின் வழியே, உலகின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணமுடியும் என்று தனது செய்தியில் கூறியுள்ளார்.

## 01 மரியன்னைக்கு தினமும்...

என கர்தினால் ஆண்டகை அவர்கள் தேவத்தை லூர்து அன்னை திருத்தலத்தில் தெரிவித்தார். "எமது வாழ்வின் துன்ப துயரங்கள், கவலைகள், பாவத்திற்கு அடிமையாதல், நோய்கள், குடும்பங்களில் ஒற்றுமையின்னை, பிள்ளைகள் வழிதவறிச் செல்லல் போன்ற பல பிரச்சினைகளுக்கு தீர்வானது இறையன்னை எமக்காக இறைவனிடத்தில் பரிந்து பேசுகையிலேயே. நாம் இறைவனின் அண்மைக்கு சென்றால் மட்டுமே வார்த்தையால் மட்டுமன்றி செயலினாலும் நாம் மரியன்னைக்கு மதிப்பளித்தால் எம் மன்றாட்டுக்குளுக்கு நிச்சயமாக அவர் செவிசாய்ப்பார் என்பதை கர்தினால் அவர்கள் தமது உரையில் கருத்துத் தெரித்தார்.

இவர் இக்கருத்துக்களை, தேவத்தையில் புதிதாக திறந்துவைக்கப்பட்ட லூர்து அன்னையின் ஆலய திறப்பு விழாவின் போது, நடைபெற்ற விசேட திருப்பலியின் மறையுரையிலேயே தெரிவித்தார்.

"இன்றைக்கு உண்மையான அன்பை நாம் வெளிப்படுத்தினால் தமக்கு என்றுமே பிழைக்காது தினந்தோறும் குடும்பமாக சேர்ந்து செபமாலை தியானிப்பதால் அவரது பக்தி முயற்சிகளில் ஈடுபடுவதன் மூலம் பிள்ளைகளை இறைவனிடத்திற்கு கொண்டு செல்வதால், மரியன்னைக்கு எமது அன்பையும், கௌரவத்தையும் வெளிக்காட்டலாம்" இவ்வாலயத்தில் மாதத்தில் முதற்சனிக்கிழமையில் நடைபெறவிருக்கும் திருப்பலியில் மெழுகுதிரி பவனிக்கும் மறைகோட்ட மற்றும் பங்கு ரீதியாக மக்களை அனுப்பி வைக்குமாறு அருட்தந்தையர்களுக்கு கர்தினால் ஆண்டகை அழைப்பு விடுத்தார். இவ்வாலயத்தை சிறப்பாக கட்டிமுடிப்பதற்கு பங்களித்த அருட்பணி. டெரல் கூஞ்சு அடிகளாருக்கும், அருட்பணி. விக்டர் ஜயமான்ன அவர்களுக்கும், பிரதான அனுசரனை வழங்கியவருக்கும், கட்டிட நிர்மானம் செய்த கலைஞர்களுக்கும், சேவையாளர்களுக்கும், கௌரவிப்பதற்கான நினைவுச் சின்னங்கள் கர்தினால் ஆண்டகையினால் வழங்கப்பட்டது. திருப்பலியின் நிறைவில் கர்தினால் உட்பட மேதகு ஆயர் மெக்ஸ்வஸ் சில்வா ஆண்டகை, அனைத்து குருக்கள், துறவிகள், மற்றும் பொதுநிலையினர் ஆகியோர் மெழுகுதிரி பவனியில் கலந்து கொண்டதோடு, அதைத்தொடர்ந்து கர்தினால் ஆண்டகை அர்ப்பண செபத்துடன் அன்னையின் திருச்சுரூபத்தால் சிறப்பாசீரும் வழங்கினார்.

## 02 கொழும்பு

1. விண்ணப்பத்தைப் பெற்றுக்கொள்ள உங்களது குடும்ப புத்தகம், குழந்தை திருமுழுக்கு பெற்றதற்கான சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ் அவசியம். இவ் ஆவணங்களை ஒவ்வொரு பாடசாலைக்கும் ஏற்றவிதத்தில் சமர்ப்பிப்பதுடன், விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள திருமுழுக்கு சான்றிதழினை சமர்ப்பித்தல் போதுமானது, அதனை பரிசீலித்துவிட்டு மீண்டும் உங்களுக்கே திருப்பிக் கொடுக்கப்படும். ஆனால் விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்கும் போது பிரதிகளை மாத்திரம் கொடுத்தால் போதும். குழந்தைகளை பாடசாலையில் சேர்க்கும் போது முதற் பிரதிகளை கொடுத்தல் அவசியமாகும்.
2. விண்ணப்பிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் பாடசாலை அனுமதி வழங்குவதற்கு போதிய இடவசதியின்மையின் காரணமாக, அரசாங்க பாடசாலைகளிலும் பிள்ளைகளுக்கான விண்ணப்பங்களை கோரவும்.
3. மேலும் பணம் பெறும் நோக்குடன் அனுமதியினை பெற்றுத்தருவதாக கூறும் நபர்கள் மட்டில் உங்கள் கவனத்தை செலுத்துவதோடு, அத்தகையவர்கள் பற்றிய விபரம் அறிந்தால் எமக்கு அறியத்தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

***அருட்பணி. ஐவன் பெரேரா, கொழும்பு உயர் மறைமாவட்ட கல்வி இயக்குனர், கத்தோலிக்க தனியார் பாடசாலை, அதிகாரி(W.P)***

## 09 ஆயிரக்கணக்கான...

இவ்வாறு தமது மறையுரையில் கருத்துத் தெரிவித்த கர்தினால் ஆண்டகை, கத்தோலிக்கர்களிடத்தில் இறையன்னையை எம் தாயாகக் கொடுத்தமைக்கு நன்றி கூறவும், மாதத்தின் முதற்சனிக்கிழமையில் இங்கு ஒன்றுகூடி மரியன்னை பக்தியை வளர்க்கவும், எம் பிரச்சினைகளை அவர் பாதத்தண்டையில் வைப்பதற்கும், ஒன்று சேருமாறு கேட்டுக்கொண்டார். இவ் அழைப்பை ஏற்று அதற்கு நாம் கீழ்ப்படிவோம். இறையன்னை எம்மை அன்பு செய்வதால், அவரிடத்திற்கு நாம் நமது அன்பை வெளிப்படுத்தவே செல்ல வேண்டும். அவருக்கு வணக்கம் செலுத்துவதற்கும் ஆகும்.

இறையன்னை அவரின் அன்பை எமக்கு பொழிவதால் அவரின் அரவணைப்பைத் தேடிச் செல்வது கத்தோலிக்கர்களாகிய எமக்கு ஓர் பிரச்சினையாக இருக்காது என்பதை தெரிவித்த கர்தினாலின் கூற்றுக்களை நன்கு உள்வாங்கி எம் அன்றாட வாழ்வின் செயற்பாடுகளின் போது விசுவாசத்துடன் வாழ்வதற்கு முயற்சிப்போம்.

**அருட்பணி. கெமிலஸ் பர்னாந்து**

**தமிழாக்கம் :......**

## 01 மதிப்பிற்குரிய தேரர்....

இவரை நான் நீண்டகாலமாக அறிந்திருந்தேன். சர்வதேச மத ஒருமைப்பாட்டு நிகழ்வின் போது அவருடன் நெருக்கமான முறையில் பழகுவதற்கான வாய்ப்பு கிட்டியது. அவரோடு கொண்ட நட்பால், அவரது உயரிய குணாதியங்களை உணர்ந்து கொண்டு, என் வாழ்விலும் அவற்றை செயற்படுத்துவதற்கு நான் முயற்சித்தேன் என்பதை கூறுவதற்கு நான் கடமைப்பட்டுள்ளேன்.

கோட்டை ஸ்ரீ களனி சமார்ஷ தர்ம மகா சங்க சபையின் அனைத்து பாலி மகா சபையின் உபதலைவர் பதவியில் கடமையாற்றிய அவர் பௌத்த சங்கத்தினருக்கும், பிக்குகளுக்கும் எமக்கும் முன்மாதிரிகையாக வாழ்ந்தார். மேலும் இவர் எம் நாட்டுக்கு ஆற்றிய உயரிய சேவை குறித்து நாம் அவரைப் பாராட்ட வேண்டும். இவரின் திடீர் மரணமானது என்னால் தாங்கிக் கொள்ள முடியாத விடயமாகவே உள்ளது. எனவே இலங்கைவாழ் கத்தோலிக்க மக்கள் சார்பில் இலங்கை பௌத்த மக்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றேன். அன்னாரின் ஆன்மா சாந்தியடைய வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை**

**கொழும்பு உயர்மறைமாவட்டம் 03.2. 2018**

## 01 உலக அமைதிக்காக...

இம்மாதம் 23ம் திகதி உலக அமைதிக்கான செபநாளாக கொண்டு அன்றை நாளை உலக அமைதிக்காக செபிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

உலகின் பல்வேறு பகுதிகளில் இடம்பெறும் கடுமையான ஆயுத மோதல்கள் அதிகரித்துக்கொண்டே வரும் இன்றையச் சூழலில், தவக்கால முதல் வாரத்தில் அதாவது 23ம் திகதி வெள்ளிக்கிழமையை, உலகின் அனைத்துக் கிறிஸ்தவரும், அமைதிக்கான செபம் மற்றும் நோன்பு நாளாகக் கடைப்பிடிக்குமாறு அழைப்பு விடுத்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள்,

கிறிஸ்தவர் அல்லாதவர்களும், இதே கருத்துக்காக இந்நாளை அர்ப்பணிக்க அழைப்பு விடுத்துள்ளார். அப்பாவி மக்கள் வேதனையிலும், துயரத்திலும் எழுப்பும் அழுகுரலை, நம் இறைத்தந்தை எப்போதும் கேட்டுக்கொண்டிருக்கின்றார் என்பதை மனதில்கொண்டு, நாமும் இந்த அழுகுரலைக் கேட்போம் என விண்ணப்பித்தார்.



## மணமகள் தேவை

தமிழ் றோமன் கத்தோலிக்கம், கொழும்பை வசிப்பிடமாகக் கொண்ட 1989.5.14ல் பிறந்த, உயரம் 5அடி 2 அங்குலம், வியாபாரம் செய்யும் மகனுக்கு நல்ல மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

**தொடர்புகளுக்கு 0774988878** (N 5701)

## 01 நாட்டின் சுதந்திரம்...

தாம் பின்பற்றும் மதமாகும்.

மேலும் எம் நாட்டுத் தலைவர்கள் எமது சமுதாயத்தின் வளர்ச்சிக்காக பாடுபடவேண்டுமேயன்றி, அவ்வளர்ச்சியை சீர்குலைப்பவர்களாக இருக்கக்கூடாது. அப்படி இருப்போமேயானால் நாம் பெற்ற சுதந்திரத்திற்கும் பலனில்லை என்று கூறினார். இவ்வாறான சுதந்திரத்திற்காக பாடுபட்ட எம் கத்தோலிக்க தலைவர்கள், அமைச்சர்கள், பொதுநிலையினருக்கு நாம் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம்.

திருப்பலிக்கு முன் தேசியக் கொடியும், கத்தோலிக்கக் கொடியும் கர்தினால் மற்றும் கிறிஸ்தவ செயற்பாட்டில் அமைச்சர் திரு. ஜோன் அமரதுங்க அவர்களால் ஏற்றிவைக்கப்பட்டது. மேலும், அருட்பணி டோனி மார்டீன், மரியாயின் சேனையின் பிராந்திப் பொறுப்பாளர் அருட்பணி அர்வின் மொராயஸ் அவர்கள் கூட்டுத் திருப்பலியை நிறைவேற்றியதுடன், மருதானை பங்குத்தந்தை அருட்பணி. டினால் பெரேரா அவர்களி உள்ளிட்ட கிறிஸ்தவ செற்பாட்டு (விவகார) அமைச்சினால் திருப்பலி ஒழுங்கு செய்யப்பட்டது

**தகவல் : T. சுனில் பர்னாந்து மற்றும் ரொஷான் பீரிஸ்**

## 05 நோன்பிருப்பதற்கு....

15. உங்களுக்கு இறைவன் தந்த கொடைகளைக் கண்டுபிடிப்பதற்காக.
16. பாரச்சுமைகளிலிருந்து விடுபடுவதற்காக
17. தூய்மையானதோர் உள்ளத்தையும் சரியான மனப்பான்மையையும் அடைந்து கொள்ளும் படியாக.
18. மாறுபாடான உணர்ச்சிகளிலிருந்து விடுபடும் படியாக
19. குணம் அடையும் படியாக
20. உங்களால் செய்ய இயலாதவற்றைச் செய்வதற்கு வலுப்பெறும் படியாக.

**அருட்பணி. றெஜிஸ் இராஜநாயகம்**

## 01 நீர்கொழும்பு ....

ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. இப்பவனியின் போது, இக்கவலைக்கிடமான நிலையிலிருந்து எம்மை விடுவிக்குமாறு, இறைவனைக் குறித்து பிரார்த்தனைகள். செய்யப்படும். நானும் இப்பவனியில் கலந்து கொள்ள முடிவெடுத்துள்ளேன். அதன் மூலம் இப்பிரதேசத்தில் இப்பிரச்சினையை தீர்ப்பதற்கு அனைவரினதும் பங்களிப்பை எதிர்பார்க்கின்றேன்.

அதேபோல், இச் சமூகக்கேடான செயலுக்கு சார்பாக இருந்து, மதுப் பொருட்களை விற்பனை செய்பவர்களுக்கு எதிராக போராடுவதற்கு எம்மோடு இணைந்து கொள்ளுமாறு அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றேன். மேலும் இச்சீர்கேடான மது விற்பனையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், அந்நடவடிக்கைகளை அமுல்படுத்த பின்வாங்க வேண்டாம் எனவும் எம் தலைவர்களுக்கும், பொறுப்பிலுள்ள அமைச்சர்களுக்கும் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

எம்மோடு இணைந்து இச்செயற்பாட்டிற்கு பங்களித்து, இளைஞர் யுவதிகளின் எதிர்காலத்தை மீட்பதற்கு இறைவனிடத்தில் செபிக்குமாறு அழைப்பு விடுக்கின்றேன்.

**இறையாசீர் உரித்தாகுக!**

**கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர்**

**அதிமேதகு. மல்கம் கர்தினால் றஞ்சித் ஆண்டகை**

## திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி

"விசுவாசத்தை வழங்குவதற்கு தூய ஆவியார் நமக்குத் தேவைப்படுகின்றார். நம்மால் அதைத் தனியாக ஆற்ற இயலாது"

"கடவுள் நம் வாழ்வில் பிரசன்னமாய் இருந்து, தமது அன்பு அனைத்தையும் வெளிப்படுத்துகின்றார் மற்றும் மனத்தாராளத்துடன் பதிலளிக்க நம்மை ஊக்கப்படுத்துகிறார்"

"மனித வர்க்கத்தால் பாதிக்கப்பட்டோர், மற்றும், போர், பட்டினி இவற்றிலிருந்து தப்பியோடிச் செல்வோர் ஆகியோரை, கனிவுள்ள உள்ளத்துடன் வரவேற்போமாக"

"மனித மாண்பு காயமடைந்த நிலையில் வாழும் இலட்சக்கணக்கான மக்களின் துன்பத்திற்கு முன் நாம் அமைதியாக இருக்க இயலாது"

# நல்லாயன் ஆண்டிற்கான மேய்ப்புப்பணி திருமடல்

# “கடவுளின் இதயத்திற்கேற்ற மேய்ப்பர்கள்”

## “என் இதயத்திற்கேற்ற மேய்ப்பர்களை உங்களுக்கு கொடுப்பேன்”(எரே.3.15)

## 2018 தை 14 தொடக்கம் 2019 தை 20 வரை

**அன்பின் சகோதர சகோதரிகளே!**

**“என் இதயத்திற்கேற்ற மேய்ப்பர்களை உங்களுக்கு கொடுப்பேன்”** (எரே.3:15) என்ற தமது வார்த்தைகளினூடாக தமது அன்பு நிறைந்த பாரமரிப்பிலிருந்த நம் மக்கள் இஸ்ராயேலரை கைநெகிழ்வதில்லை என இறைவாக்கினர் ஏரேமியா வழியாக இறைவன் வாக்குறுதி கொடுத்தார்: **“அவற்றைப் பேணிக்காக்க நான் மேய்ப்பர்களை நியமிப்பேன். இனி இவை அச்சமுறா, திகிலுறா, காணாமலும்போக”** (எரே.23:4) என்கிறார் ஆண்டவர். மேலும் தற்கால சூழ்நிலையில் குருக்களின் உருவாக்கம் என்ற ஆயர் பேரவைக்கு பின்னர் திருத்தந்தை தூய 2ம் யோவன் பவுல் வெளியிட்ட Pastores Dabo Vobis (PDV) எனும் அப்போஸ்தலிக்க அறிவுரை ஏட்டில் குறிப்பிட்டதாவது: **“இறைவனின் மக்களான திருச்சபை இவ்வாக்குறுதியை தொடர்ந்தும் அனுபவித்தவளாக, இறைவனுக்கு மகிழ்ச்சியோடு அயராது நன்றி செலுத்தி வருகின்றாள். இறைவனது மீட்பளிக்கும் அன்பினை உறுதிசெய்யும் இந்த வாக்குறுதியின் முழு நிறைவும் வாழ்கின்ற அதி உன்னதரான இயேசு கிறிஸ்துவே என்பதை அவள் அறிந்திருக்கின்றாள், “நல்ல ஆயன் நானே”** (யோவான் 10:11) (PDV.1). இறைவனிடமிருந்து தொடர்ந்து வருகின்ற அன்பின், உயிருள்ள தொட்டுணரக்கூடிய மகத்தான வெளிப்பாடு இயேசுவே: **“தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிறைவாழ்வு பெறும்பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்கு கடவுள் உலகின் மீது அன்பு கூர்ந்தார்”** (யோவான் 3:16).

### எம்மை வாழவைக்கும் இறைவனின் அன்பு

திருத்தந்தை 16ம் ஆசிர்வாதப்பரின் தம் முதல் சுற்றுமடலான “Deus Caritas Est” என்பது **“கடவுள் நம்மை அன்பு செய்தார்”** (1யோவான் 4:10) என்று தூய யோவானின் கூற்றை ஆதாரமாக்கக் கொண்டுள்ளது என்பது தெளிவு. “Deus Caritas Est”யில் திருத்தந்தை ஆசிர்வாதப்பரின் கூற்றிற்கிணங்க இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணமானது, **“மனிதனை பாவத்தில் இருந்து மீட்டு தூய நிலையினை அடைய, இறைவனே தம் மகனை வழங்கி, தம் சாயலாக இருந்த இயேசுவுக்கு, நீதிக்கு முரணான விதத்தில் தீர்ப்பு வழங்கப்பட்ட போதும் அவற்றை எல்லாம் கடந்து மனுக்குலத்திற்காக உயிர்த்தியாகம் செய்ய முன்வந்தார். இதுவே இறையன்பின் உயரிய நிலையாகும்”** (DCE. 12). ஆகவே இவ் நல்லாயத்துவம் மூலம் கிறிஸ்து தம்மையே எமக்குக் கொடுத்து அவரின் அன்பால் மக்களை அவரிடத்திற்கு ஈர்த்துக் கொண்டார். **“அவர்கள் என் மக்களாய் இருப்பார்கள். நான் அவர்களின் கடவுளாய் இருப்பேன்”.** (எரே 24:7, 31:33, எசே 11:20). இயேசுக்கிறிஸ்துவே தம்மை **“நல்லாயனாக”** அழைத்தார் (யோவான் 10:11). அவர் மந்தைகளை (ஆடுகளை) நன்கு அறிந்திருக்கின்றார். மந்தைகளும் அவரை அறிந்திருக்கின்றன. அவர் அவற்றிற்காக தம் வாழ்வையே அர்ப்பணித்தார். இதுவே கிறிஸ்துவின் ஆயத்துவபணியின் சாரம்சமாகவுள்ளது. இதுவே அவரது வாழ்க்கை முழுவதிலும் அவரது மேய்ப்புப்பணி சார்ந்த பணியை அல்லது அதன் தியாகத்தை தினமும் தொடச்சியாக வெளிப்படுத்தும் செயற்பாடாகும். **“திரண்டிருந்த மக்களை அவர் கண்டபோது அவர்கள் மேல் பரிவுகொண்டார். அவர்கள் ஆயன் இல்லா ஆடுகளைப்போல அலைக்கழிக்கப்பட்டு சோர்ந்து காணப்பட்டனர்”** (காண். மத் 9:35-36), **“வழிதவறி அலையும் ஆட்டைத் தேடிச் செல்வார்”** (மத். 18:12-14) மற்றும் **“அவர் தம்முடைய சொந்த ஆடுகளை பெயர் சொல்லி கூப்பிட்டு வெளியே கூட்டிச் செல்வார்”** (யோவா 10:3), **“பசும்புல் மீது என்னை அவர் இளைப்பாறச் செய்வார். அமைதியான நீர் நிலைகளுக்கு என்னை அழைத்துச் செல்வார்”** (தி. பா 22-23). அதன் பின் **“வாழ்வளிக்கும் உணவளித்து தம் வாழ்வால் அனைவரையும் ஊட்டம் பெறச் செய்வார்”** (PDV 22). இயேசுக்கிறிஸ்து சிறு பிள்ளைகளை அவரிடத்தில் வரச்சொல்லி அழைத்தார். அவர்களை ஆசீர்வதித்தார் (மாற் 10:13-15); அவர் தமது உயிரை அவர்களுக்காக பலியாக்கி அவர்களை மீட்டார். **“இழந்து போனதைத் தேடி மீட்கவே மானிடமகன் வந்திருக்கிறார்”** (லூக் 19:10). எனவே **“தலைமை ஆயர்”** (1பேதுரு 5:4) என்ற வகையில் கிறிஸ்துவின் அதிகாரமானது சீடர்களுக்கு அல்லது திருச்சபைக்கு **“பணி, தியாகமும் முழுமையான தாழ்மையும் அன்பும் நிறைந்த அர்ப்பணிப்புடன்”** (PDV.21), ஒன்றிணைந்த பணியாக இருந்தது.

மந்தைகளின் ஆயனாகிய கிறிஸ்து இப்பணியை தமது அப்போஸ்தலர்களுக்கும் சீடர்களுக்கும் கையளித்தார். Patores Dabo Vobis இதுபற்றி கூறுகையில் **“கிறிஸ்துவின் தூதுரை பணியும் செயற்பாடும் அப்போஸ்தலர்களும்** (Cf. யோவான் 21:15-17) **அவர்களது வழிமரபினர்கள்** (CF. 1பேது. 5:1ff) **மூலமாகவும், குருக்கள் வழியாகவும் திருச்சபையில் தொடர்கின்றது. அவர்களது அபிஷேகத்தின் மூலமாக நல்லாயனாம் கிறிஸ்துவில் இணைக்கப்பட்டு அவரை பின்பற்றி அவரது மேய்ப்புப்பணியில் வாழ அழைக்கப்படுகின்றார்கள்”**(PDV. 22), எனக் குறிப்பிடுகின்றது. இயேசுக்கிறிஸ்து அவரது உயரிய தியாக வாழ்வால் அவரில் நம்பிக்கை கொண்டவர்களோடு ஆழ்ந்த உறவைக் கட்டியெழுப்பியது போல ஒவ்வொரு அப்போஸ்தலரும், குருவும் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களுடன் அன்புறவை உருவாக்கிக் கொள்வது அவசியமாகும். மேலும் ***Pastores Dabo Vobis*** இதுபற்றி விளக்குகையில், **“குருவானவர் அவரது அர்ப்பண வாழ்வால் மற்றவர்களோடு உள்ள உறவை வளர்த்துக் கொள்ள வேண்டும். இயேசுவின் அவ் அர்ப்பண வாழ்வுக்கு சாட்சி பகர்ந்து தியாக மனப்பான்மையோடு தூய்மை மற்றும் சுதந்திரமான முறையில் வாழ தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் முழுமையான விசுவாசத்தால் அர்ப்பணிப்புடன் “அன்பார்வத்தை”** (CF. 2கொரி. 11:2) **கொண்ட, உள்ளங்களை கற்புள்ள கன்னியாகக் கொண்டு இறைமக்களிடத்தில் “கடவுளை ஏற்றுக்கொள்ளும் வரை”** (CF. கலா. 4:19) **இறைமக்களை அன்பு செய்ய, குருக்களுக்கு இயலுமாக இருக்க வேண்டும்”** (PDV. 22).

### முழுத் திருச்சபையும் ஆயத் தன்மையுடையது

கிறிஸ்துவின் இந்த ஆயத்துவப்பணியானது சீமோன் பேதுருவுக்கு கையளிக்கப்பட்டது - **“என் ஆடுகளை மேய், என் ஆடுகளை பேணி வளர்”** (யோவான் 21:15-17). இதுவே திருச்சபையை - கிறிஸ்துவின் உடலாக அல்லது வரலாற்றில் கிறிஸ்துவின் நிரந்தர உடனிருப்பை உறுதிப்படுத்தி உலகின் ஆயராகவும், அதன் வழிகாட்டும் ஒளியாகவும் தூய்மைப்படுத்தி உருமாற்றுகின்றதாகவும் ஆக்குகின்றது. மனித இனத்தின் மீட்பிற்கும், தூய்மைப்படுத்தலுக்கும் காரணியாக அமைவதே முழுத் திருச்சபையினதும் அழைத்தலாகும். எனவே திருமுழுக்கு பெற்ற அனைவரும் திருச்சபையின் இந்த பணியில் பங்கெடுக்கின்றனர். **“திரித்துவத்தால் அபிஷேகிக்கப்பட்டு, திருமுழுக்குப் பெற்றவர்கள் அவர்களது ஆன்மீக ரீதியில், தூய திரித்துவத்தின் பங்காளிகள் ஆகின்றனர்...... எப்போதும் சீடர்கள் செபத்திலும் இறைவனை மகிமைப்படுத்துவதிலும் நிலைத்து**(CF. Acts 2:42-47), **இறைவனுக்கு உகந்த, பரிசுத்தமான உயிருள்ள பலியாக தம்மை அர்ப்பணிக்க வேண்டும்”** (CF. உரோ. 12:1). இப்பூமியில் சீடர்கள் எல்லா இடங்களிலும் இயேசு கிறிஸ்துவுக்கு சாட்சி பகரவும், அவர்கள் எதிர்நோக்கி இருப்பதைக் குறித்து யாராவது விளக்கம் கேட்டால் விடையளிக்க எப்பொழுதும் ஆயத்தமாயும் இருக்க வேண்டும் (CF. 1பேதுரு 3:15) (திருச்சபை 10). ஆகவே நல்லாயத்துவப்பணியானது குருக்கள் துறவிகளால் மட்டும் ஆற்றுப்படும் பணியல்ல மாறாக பொதுநிலையினருக்கும் உரியதொன்றாகும். எனவே கொழும்பு உயர்மறைமாவட்டத் திருச்சபையில் நான் திட்டமிடுவது இவ்வனைத்துக் குழுக்களுக்கும் உரியதே: காலத்தின் தேவைகளுக்கும் சாவல்களுக்கும் முகங்கொடுக்க நாம் முன்வரவேண்டும். சுருங்கக் கூறின் குருக்கள், துறவிகள் மற்றும் பொதுநிலையினர் எனும் அடிப்படையில் கிறிஸ்துவின் வழியை பின்பற்றுபவர்களாக எமக்கு விடுக்கப்பட்டுள்ள அழைப்பை விளங்கிக் கொண்டு செயற்படவேண்டும் என்பதே. இறைமக்களிடத்திலுள்ள அன்புறவின் ஆழத்தை உணர்ந்து கொண்டு அவ்வன்பை சுவைத்துணர மற்றவர்களுக்கு உதவ வேண்டும். இதனால் நாம் அனைவரும் இவ்வுலகில் இறையன்பை தொண்டுணரக்கூடிய, அவ்வன்பை வெளிப்படுத்துகின்ற **“நல்ல ஆயர்களாக”** வரவேண்டும்.

### சவால்கள்

உயரிய அன்பின் அடையாளமாகிய நல்லாயனாம் கிறிஸ்துவோடு ஆழ்ந்த உறவில் இணைக்கப்படாவிடின் இறைவனின் அன்புக்கு சாட்சி பகிர்கின்ற நிலையானது தோன்றப்போவதில்லை. மேலும் இன்றைய காலகட்டத்தில் இவ்வழைப்பினை, உலகில் நடைபெறுகின்ற நிகழ்வுகளுடன் இணைத்து பார்ப்பது தவிர்க்க முடியாததொன்றாகும். இப்பணிக்கு சாட்சிபகிர, நிகழ்கால உலகின் கோலங்களுடன் பார்க்கையில் ஒருவரின் சுயநலமற்ற அன்பு இன்றியமையாததாகின்றது. குறிப்பாக இந்நிலையில் பல்வேறுபட்ட காரணங்களால் மதப்பற்றின்றி, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், உலக மயமாக்கலில் ஏற்படும் புதிய தொடர்பாடல் முறைகள், எம் பொருளாதார நடவடிக்கைகளில் மட்டுமன்றி, தனிப்பட்ட நபர்களின் வாழ்விலும் தாக்கம் செலுத்துகின்றது. மேலும் சமூக மதீப்பீடுகளிலும் தாக்கத்தை செலுத்தியுள்ளமை, தனிநபர் கோரிக்கை அதிகரிப்பு, சுயநலமான சலுகைகளை எதிர்பார்த்தல், சமூக மதிப்பீடுகளை கடைப்பிடிக்கத் தவறல், மதத்தைக் குறித்து பற்றில்லாமை, ஆன்மீக ரீதியில் வளர்ச்சியின்மை, அவற்றிற்கு முயற்சிக்காது தனிநபர் கொள்கைகளுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்து தவறான முறைகளில் வாழ்வை இட்டுச் செல்லல், பொய்யான வாழ்க்கை முறைகளுக்கு கட்டுப்பட்டுள்ளமை போன்ற விடயங்களினால் எம் மக்கள் குருக்கள், துறவிகளுடன் தூர விலகியும், அவர்களது தனிநபர் கொள்கைகளுக்கு அடிமைப்பட்டும் வாழ்ந்து கொண்டிருக்கும் சூழ்நிலையே இன்றைய சமூகத்தில் உருப்பெற்றுள்ளது. மேலும் எமது திருச்சபையில் மற்றும் திருச்சபை தலைவர்களில் உள்ள குறைபாடுகளை சுட்டிக்காட்டி அவற்றை தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் பிரிவினைச் சகோதரர்களின் மிரட்டல்களினால் வரும் சவால்கள் பெருகிக் கொண்டே செல்கின்றன. மேற்குறிப்பிட்டவற்றை ஆழமாக நோக்குகையில் உயர்மறைமாவட்டத்தின் மேய்ப்புப்பணியினது அடித்தள உள்ளார்ந்த மாற்றமும், அனைத்து மறைபணியாளர்களின், அதாவது குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் ஆகியோரின் மனநிலைகளில் புதுப்பித்தலும் அவசியமாகின்றது. எனவே இவற்றை திருத்தியமைக்க நாம், எம்மை ஆராய்ந்து வீரமும் துணிச்சலுமான படிமுறைகளை எடுக்க வேண்டியுள்ளது.

### நல்லாயன் ஆண்டு

எனவே எமது சுதேச திருச்சபையானது விசுவாசத்தில் தழும்பல் அடைந்திருந்த தருவாயில், நம் நாட்டிலே கத்தோலிக்க விசுவாசத்தை கட்டியெழுப்ப இறைவனால் எம்முன்னோர்க்கு அனுப்பப்பட்ட நல்லயனாம் இலங்கையின் அப்போஸ்தலர் தூய யோசப்வாஸ் அவர்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஆண்டினை தொடர்ந்து, எமது விசுவாசத்தில் ஒரு மலர்ச்சியை உருவாக்கவும், விசேடமாக எமது ஆயத்துவப்பணியின் ஆழ்ந்த அர்த்தத்தினை அறிந்துகொள்ளவும் 2018 தை மாதம் 14ம் திகதி முதல் 2019 தை மாதம் 20ம் திகதி வரையுள்ள காலப்பகுதியை கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் நல்லாயன் ஆண்டாக பிரகடனப்படுத்துகின்றோம்.

நாம் இன்று முகம் கொடுக்கும் சவாலானது ஆன்மீக ரீதியிலானது. இந்நிலையில் என்னால் செய்யக்கூடியது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் நற்செய்தியின் மகிழ்ச்சி (Evangelii Gaudium) எனும் அப்போஸ்தலிக்க அறிவுரை ஏட்டில் கூறப்பட்டிருப்பதை குறிப்பிடுவதே: **“நற்செய்தியின் மகிழ்ச்சி இயேசுவைச் சந்திக்கும் அனைவரின் இதயங்களையும், வாழ்வையும் நிரப்புகிறது. பாவம், துன்பம், உள்ளார்ந்த வெறுமை மற்றும் தனிமையிலிருந்து அவரது மீட்பின் சலுகையை ஏற்றுக்கொள்கிறவர்கள் விடுதலையடைகின்றனர்.... இந்த மறைத்தூது அறிவுரை ஏட்டில் கிறிஸ்தவர்களை நற்செய்தி அறிவிப்புப்பணியின் புதிய அத்தியாயத்திற்குப் புறப்பட உற்சாகப்படுத்துகின்றேன்”** (EG. 1).

மேலும் உலகளாவிய ரீதியில் உடலை சோர்வடையத் செய்யும் பேரழிவை திருத்தந்தை பிரான்சிஸ் பின்வரும் சொற்களின் மூலமாக விளக்குகின்றார்: **“நுகர்வுக் கலாச்சாரத்தினால் இன்றைய உலகில் ஊடுருவி பரந்து காணப்படும் மிகப்பெரிய ஆபத்தானது, பேராசைமிக்க இதயம் ஆகும், மடமைத்தனமான இன்பங்களுக்காக ஏக்கத் துடிப்புமிக்க நாட்டம் மற்றும் மழுங்கிப் போன மனச்சாட்சியிடமிருந்து பிறக்கும் கைவிடப்பட்ட நிலையும், கடும்துயரமுமே ஆகும். எப்போதெல்லாம் நமது உள்ளார்ந்த வாழ்வு அதனுடைய சொந்த விருப்பங்கள், அக்கறையால் பீடிக்கப்பட்டிருக்கின்றதோ, அப்போது பிறருக்கு அங்கு இடமிருப்பதில்லை, ஏழைகளுக்கும் இடமிருப்பதில்லை. கடவுளின் குரல் கேட்கப்படுவதில்லை, அவரது அன்பின் அமைதியான மகிழ்ச்சி உணரப்படுவதில்லை, மற்றும் நன்மை செய்வதற்கான விருப்பம் மங்குகிறது. இது இறை நம்பிக்கையாளர்களுக்கும் மிக உண்மையான ஆபத்தாக உள்ளது. இதற்குப் பலர் இரையாகி மனக் கசப்பும், கோபம் மற்றும் அக்கறையற்ற நிலைக்குள்ளாகின்றனர். இது எந்த வழியிலும் மதிப்பு மிக்க மற்றும் நிறைவான வாழ்வுக்கான வாழியாகாது. இது நமக்கான கடவுளின் திட்டமோ, உயிர்த்த ஆண்டவரின் இருதயத்தில் தமது ஊற்றைக் கொண்டுள்ள ஆவிக்குரிய வாழ்வுமோ ஆகாது”.** (EG. 02). குறைந்தது தினமும் இதற்காக முயற்சி செய்து செயற்படுமாறு திருத்தந்தை கேட்டுநிற்கின்றார். திருத்தந்தை பிரான்சிஸ், திருத்தந்தை 6ம் சின்னப்பரை மேற்கோள்காட்டி கூறுவது, **“இறைவனால் கொண்டுவரப்பட்ட மகிழ்ச்சியிலிருந்து எவரும் விலக்கப்பட்டவர்களல்லர்”** (Gandate in Domino 22). நாம் தவறி விழுந்துவிட்டாலும் எம்மை கைவிட வேண்டும் என அவர் விரும்பவில்லை. அவர் எம்மிடம் கேட்பது, துணிச்சலாக ஆண்டவரிடம் கூறும்படி, **“ஆண்டவரே ஏமாற்றப்படுவதற்கு என்னையையே அனுமதித்து விட்டேன் ஆயிரம் வழிகளில் உமதன்பை தவிர்த்து ஒதுக்கியுள்ளேன், இருப்பினும் இன்னொரு முறை இதோ இங்கு உள்ளேன். எனது உடன்படிக்கையில் உம்முடன்...**

தொடர்ச்சி XVIIIம் பக்கம்

XVII நல்லாயன் ஆண்டுக்கான...

**புதுப்பித்துக்கொள் நீர் எனக்குத் தேவை. மறுபடியும் என்னைக் காப்பாற்றும், ஆண்டவரே, மீட்கும் உம் அணைப்பிற்குள் மறுபடியும் என்னை எடுத்துக்கொள்ளும்"** (EG. 3). பின்னர் திருத்தந்தை நம்பிக்கை நிறைந்த உறுதிமொழியை வழங்குகின்றார்: **"கடவுள் நம்மை மன்னிப்பதில் சோர்வுறுவதில்லை, நாம் தான் அவரது இரக்கத்தை நாடுவதில் சோர்ந்து போகின்றோம்"** (EG. 3).

## பரிசுத்த வாழ்விற்கான உலகளாவிய அழைப்பு

அகிலத்தின் ஆயனானவர் தனிப்பட்ட உள்ளார்ந்த ஆன்மீக புதுப்பித்தலூடாக ஏற்படும் உருமாற்றத்தை முதலில் விரும்புகின்றார். குருக்கள், துறவியர், தாங்கள் தமது தனிப்பட்ட தூய்மை வாழ்வை எய்தாவது மக்களையும் இவ்வுலகத்தையும், தூய்மையை நோக்கி கொண்டுசெல்ல முடியாது என்பதை நன்குணர்தல் வேண்டும். எம்மிடம் இல்லாததை நாம் யாருக்கும் ஒருபோதும் கொடுக்க முடியாது. திருத்தந்தை தூய 2ம் யோவான் பவுல் 1990ம் ஆண்டு எழுதிய தமது Redemptoris Missio எனும் சுற்றுமடலில் குறிப்பிடுவதுபோல, **"மேய்ப்புப்பணி அதன் இயல்பான தன்மையைப் பெறுவது தூய்மைக்கான அழைப்பினிலே. ஒரு மறையாளன் தனது அழைப்பிற்கு உண்மையுள்ளவராகின்றார், தம்மை தூய்மையின் பாதையில் அர்ப்பணிக்கின்றபோதே"** (RM. 90). நாம் எக்காலத்திற்கும் உரிய உயரிய இறைபணியாளர்களான தூய பவுல், தூய பிரான்சிஸ்கு சவேரியார் அல்லது தூய யோசேவ்வாசைப் போல கிறிஸ்துவின் மேல் உள்ள தனிப்பட்ட அன்பினாலும், அவரோடு என்றும் இணைந்திருப்பதற்கான ஆழமான தாகத்தினாலும் உயிரூட்டப்படாவிடின் எமது பாரிய அருட்பணி சார்ந்த திட்டங்கள் அனைத்தும் அர்த்தமற்றதாகிவிடும். நாம் எப்பொழுதும் நினைவிற்கொள்ள வேண்டிய கிறிஸ்துவின் வார்த்தையானது: **"என்னை விட்டுப் பிரிந்து உங்களால் எதுவும் செய்ய முடியாது"** (யோவான் 15:5). மேலும் இவ்வேளையில் சங்கீத ஆசிரியர் கூறுகின்ற, **"ஆண்டவர் இவ்வீட்டைக் கட்டவில்லையெனில் அதைக் கட்டுவோரின் உழைப்பு வீணாகும், ஆண்டவரே இந்நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பது வீணாகும்"** (தி.பா.127:1) என்பதை நினைவிற்கொள்ள வேண்டியுள்ளது.

எனவே முதலில் குருக்கள் துறவிகளாகிய எமக்கு ஆழமான ஆன்மீக புதுப்பித்தலும் மக்களுக்கு கிறிஸ்துவைப்போல் நல்ல ஆயனாக மாறுவதற்கு வேண்டிய புதிய அர்ப்பணிப்பும் அவசியமாகின்றது. இதுபற்றி Evangelii Gaudiumயில் திருத்தந்தை பிரான்சிஸ் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். **"உண்மையான மறைப்பணியாளர், சீடனாய் இருப்பதை எப்போதும் நிறுத்தமாட்டார், இயேசு அவரோடு நடக்கின்றார், பேசுகின்றார், சுவாசிக்கின்றார், பணியாற்றுகின்றார் என்பதெல்லாம் தெரியும். தம்முடைய மறைபரப்புப்பணி முயற்சியில் இயேசு அவரோடு உயிர்வாழ்கின்றார் என்பதை அவர் உணர்கிறார். நமது மறைபரப்பு அர்ப்பணிப்பின் இதயத்தில் அவரின் பிரசன்னத்தை நாம் காணவில்லையெனில், நம்முடைய ஆர்வம் வேகமாகக் குறையும். நாம் வழங்குவது என்னவென்று உறுதியாக நமக்குத் தெரியாது. நமது வேகம் மற்றும் பேரார்வம் குறையும். அன்பின் உறுதியற்ற, ஆர்வமில்லாத, நிலையற்ற ஒருவனால் யாரையும் வசப்படுத்த முடியாது"** (EG. 266).

## செபமும் திருவருட் சாதனங்களும்

எனவே நல்லாயன் ஆண்டானது அனைத்து பங்குகளுக்கும், குழுக்களுக்கும் புனிதத்துவத்தை அடைவதற்காக **"வலிமையுடனும், உறுதியுடனும் அவரிடம் திரும்பிச்செல்வதற்கு"** அழைப்பு விடுக்கின்ற ஆண்டாக குறிப்பிடப்படவேண்டும். இவ்வருடம் முழுவதும் சுய வாழ்விற்க்குரிய சூழல் நிறைந்த ஆண்டாக இருப்பதுடன் திருவருட்சாதனங்கள், குறிப்பாக நற்கருணை, ஒப்புரவு அருட்சாதனங்கள் உரிய முறையில் கொண்டாடப்படல் வேண்டும் முதல் வெள்ளிக்கிழமைகளில் நற்கருணை ஆண்டவரின் பிரசன்னத்தால் சூழப்பட்ட பக்தி முயற்சிகள் அதிகரிக்கப்படல் வேண்டும் ஒப்பரவுக்கான கூடுகள் ஒன்றேனும் ஒவ்வொரு பங்கிலும் அறிமுகம்படுத்தலுடன் பங்கு குருக்கள் திருப்பலியின் முன்னும் பின்னும் ஒப்பரவு திருவருட்சாதனத்தை வழங்க தயாராக இருக்கவேண்டும் திருப்பலிக்கு முன்னர் நற்கருணை ஆண்டவரின் முன்னிலையில் சுதேச மொழியில் திருப்புகழ்மாலை செபிப்பது பயிற்றப்பட்ட பொதுநிலையினரால் வழிகாட்டப்படலாம்.

பங்குகளில் உள்ள அனைத்து குடும்பங்களும் தினமும் செபமாலையை செபிப்பதற்கு, குறைந்தது ஒரு காரணிக்கத்தையாவது செபிப்பதற்கு தூண்டுகின்ற பிரச்சாரங்கள் அறிமுகப்படுத்தபடல் வேண்டும். முடியுமானால் இயலுமானவரை நல்லாயன் ஆண்டிற்காக தரப்பட்டுள்ள செபத்தை செபிப்பதும், பாடலை பாடுதல் பாடகர் குழாம்களின் தரத்தை உயர்த்துவதுடன் அனைத்து மக்களும் பங்குகளில் பாடப்படும் பாடல்களிலும் சொல்லப்படும் செபங்களிலும் கலந்துகொள்ள வழியமைக்க வேண்டும் பங்குகளில் விசேட மேய்ப்புப்பணி ஞானொடுக்கங்களை ஒழுங்குசெய்தல், ஆலயத்திருவிழாக்களில் தேவையற்ற வெளியார்ந்த ஆடம்பரங்களை குறைத்தல். நற்கருணை ஆண்டவர் முன்னிலையில் குணப்படுத்தும் செபங்களை உள்ளடக்கிய பாடலுடன் குழுவாக செபிக்கின்ற விவிலியம் சார்ந்த செபவழிபாடுகளை ஒழுங்கு செய்தல் வேண்டும். இவ்வாறான வழிப்பாடுகள் நற்கருணை ஆண்டவரின் மகிமைக்கு பங்கம் விளைவிக்காத வகையில் அமைவது பற்றி அவதானமாய் இருத்தல் வேண்டும். தவக்காலத்திலும் திருவருகைக் காலத்திலும் விசுவாச வழிகாட்டல் குழுவினால் பங்குகளில் நடாத்தப்படும் விசேட வழிகாட்டல் நிகழ்ச்சிகள் ஒழுங்குசெய்யப்படலாம். உயர்மறைமாவட்ட திருவழிபாட்டு ஆணைக்குழு மற்றும் மறைமாவட்ட திருவழிபாட்டு நிலையங்கள் என்பன மேற்படி காரியங்களை முன்னெடுக்கவும், மேற்பார்வை செய்யவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. மரியாயின்சேனை, திரு இருதய சபை போன்ற பக்தி சபைகள் இவ்வருடத்திலே தமது செபவாழ்வையும் அப்போஸ்தலிக்க சேவையையும் விஸ்தரிக்க வேண்டும். அத்தோடு அனைத்து பங்குத்தந்தையரும் இல்லங்களை தரிசிக்கும் பணியை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என நான் வேண்டுகோள் விடுக்கிறேன். அப்போது உங்கள் மந்தைக்கு பெரும் ஆசீர்வாதத்தை தரும் சந்தர்ப்பமாக இது அமையும்.

மேற்குறிப்பிட்ட ஆலோசனைகள் பங்குகளில் செயற்படுத்தப்படும் தரத்தை மதிப்பீடு செய்வதற்கும் மேய்ப்புப்பணியின் தரத்தினை உயர்த்துவதற்கும் வேண்டிய உதவிகளை வழங்குவதற்குமே நான் குருக்கள் அடங்கிய விசேட குழுவினை நியமிக்கின்றேன். 2010ம் ஆண்டிற்கு பின்னர் என்னால் நியமிக்கப்பட்ட அனைத்து பங்குக் குருக்களும் இச் செயற்திட்டத்திற்கு வேண்டிய ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுநிற்கின்றேன். இச் செயற்பாடானது, வழிகாட்டிகளாக பங்குகளில் நியமிக்கப்பட்ட இளம் குருக்களுக்கு தம்முடைய மேய்ப்புப்பணியை மேம்படுத்துவதற்கு வேண்டிய எவ்வித பாரபட்சமற்ற பின்னூட்டத்தினை பெறுவதற்கு உதவியாக இருக்கும். தனிப்பட்ட மாற்றுருவம் விசேட விதமாக இவையனைத்தினது பொருளானது இறைவனுக்கு தம் வாழ்வை அர்ப்பணித்துள்ள குருக்கள் துறவிகள் ஆன்மீக ரீதியாக இறைவனில் நங்கூரமிடப்படல் வேண்டுமென்பதேயாகும். நாம் இவ்வாறாக நங்கூரமிடப்பாடாவிடின் எமது செயல்களில் வெற்றியைக்கான முடியாதிருக்கும், ஏனெனில் **"என்னை விட்டுப் பிரிந்து உங்களால் எதுவும் செய்ய முடியாது"** (யோவான் 15:5) என்று இயேசுவே குறிப்பிட்டார்.

மேலும் திருத்தந்தையின் கருத்துக்களை நினைவுகூர்கையில்: **"எங்குமுள்ள அனைத்துக் கிறிஸ்தவர்களையும் இந்தத்தருணத்தில் இயேசு கிறிஸ்துவுடனான ஒரு புதுப்பிக்கப்பட்ட சந்திப்புக்கு"** (EG. 3) அழைக்கின்றேன். எனவே இவ் ஆண்டு முழுவதும், இனிவரும் காலமும் எமது தனிப்பட்ட செப வாழ்வை அதிகரிப்பதே எம்முடைய முதல் முன்னுரிமையாக இருத்தல் வேண்டும், எம்முடையதும் எமது சமூகங்களினதும் ஆன்மீக செப வாழ்வை சார்ந்த புதுப்பித்தலை உருவாக்குவதற்கு வேண்டிய அனைத்து வழிகளையும் கையாளுவதில் நாம் சிறிதளவேனும் பின்வாங்கக்கூடாது, ஏனெனில், மேற்குறிப்பிட்டவாறு கடவுள் எம்மத்தியில் இல்லாவிடின் நாம் எவற்றிலும் முன்னேற முடியாது (காண்க தி.பா. 127:1).

எம் இறைவனை இறைமக்கள் சந்திக்க வாய்ப்பை ஏற்பாடுத்தாது நாம் செய்யும் வேறெந்த செயலுக்கும் பலன் கிடைக்கப்போவதில்லை. இவ்விசேட ஆண்டிலும் எக்காலத்திலும் அனைத்து பங்குகளும் ஆன்மீகத்தை வலுப்படுத்துகின்ற பிரதான நிலையங்களாக மாறவேண்டும். என்பதே, எனது செபமும் விருப்பமுமாகும். எமது பங்கின் யூபிலி விழாக்களை ஆன்மீக புதுப்பித்தலை உருவாக்குகின்ற சந்தர்ப்பங்களாக மாற்றுவோம். புதிய ஆலயத்தை கட்ட ஏற்பாடு செய்தல், ஆலயத்தை புனர் நிர்மானம் செய்தல், பலிப்பீடம், பங்குமனை கட்டுதல் போன்ற செயற்திட்டங்களை தற்காலிகமாக நிறுத்தி ஆன்மீக புதுப்பித்தலை உருவாக்குகின்ற காலங்களாக மாற்றுவோம். மிக முக்கியமான அவசர தேவையிருப்பினும் மட்டுமேயன்றி அத்திட்டங்களுக்கு இந்த ஆண்டில் அனுமதி வழங்கப்பட்ட மாட்டாது, ஏனெனில் பங்குக் குருக்களாகிய நீங்கள் அனைவரும் இத்திட்டங்களில் அக்கறை காட்டாமல் பங்கின் ஆன்மீக புதுப்பித்தல் நிகழ்ச்சித்திட்டங்களில் உங்கள் அவதானத்தை செலுத்தவேண்டும் என்பதற்காகவே. சுருக்கமாக கூறுவதாயின், நான் செபிப்பதும் எதிர்ப்பார்ப்பதும் யாதெனில் இச்சிறப்பு ஆண்டானது ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் தனது பங்கானது ஆன்மீக ஊட்டத்தை வழங்குகின்ற நிலையமாக இன்றும், இனிவரும் காலங்களிலும் மாற வேண்டுமென்பதேயாகும்.

## செபத்தில் மேய்ப்பர்கள்

ஆன்மீக புதுப்பித்தலுக்காக இவ்வருடம் நாம் முன்மொழிகின்ற மிக முக்கியமான அம்சங்களில் ஒன்றானது, ஒவ்வொரு நாளும் திருப்பலியின் முன்னர் அல்லது பின்னர் காலையிலோ, மாலையிலோ பயிற்றுவிக்கப்பட்ட பொதுநிலையினரின் உதவியுடன் திருப்புகழ்மாலை செபிக்கப்படுதல் ஆகும். இதனையொட்டி திருவழிபாட்டு நிலையம் தமிழ், சிங்கள, ஆங்கில மொழிகளில் திருப்புகழ்மாலையின் மேலதிக பிரதிகளை பங்குத்தந்தையருக்கு மலிவான விலையில் வழங்க தயாராக இருக்கின்றது. அத்தோடு திருவழிபாட்டு நிலையமானது பெயர் முன்மொழியப்பட்ட பொதுநிலை தலைவர்களுக்கு திருப்புகழ்மாலை செபிக்கும் முறை பற்றிய பட்டறைகளை வழங்கவும் தயாராக உள்ளது.

இது இனிவரும் காலங்களில் அனைத்து பங்குகளுக்கு முக்கியமான நிகழ்ச்சித்திட்டமாக அமைதல் வேண்டும். அனைத்து ஆலயங்களிலும் ஒப்புரவருட்சாதனத்தை நிறைவேற்ற வேண்டிய "ஒப்புரவு அருட்சாதனக் கூட்டினை" அமைக்குமாறு நான் அனைத்துப் பங்குக் குருக்களையும் கேட்டு நிற்கின்றேன். இதைவிட ஒவ்வொரு ஆலயத்திலும் பங்குகளிலும் பணியாற்றுகின்ற குருக்கள் முழந்தாட்படியிட்டு செபிப்பதற்கு வேண்டிய முழந்தாட்படியிடும் இருக்கை (kneeler) இருத்தல் அவசியமாகும். நாம் செபிக்காவிடின் அல்லது நாம் செபிப்பதை பொதுநிலையினர் காணாவிடின் அவர்களிடம் செபிக்குமாறு எங்களால் கேட்கமுடியாது. புனித அகுஸ்தினார் தமது இறையியலை கற்றது முழந்தாட்படியிடும் இருக்கையிலே, ஏனெனில் எமது விசுவாசம் வலுப்பெறுவது எமது செபத்தினாலேயாகும் (lex orandi, lex credendi). எனவே அனைத்து குருக்களையும் குறிப்பாக பங்குத் தந்தையர்களையும் அவரது உதவியாளர்களையும் திருப்பலியினை ஒப்புக்கொடுப்பதற்கு முன்னர் முழந்தாட்படியிடும் இருக்கையில் இருந்து செபிக்குமாறு ஊக்கமூட்ட விரும்புகின்றேன். இத்தருணத்தில் மெய்யியலில் ஒப்புக்கொள்ளப்பட்ட முடிவான "Nemo dat quod non habet, **ஒருவர் தம்மிடம் இல்லாததை மற்றவருக்கு வழங்கமுடியாது"** என்பதை நினைவு கூறுவது பொருத்தமாகும். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்கள் பணிபுரிகின்ற பங்குகளில் அல்லது நிறுவனங்களில் இருக்கின்ற குருக்கள், தியாக்கோன்மார்கள் அல்லது குருமடமாணவர்கள், ஒன்றிணைந்து தமது காலை, மாலைச் செபத்தை குழுவாக ஆலயத்திலோ அல்லது சிற்றாலயத்திலோ செபிப்பது சிறந்ததாகும். இப்பழக்கத்தை ஒரு விசேட உறுதியான தீர்மானமாக மாற்றுவோமாக, ஏனெனில் இத்தகைய செயல்கள் நாம் உண்மையாக இறைவனின் மக்கள் என்பதையும் அவரில் ஆழமாக இணைக்கப்பட்டவர்கள் என்பதையும் விசுவாசிகள் அறிந்துக்கொள்வர்கள், ஏனெனில் நாங்கள் செயற்படுத்தாததை போதிப்பவர்களல்ல. திருப்புகழ்மாலையினை மக்களோடு செபித்தல், ஒப்புரவுக் அருட்சாதனத்தை நிறைவேற்ற வேண்டிய கூட்டினை அமைத்தல், குருக்களுக்கு வேண்டிய முழந்தாட்படியிடும் இருக்கையின் உருவாக்கம் ஆகியன நல்லாயன் ஆண்டு நிறைவேற்றுவதற்கு முன்னர் அனைத்து ஆலயங்களிலும் நிறுவனங்களிலும் அறிமுகம் செய்யப்படல் வேண்டும். இதனை உயர்மறைமாவட்ட திருவாழிப்பாட்டு நிலையம் மேற்பார்வை செய்யும். நானும் தனிப்பட்ட ரீதியில் என்னுடைய பங்குத்தள தரிசனத்தின் போது இவற்றை அவதானிப்பேன்.

அதேவேளை இளம் மற்றும் வயதான குருக்களுக்கான விசேட பயிற்சிப்பட்டறைகள் இந்தியாவின் சாலக்குடியிலும், கண்டி குருமடத்திலும் ஒழுங்குசெய்யப்படும். அத்தோடு குருமுதல்வர்கள், தத்தம் பகுதிகளிலுள்ள குருக்களுக்கு, மாதாந்த ஞானொடுக்கங்களை ஒழுங்குசெய்ய வேண்டும் எனவும் பணிக்கின்றேன். பிராந்திய ஆயர்களும் பகுதிசார் குருமுதல்வர்களும் மறைக்கோட்ட முதல்வருடன் கலந்தாலோசித்து இதனை ஒழூங்கு செய்வர். அனைத்து மறைக்கோட்டத்திலும் இப்பணியினை ஒருங்கிணைத்து செயற்படுத்துவதற்கு குருவானவர் ஒருவரை நியமிப்பது அவசியமாகும். இவ்வொருநாள் ஞானத்தியானங்கள் மறைக்கோட்டங்களில் நடைபெறுவதுபோல் ஒரு மணி நேரம் நடாத்தப்படுகின்ற செப வழிப்பாட்டிற்கு வரையறுக்கப்பட்டதொன்றாக அமையக்கூடாது. இவை எங்கே, எப்போது யாரால் நடத்தப்படுகின்றது என்ற விபரங்கள் துணை ஆயர் மற்றும் ஆயரின் பதிலாளர் மூலமாக உறுதியாக எனக்கு அறியத்தரப்படல் வேண்டும்.

உயர் மறைமாவட்ட உருவாக்கல் ஆணைக்குழுவானது இளங்குருக்களுக்கு மறையுரையாற்றுலுக்கான விசேட பயிற்சி நெறியினை ஒழுங்கு செய்வார்கள். இதில் பங்குபெற விரும்புகின்ற ஏனைய குருக்களும் கலந்துகொள்ளலாம். பல சந்தர்ப்பங்கள் எமது திருச்சபையை விட்டு அடிப்படைவாதக் குழுக்களோடு இணைந்து கொண்டவர்கள், எமது தரமற்ற மறையுரைகளே காரணம் என மேற்கொள்காட்டி நிற்கின்றனர்.

ஞான ஒடுக்கங்கள், விசேட மேய்ப்புப்பணிகள், திருவிழாக்காலங்களில் நவநாட்கள் போன்றவற்றில் சிங்களம் தமிழ் மொழிகளில் மறையுரைகளை வழங்குவதற்கு இவ்வருட குருக்களின் மாற்றம் நிகழ்கின்ற போது விசேட மறையுரைக் குழுவினை அமைக்க நான் எண்ணுகின்றேன். இதற்கு ஒருவர் முழுநேர உறுப்பினராக இருந்து இக்குழுவினைத் தலைமை தாங்குவார்.

மறைக்கோட்ட குருக்களுடன் கலந்துலோசித்து ஒவ்வொரு மறைக்கோட்டத்திலும் நற்கருணை மற்றும் மரியன்னைப் பேரணிகளையும், மாநாடுகளையும் வழிப்பாடுகளையும் ஒவ்வொரு மாதமும் ஒழுங்கு செய்யுமாறு கேட்டு நிற்கின்றேன். மற்றுமொரு குருக்கள் அடங்கிய குழுவொன்று இவற்றை இவ்வருடம் முழுவதும் நடாத்துவதற்கென என்னால் நியமிக்கப்படும். அடிப்படைவாதக்குழுவினர் எமது பங்குகளில் உள்ள வீடுகளை தரிசிப்பதை எதிர்க்க மரியாயின் சேனை, திருஇருதயநாதர் சபைகளின் சேவைகளை பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்ச்சி XIXம் பக்கம்

XVIII நல்லாயன் ஆண்டுக்கான...

## ஞாயிறு திருவழிபாடு

சில பங்குகளில் திருவழிப்பாட்டு நிகழ்வுகள் அர்த்தமற்றவையாக அமைந்துள்ளது என்று, முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. தகுந்த ஆயத்தமின்மை, கடைசி நேரத்தில் வழிப்பாடுகளை ஒழுங்குசெய்தல், தகுதியற்ற தரம் குறைந்த வாசகர்களையும் செபத்தலைவர்களையும் தெரிவு செய்தல், முறையற்ற ஒலிக்கருவிகளை பயன்படுத்தல், உரிய பக்தியும் மரியாதையுமற்ற விதத்தில் வெறுமனே வேகமாய் வழிப்பாடுகளை நடத்துதல் போன்ற பல்வேறுப்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன. சில வேளைகளில் பாடல்களைப் பாடுவதில் கூட பொதுநிலையினரின் பங்களிப்பு முடக்கப்பட்டுள்ளது. இவ்வாறான குறைபாடுகளை நிவர்த்தி செய்து திருவழிபாட்டு அம்சங்களை செவ்வனே செய்து அர்த்தமுள்ள விதத்தில் அவற்றை ஒழுங்கு செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உயர் மறைமாவட்ட அனைத்து திருவழிபாட்டு குழுக்களிடமும் நான் தாழ்மையாக கேட்டுக்கொள்கின்றேன்.

ஆயர் பேரவைக்குப் பின்னர் திருத்தந்தை 16ம் ஆசிர்வாதப்பரினால் 2007ம் ஆண்டு மாசி மாதம் வெளியிடப்பட்ட நற்கருணை பற்றிய தகவல் திரட்டான (Sacramentum Caritatis) அப்போஸ்தலிக்க அறிவுரை ஏட்டில் குறிப்பிடப்படுவதாவது, **"ஆரம்ப காலத்தில் இருந்தே நற்கருணை மனித வாழ்விற்கு கொண்டுவரும் அடிப்படை கூறுசார்ந்த புதியத்துவத்தை, கிறிஸ்தவர்கள் தெளிவாக அறிந்தவர்களாக இருக்கின்றனர். தம்முடைய வாழ்க்கை அமைவுக்கு ஏற்றவகையில் இறைமக்கள் திருப்பலிக் கொண்டாட்டத்தின் ஆழமான தாக்கத்தினை விரைவாக உணர்ந்து கொள்கின்றனர். அந்தியோக்கு நகர் இஞ்ஞாசியார் இவ்வுண்மையை கிறிஸ்தவர்களை அழைக்கும் போது பின்வருமாறு வெளிப்படுத்தினார் "புதிய நம்பிக்கையினை அடைந்தவர்கள்", அவர்களால் விளக்கப்பட்டதுபோல "ஆண்டவரின் நாளுக்கமைய வாழ்கின்றவர்கள்"** (iuxta dominicam viventes- ad Magnes 9,1 : PG 4,570). **அந்தியோக்கிய வேத சாட்சியின் இக்கூற்றானது நற்கருணையின் உண்மை நிலைக்கும் கிறிஸ்தவனுடைய வாழ்க்கைக்கும் இடையே இருக்கின்ற தொடர்பை எடுத்துக்காட்டுகின்றது........ தூய இஞ்ஞாசியாரின் கூற்றானது – "ஆண்டவரின் நாளிற்கமைய வாழ்வது" – இப்புனித நாளானது வாரத்தின் ஏனைய நாட்களை நடைமுறைப் படுத்துகின்றதாக வலியுறுத்துகின்றது"** (SC. 72).

எனவே ஞாயிறு திருப்பலியினை உயிரற்ற, மிகவும் தரமற்ற வகையிலும் நம்பிக்கையற்ற நிலையிலும் முறையற்ற விதத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் போது நாம் எமது மந்தைகளை கண்காணிக்கின்ற பணியில் இருந்து தவறிவிடுகின்றோம்.

அன்புள்ள குருக்களே, குறிப்பாக பங்குப் குருக்களே, நல்லாயன் ஆண்டானது நீங்கள் ஞாயிறு திருப்பலியை ஒப்புக்கொடுப்பதற்கு தயாராகின்ற, ஒப்புக்கொடுக்கின்ற முறைகள் உங்களுடைய மந்தைகளை ஊக்கமுட்டுகின்ற வழிமுறைகளை தோற்றுகின்ற திருப்புமுனைக் காலமாக அமையட்டும். மக்களுக்கு ஞாயிறு வழிப்பாட்டினை தனித்துவமான, அவர்களை உருமாற்றுகின்ற பலமான காலங்களாக மாற்றுவதற்கு பல புதிய முறைகள் சேர்க்கப்படலாம். இன்னும் மந்தைகள் ஞாயிறு வழிப்பாட்டிற்கு வரும்போது அவர்களை வரவேற்பதில் எந்தவித தடையுமில்லை. மீண்டும் வழிப்பாட்டின் பின்னர் அவர்களை வாழ்த்தி, தேவையானால் சமூக ஒன்றுகூடலினையும் ஒழுங்கு செய்யலாம். மக்கள், உங்களில் ஆன்மீகத் தலைவருக்குரிய தன்மையை அனுபவிக்க வேண்டும். நீங்கள் அவர்களை வரவேற்கின்றவர்கள் என்பதை மந்தைகள் உணரவேண்டும். அவர்கள் வீடு செல்லும் போது வெறுங்கையராக, சோர்வடைந்தவராக நிலை தவறிய மக்களாக செல்லாதிருக்க பார்த்துக்கொள்ளுங்கள்.

## பொதுநிலையினரின் சுயகௌரவம்

எம்முடைய அணுகுமுறையில் கருத்திற்கொள்ளவேண்டிய மற்றுமொரு அம்சமானது, கடவுளால் மக்களுக்கு வழங்கப்பட்ட தனிப்பட கௌரவத்தினையும் திருமுழுக்கின் கௌரவத்தினையும் மதித்தலுமாகும். பொதுநிலையினர் திருச்சபையில் கைவிட்டப்பட்ட ஒரு பகுதியினர் அல்ல. திருத்தந்தை பிரான்சிஸ் இதனை தெளிவாக பின்வருமாறு வலியுறுத்துகின்றார்: **"இறைமக்களில் பெரும்பான்மையானவர்கள் பொதுநிலையினராக உள்ளனர். சிறுபான்மை – திருநிலைத்தப்படுத்தப்பட்ட பணியாளர்கள் – அவர்களின் பணிக்காகவே உள்ளனர். பொதுநிலையினரின் அடையாளம் மற்றும் திருச்சபையில் அவர்களின் பணி குறித்த விழிப்புணர்வு வளர்ச்சி பெற்று வருகிறது. ஆழமாக ஊன்றிய சமூக உணர்வும், பிறரன்புப் பணிகள், மறைக்கல்வி மற்றும் இறை நம்பிக்கைக் கொண்டாட்டங்களுக்கு மிகுந்த பிரமாணிக்கம் உடையவர்களே பொதுநிலையினர்"** (EG. 102).

திருத்தந்தை தூய 2ம் யோவான் பவுல் 1988ம் ஆண்டு மார்கழி மாதம் தனது, ஆயர் பேரவைக்கு பின் வெளியிட்ட மறைத்தூதுப் பணியில் பொதுநிலையினரின் பங்கு எனும் அப்போஸ்தலிக்க அறிவுரை ஏட்டில் குருக்களுக்கும் பொதுநிலையினருக்கும் இடையே நெருங்கிய ஒற்றுமையும் உடனுழைப்பும் அவர்களின் வேறுப்பட்ட நிலைகளில் இணையான கௌரவமும் பொதுநிலையினர் குருக்கள் இடையே வளர்க்கப்படவேண்டுமென அழைப்புவிடுக்கின்றார். இது பங்கு மட்டங்களிலும் நடைப்பெற வேண்டிய தொன்றாகும்: **"பங்கு என்பது ஒரு முதன்மையாக ஒரு அமைப்போ, பிரதேசமோ, கட்டிடமோ அல்ல, மாறாக, – ஒன்றினைக்கும் ஆவியின் நெருப்பினால் உருவாக்கப்பட்ட கூட்டுறவு, கடவுளின் குடும்பம்". "ஒரு வரவேற்கின்ற குடும்ப இல்லமாகும்", விசுவாசிகளின் கூட்டமாகும்"** (CFL. 26). எனவே, இவ்வாறான பங்குகள் அனைத்தும் உண்மையிலே கிறிஸ்தவர்களின் சமூகங்களாகும் மறைமாவட்ட அதிகாரிகள் பின்வருவனவற்றை வளர்க்க முன்வரவேண்டும்:

**அ. குறிப்பாக பங்கின் அமைப்புகளை மேய்ப்புப்பணி சார்ந்த பணிகளில் பொதுநிலையினரின் பங்களிப்பினை ஊக்குவிப்பதற்காக திருச்சபையின் சட்டத்தொகுப்பில் வழங்கப்பட்ட நெகிழ்வுத் தன்மைக்கு அமைய தழுவிக்கொள்ளல்,**

**ஆ. விசுவாசிகள் இறைவார்த்தையை பாரிமாறிக்கொள்வதற்கு சிறிய அன்பியங்கள் அல்லது "உயிருட்டமுள்ள கிறிஸ்தவக் குழுக்கள்" பயன்படும். இக்குழுக்கள், குருக்களுடன் இணைந்து உண்மையான தமது சேவையையும் மற்றவர்கள் மீதுள்ள அன்பையும் திருச்சபையின் ஒன்றிப்பினைக் காட்டவும், நற்செய்தியினை பரப்பும் நிலையங்களாகவும் மாற்றுகின்ற வெளிப்பாடாகின்றது** (CFL 26).

எனவே இவ்விசேட ஆண்டினை பொதுநிலையினர் குருக்களுடன் உயரிய நம்பிக்கையையும் கூட்டுறவையும் அதிகரிக்கின்ற, பங்குகளில் மகிழ்ச்சிகரமான ஒற்றுமையை உருவாக்குகின்ற, ஆண்டவரின் சீடர்களைப்போல திருமுழுக்கின் கௌரவத்தினை பிரதிபலிக்கின்ற வகையில் திருச்சபையின் மேய்ப்பணியில் தீவிரமாக ஈடுபடுகின்ற ஆண்டாக மாற்றுவோமாக. குருக்களாகிய நாம் பொதுநிலையினர் மேல் அதிகாரத்தன்மையுடைய நம்பிக்கையற்றவர்களாக இருப்பதனை தவிர்த்துக் கொள்வோமாக. நாம் அனைத்துத்துறைகளிலும் நிபுணத்துவமடைந்தவர்கள் அல்லாத காரணத்தினால் பொதுநிலையினரின் ஆலோசனைகளை மகிழ்வுடன் பெற்றுக்கொள்வோமாக. வேறுப்பட்ட நிலைகளில் குருக்களும் பொதுநிலையினரும் திருச்சபையில் பணிகளை பகிர்ந்து கொண்டாலும், நாம் கிறிஸ்துவின் பொதுக் குருத்துவப் பணியிணையே செய்கின்றோம். நான் உங்களிடம் கேட்பது, குறிப்பாக பங்குக் குருக்களிடம் உயர் மறைமாவட்டத்தில் செயற்படுகின்ற BCC-ASIPA அலுவலகத்தின் உதவியுடன் பங்குகளில் திருவிவிலிய கற்கை நெறிக்குழுக்கள், சிறிய உருவாக்கல் பகுதிக் குழுமக்களை ஆரம்பிக்கவும், என்னால் அண்மையில் வழங்கப்பட்ட வழிகாட்டல் அறிவுறுத்தல்களுக்கு அமைய பங்கு மேய்ப்புப்பணி மன்றங்களை உருவாக்குமாறும் உங்களை அழைக்கின்றேன். குறிப்பாக நல்லாயன் ஆண்டாகிய இவ்வாண்டில் உயர்மறைமாவட்ட அலுவலகத்துடன் ஒத்துழைத்து மேற்குறிப்பிட்டவற்றை செயற்படுத்த ஈடுபடுமாறு உங்களிடம் கேட்கின்றேன். இவ்வருட இறுதியில் ஒவ்வொரு பங்கும் நற்கருணையை மாதிரியாகக் கொண்ட சமூகங்களின் சமூகமாக மாறுமென்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

## நல்ல இரக்கமுள்ள மேய்ப்பர்களாக இருங்கள்

இத்தருணத்திலே எமது பங்குத்தந்தையர் அனைவரும் தமது மக்களோடு கனிவும், பகிர்வும், நட்பும், மகிழ்விக்கவும், மதிக்கவும் தெரிந்த நல்ல மேய்ப்பர்களாக இருக்க வேண்டும் என நான் அழைப்பு விடுக்கின்றேன். எவரையும் உதறித்தள்ளாமல் அனைவரையும் மதிப்பளித்து ஏற்றுக்கொள்ளவும், முகமலர்ச்சியோடு அவர்களை சந்திக்கவும், சிறந்த உள்ளத்தோடும், நல்வார்த்தை பேசி தீர்ப்பிடாமல் வரவேற்கவும் பழகிக்கொள்ளுங்கள். திருத்தந்தை பிரான்சிஸ் வழங்கிய இறை இரக்கத்தின் சிறப்பு யூபிலிக்கான ஆணைமடலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: **"நற்செய்தியின் இதயத் துடிப்பாகிய கடவுளின் இரக்கத்தை அறிவிக்கும் பொறுப்பு திருஅவையிடம் வழங்கப்பட்டுள்ளது. இக்கடவுளின் இரக்கம் ஒவ்வொரு நபரின் அறிவையும் இதயத்தையும் அதற்கே உரியவகையில் ஊடுருவவேண்டும். கிறிஸ்துவின் மணமகளாகிய திருஅவை கடவுளின் மகன் எவ்வாறு எவ்விதவிலக்குமின்றி எல்லாரிடமும் சென்றாரோ, அதைப் பின்பற்றி தனது செயல்பாட்டையும் அமைக்கவேண்டும். இக்காலத்தில் திருஅவைக்குப் புதிய நற்செய்திப் பணி ஆற்றும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. இரக்கத்தின் ஆய்வுப்பொருளைப் புத்தார்வத்தோடும் புத்துயிரளிக்கும் மேய்ப்புப்பணி செயல்பாட்டுடனும் மீண்டும் மீண்டும் எடுத்துவைக்க வேண்டிய தேவை திருஅவைக்கு உள்ளது. திருஅவை தனது வாழ்வின் மூலம் இரக்கத்திற்குச் சான்று பகர்வது அது அறிவிக்கும் செய்தியின் நம்பகத்தன்மைக்கு முற்றிலும் இன்றியமையாததாக உள்ளது. எல்லா மனிதர்களுடைய இதயங்களையும் தொட்டு, தந்தையை அடைவதற்கான வழியை மீண்டும் ஒரு முறை கண்டு பிடித்து, அவர்களுக்கு உயிர்ப்பூட்டுவதாய் திருஅவையின் மொழியும் செய்கைகளும் இரக்கத்தை வெளிப்படுத்த வேண்டும்"** [MV. 12].

எனவே எமது கடமை தொலைந்தவரை கண்டனம் செய்வதல்ல. மாறாக நல்ல ஆயனைப் போல் அவர்களை தேடிச்செல்வதும், அவர்களின் காயங்களை கட்டுவதும், உடைந்த உள்ளத்தோரை குணப்படுத்தவும், ஆதரவற்றோருக்கு ஆறுதலளிப்பதுமே ஆகும்.

உண்மையில் நாம், திருச்சபைக்கு திருத்தந்தை விடுக்கும் அழைப்பினை ஆழமாக சிந்திக்கவேண்டும். **"நான் உங்களிடம் கேட்பது இதுவே. "மந்தைகளின் வாசனையைக்" கொண்ட நல்ல மேய்ப்பர்களாக இருங்கள். உண்மையுள்ள மனிதர்களைப் பிடிப்பவர்களாக, மந்தைகள் நடுவே இருக்கும் நல்ல மேய்ப்பர்களாக இருங்கள்."** (தாம் திருத்தந்தையாக தெரிவு செய்யப்பட்ட பின்னர் தூய பேதுரு பேராலயத்தில் எண்ணெய்கள் மந்தரிக்கும் முதலாவது திருச்சடங்குகளில் திருத்தந்தை பிரான்சிஸ் ஆற்றியமறையுரை - 28ம்நாள் மாசி 2013). ஒவ்வொரு குருவும் குறிப்பாக மறைப்பணியில் ஈடுபட்டிருப்போர் தமது மந்தைகளைக் காக்கும் நல்ல மேய்ப்பர்களாக இருக்கவேண்டும்: ஏனெனில், உண்மையிலே நடப்பது யாதெனில், ஒவ்வொரு பங்கிலும் பங்குக்குருவும் இறைமக்களும் அன்புறவில் வளர்க்கப்படுகின்றனர். குரு மக்களுக்காகவேயன்றி மக்கள் குருக்களுக்காகவல்ல. இதனாலேயே Pastores DaboVobis இல் தூய 2ம்யோவான் பவுல் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: **"குருவானவர் அவரது அர்ப்பண வாழ்வால் மற்றவர்களோடு உள்ள உறவை வளர்த்துக் கொள்ள வேண்டும். இயேசுவின் அவ் அர்ப்பண வாழ்வுக்கு சாட்சி பகர்ந்து தியாக மனப்பான்மையோடு தூய்மை, மற்றும் சுதந்திரமான முறையில் வாழ தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் முழுமையான விசுவாசத்தால் அர்ப்பணிப்புடன் "அன்பார்வத்தை"** (cf. 2கொரி. 11:2) **கொண்ட, உள்ளங்களை கற்புள்ள கன்னியாகக் கொண்டு இறைமக்களிடத்தில் "கடவுளை ஏற்றுக்கொள்ளும் வரை"** (cf. கலா. 4:19) **இறைமக்களை அன்பு செய்ய, குருக்களுக்கு இயலுமாக இருக்க வேண்டும்"** (PDV. 22).

**"கிறிஸ்துவைப் பின்பற்றுகின்ற"** [PDV.23]. இறைமக்களை அன்பு செய்கின்ற அவர்களுக்கு எமது சேவையை வழங்குகின்ற எமது வாழ்வை திருச்சபைக்கும் இறைமக்களுக்கும் காணிக்கையாக்குகின்ற நல்ல மேய்ப்பர்களாக நாம் இருத்தல் வேண்டும். மேலும் PDV தொடர்ந்து குறிப்பிடுவதுபோல், **"வெறுமனே நாம் செய்கின்ற பணியில் மட்டுமன்றி மாறாக எம்மையே நாம் மற்றவர்களுக்காக அர்ப்பணிக்கும் போது கிறிஸ்துவின் அன்பை மந்தைகளுக்கு வெளிப்படுத்துகின்றோம்"** [Ibid]. நாம் எப்போதும் எமது உயரிய உதாரணமாக விளங்குகின்ற கிறிஸ்துவைப் பின்பற்ற வேண்டும். ஏனெனில், தாம் இவ்வுலகிற்கு வந்தது, **"பணிவிடை பெறுவதற்காகவன்றி பணிபுரிவதற்கும் மற்றவர்களுக்காக தம்முயிரை வழங்குவதற்குமே"** (மாற்கு 10 : 45, மத். 20 : 28) என கிறிஸ்துவே கூறுகின்றார். மேலும் தம்முடைய ஊழியர்களை **"நாம் பயனற்ற பணியாளர்கள் எங்கள் கடமையைத் தான் செய்தோம்"**, எனக் கூறுமாறு கிறிஸ்து எச்சரித்தார். (லூக். 17 : 10).

எனவே மீட்புச் செயற்றிட்டத்தின் வழியில் கிறிஸ்துவோடு ஒப்பிடுகையில் நாம் எம்மை மிகவும் தாழ்மையுள்ளவர்களாகக் கருதி, இறைவன் எமக்கு வழங்கிய அதிகாரத்தை மிகவும் தாழ்மையுடனும் செயற்படுத்துவோம். இறைவனின் மீட்புச் செயலானது கடவுளுக்கும் திருமுழுக்கு வழியாக அவரால் அழைக்கப்பட்டவர்களுக்கு இடையே உள்ளது என்பதை நினைவிற் கொள்வோம். குருக்களும் துறவிகளுமாகிய நாம் இதற்கு புறம்பானவர்களல்லர். நாம் இல்லாவிட்டாலும் கடவுளின் மீட்பின் அன்பு இறைமக்களுக்கு வழங்கப்படும். இருப்பினும், தம்முடைய மேய்ப்புப்பணியை கொண்டு செல்வதில் பாவிகளாகிய தகுதியற்ற ஆண், பெண் ஆகிய எம்மை அழைத்துள்ளார். எனவே, நாம் இச்சந்தர்ப்பத்தை இருகரங்களாலும் பற்றிப்பிடித்து எம்மால் இயன்றவரையில் இறைவனுக்கு அவரது மேய்ப்புப்பணியில் உதவிசெய்வோம். எனவே எவ்வித நிபந்தனைகளும் அவர்முன் வைக்காமல் அல்லது கடவுளின் பணியில் கடவுளையன்றி எம்மை மையப்பொருளாக்கி அல்லது எம்மையறியாமல் எமது மனிதத் திட்டங்களினால் மேய்ப்புப்பணியினை அழித்துவிடாமல் கடவுளை எம்முடைய வாழ்வில் ஒளிவீசிடச் செய்வோமாக. இச்செயலானது கடவுளின் அன்பை அனுபவிக்க மக்களுக்கு இடமளிக்கும். இத்தருணத்தில் தூய திருமுழுக்கு யோவானின் கூற்றினை நினைவிற்கொள்வோம்: **"அவரது செல்வாக்கு பெருகவேண்டும்: எனது செல்வாக்குக் குறையவேண்டும்"** (யோவான் 3 : 30).

## புதுப்பிக்கப்பட்ட மறைதூதுப் பணி

இவ்வாண்டின் மக்கள் சேவையின் புதுப்பித்தலைக் குறித்து எமது செயற்பாடுகளில் விசேட விதமாக கவனம் செலுத்த வேண்டிய விடயமாக அமைவது இறைமக்களின் விசுவாசத்தைப் பற்றிய அறிவை வளர்ச்சியுறச் செய்வதாகும். இதனைப் பற்றி கீழ்க்காணும் விடயங்களில் கவனம் செலுத்துவோம்.

1. விசேட விதமாக பிள்ளைகளுக்கு சிறுபராயத்தில் கல்வி புகட்டுகையில் மறையைப் பற்றிய கல்வியை புகட்டுவதோடு, பாடசாலை பாடத்திட்டத்திற்கு உட்பட்ட விடயங்களில் மட்டுமன்றி மேலதிகமாக வேறு கோணத்தில் கவனம் செலுத்தக் கூடிய மறையறிவை பிள்ளைகளுக்குப் புகட்ட முயற்சித்தல்.

2. வளர்ந்தோருக்கும் வீடுகளில் வசிப்பவர்களுக்கும் பயனளிக்கக்கூடிய மறைக்கல்வி முறையினை உருவாக்குதல் எமது மந்தைகளின் அடித்தள மட்டத்திலிருந்து நம்பிக்கையை வளர்க்க உதவும்.

3. ஆன்மீக புதுப்பித்தலை வளர்ப்பதற்கு பங்குகளில் போதிக்கும் பணியை மக்களின் விசுவாசத்தை வளர்ப்பதற்கு வழிகாட்டுகின்றதாக அமையவேண்டும். இவற்றிற்கு மறைமாவட்டத்தில் விசுவாச உயிரூட்டல் பணியினரின் சேவையை வலுப்படுத்துவதுடன், ஏற்கனவே குறிப்பிட்டதுபோல சிங்கள, தமிழ் மறையுரைகளை...

தொடர்ச்சி XXம் பக்கம்

வழங்குவதற்கென குருக்களை நியமிப்பதுடன், மறைமாவட்டத்தில் சாலக்குடி ஞானஒடுக்க நிலையத்தினரும் இணைந்து ஒரு ஞானஒடுக்க நிலையமொன்றை ஆரம்பித்தல்.

4. தரமுயர்த்தப்பட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை Verbum தொலைக்காட்சி நிலையத்தினரின் உதவியுடன் ஒளிபரப்புசெய்தல், வானொலி, செய்தித்தாள், பருவ - இதழ்கள், பாடல், நாடகம், இணையப் பாவனை போன்ற துறைகளை வளர்த்தல். விசேட குழுவொன்று இவற்றின் முன்னேற்றத்தை அவதானிப்பதற்காக என்னால் நியமிக்கப்படும்.

அனைத்து பங்குத் தந்தையர்கள் விசேடமாக மறைத்தூதுப் பணியில் சமூக தொடர்பாடல் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள குருக்கள் சுப்புவத் அரண மற்றும் புதுவாழ்வு சங்கம் (Community of the Risen Lord) போன்ற மக்களின் மனதில் விசுவாசத்தை ஆழப்படுத்த செயற்படும் முயற்சிக்கும் அமைப்புக்கள் இவ்வாறான எமது செயற்பாடுகளுக்கு தமது பங்களிப்பை வழங்க முன்வருமாறு அழைப்பு விடுக்கின்றோம். மேலும் இக்குழுக்கள் மேலே குறிப்பிடப்பட்ட புதிய செயற்திட்டங்கள் மூலம் பொதுநிலையினருக்கு பயனூட்டுவதாக அன்றி அக்குழுக்களின் அங்கத்தவர்களாக அவர்களை அடக்கியாளவோ, பங்குகளுடன் மக்களுக்குள்ள இறையுறவு மற்றும் பங்கின் பொதுவான ஆன்மீக செயற்பாடுகளை சீர்குலைக்கும் விதமாக அமையாத வண்ணம் இருக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்தவும். திருச்சபைக்குள் இன்னுமொரு திருச்சபையை உருவாக்குவது எமது நோக்கமல்ல.

## சேவையிற்கு எமது அர்ப்பணம்

திருச்சபையானது எளியோரிடத்தில் காட்டும் அக்கறையானது எமது நல்லாயத்துவ செயற்பாடுகளின் பொறுப்புகளில் முக்கியமான அங்கமாகும். நல்லாயனான இயேசுக்கிறிஸ்து **"நோயாளர்களைக் குணமாக்கி, பசியில் வாடியோருக்கு உணவளித்து, இறந்தோரை உயிர்பெறச் செய்து, எளியோர் மீது அளப்பரிய அன்புடனும், இரக்கமுடனும் செயற்பட்டார்"** என்பது மட்டுமன்றி பாவிகளை பாவ நிலையிலிருந்து மீட்க தம் உயிரையே தியாகம் செய்தார். அவர் தமது சீடர்களுக்கு பசித்தோர்க்கு உணவளிக்கவும், எளியோரை அன்பு செய்யவும் மற்றும் அவர்களை வழிநடத்தவும் ஒவ்வொருவரினதும் பாதங்களைக் கழுவவும், பகைவர்களை மன்னிக்கவும், மீண்டும் சமாதானமாக வாழவும், அவர்களுக்காக செபிக்கவும், எமக்குரிய செல்வங்களைக் கைவிட்டு நோய்வாய்ப்பட்ட திக்கற்றவர்களுக்கு ஆறுதல் அளிக்கவும் முன்வருவது பரலோக வாசலை அடைவதற்கான திறவுகோலை பெறுவதற்கான வழிமுறைகள் என குறிப்பிடுகின்றார். (CF. மத். 25:31-46) இதனைப் பற்றி தூய யாக்கோபு இவ்வாறு கூறுகின்றார். **"ஒரு சகோதரன் அல்லது சகோதரி போதிய உடையும், அன்றாட உணவும் இல்லாதிருக்கும் போது அவர்கள் உடலுக்குத் தேவையானவை எவற்றையும் கொடுக்காமல் உங்களில் ஒருவர் அவர்களைப் பார்த்து நலமே சென்று வாருங்கள், குளிர்காய்ந்து கொள்ளுங்கள், பசியாற்றிக் கொள்ளுங்கள் என்பாரென்றால் அதனால் பயன் என்ன?"** (யாக் 2:15-16). எனினும் முதல் கிறிஸ்தவ சமூகத்தினர் அனைத்தையும் பகிர்ந்து சமூக உறவுடன் வாழ்ந்தனர். இது அவர்களை பெரும் வீரர்களாக மாற்றியது (தி.ப 2:44-45, 4:35).

எனவே நல்லாயனுக்காக அர்ப்பணிக்கப்பட்ட இவ்வாண்டில் தான் என்ற அகந்தையை விட்டு தம் உயிரையே எமக்காகத் தியாகம் செய்த இயேசுவின் வாழ்வைப் பின்பற்றி **"நீங்கள் ஒருவர் மற்றவருக்குச் செலுத்தும் அன்பிலிருந்து நீங்கள் என் சீடர்கள் என்பதை எல்லோரும் அறிந்து கொள்வர்"** (யோவா 13:34). எனும் அவரது கட்டளைக்கிணங்க அன்புக்கு சாட்சியம் பகரும் மக்களாகத் திகழ்வோம். விசேட விதமாக இவ்வாண்டின் தவக்காலத்தில், பொதுக்காலத்தில், திருவருகைக் காலத்தில் பொதுநிலையினரிடத்தில், சமூகத்தில் வாழும் எளியோர் மற்றும் வறியோர், சமூத்தால் ஒதுக்கப்பட்டவர்களைத் தேடிச்சென்று அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு முயற்சிப்போம்.

செத்சரன நிறுவனத்தின் மூலம் செயற்படுத்தும் தவக்கால நிகழ்ச்சிகளுக்காக கத்தோலிக்க பாடசாலைகள் மற்றும் குருமடங்கள் உட்பட உயர்மறைமாவட்டத்திலுள்ள அனைத்துப் பங்குகள் மற்றும் பேராலயங்களின் பங்களிப்புக்கள் கிடைக்கும் என எதிர்பார்க்கின்றோம். இச்செயற்பாடுகளை வெறுமனே பணம் திரட்டுவதற்காக மட்டுமன்றி எமது விசுவாசத்தை ஆழப்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பாக மாற்றிக் கொள்வோம். பல்வேறுபட்ட சவால்களுக்கு மத்தியில் முன்னோக்கிச் செல்லும் எமது பங்குகளில் வசிக்கும் குடும்பத்தைச் தேடிச்சென்று அப்பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக்காக தேவைப்படுபவற்றை நிவர்த்தி செய்து கொடுக்கவும், உண்ண உணவின்றித் தவிக்கும் குழந்தைகள், அனாதை இல்லங்களில் மாற்றுத்திறனாளிகள் தங்கியுள்ள அமைப்புகளில் உள்ள குழந்தைகளின் தேவைகளை முன்னுணர்ந்து வறுமை மற்றும் அடிப்படைத் தேவைகளை இழந்து தவிக்கும் மக்களுக்கு உதவி செய்து முழுப்பங்கிற்கும் ஓர் நல்ல ஆயனாக செயற்பட பங்குத் தந்தைக்கு உள்ள திறமைகளை வளர்ப்பதற்கு செத்சரன நிறுவனத்திலும், வின்சன் டி பவுல் சபையிலும், மறைக்கோட்ட இணைப்பாளர்களாக அருட்தந்தையர்கள் மூலம் பல்வேறுபட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். எமக்கு உதவி செய்ய முன்வந்துள்ள நன்கொடையாளர்களின் பங்களிப்பு மூலம் புற்றுநோயால் வாடும் குழந்தைகள் மற்றும் அவர்களை மாரகம வைத்தியசாலைக்கு தரிசிக்கச் செல்லும் அக்குழந்தைகளின் பெற்றோர்கள், உறவினர்களுக்கு தங்குமிட வசதிகள் நிறைந்த கட்டிடத்தை **"அபேக்ஷா"** வைத்தியசாலைக்கு அருகாமையில் கட்டுவதற்கு இடத்தைத் தெரிவுசெய்து வைத்துள்ளோம். இச்செயற்பாட்டிற்கு பங்களிக்கும் முகமாக பங்குத் தந்தை உட்பட பங்கு சபையினர் அனைவருக்கும் மற்றும் இக்கட்டிடத்தை மேற்பார்வை செய்வதைக் குறித்து பொறுப்பேற்க முன்வந்த அப்போஸ்தலிக்க கார்மேல் சபைக் கன்னியருக்கும் எமது நன்றிகளை கூறக் கடமைப்பட்டுள்ளோம். இவ் மாரமக வைத்தியசாலைக்கு தூரத்திலிருந்து சிகிச்சை பெறவரும் நோயாளிகளுக்கு இக்கட்டிடமானது மிகுந்த பலன் அளிக்கும் என்பது திண்ணம்.

## முடிவுரை

மதிப்பிற்குரிய அருட்தந்தையர்களே, அருட்சகோதரர்களே, துறவிகளே, எனது அன்பான பொதுநிலையினரே, இக்கருத்துக்களுடன் இவ்வரப்பிரசாதமான வருடத்தில் இறைவனுக்கு உகந்த வாழ்வு வாழ விசுவாசத்தில் நிலைத்திருக்கவும் எமது உயர்மறைமாவட்டத்திலுள்ளவர்களுக்கு வழிகோலும் எனவும் அதற்கு பிரார்த்தித்துக் கொண்டு உங்கள் முன் எனது பிரார்த்தனையை முன்வைக்கின்றேன். இவ்வாறாக எனது மனதிலிருந்து எழுந்த கருத்துக்களை உங்கள் முன்னிலையில் முன்கூட்டியே முன்வைத்து இறைவன் உங்களிடத்திலும் புத்தாக்கமான ஆக்கபூர்வமான செயற்பாடுகளை உருவாக்குவார் என்பதிலும், செபத்தில் நிலைத்திருந்து பங்கு மக்களின் முன்னேற்றத்திற்காக பாடுபடும் சிறந்த பங்குத் தந்தையாகவும் திகழ முடியும் எனும் நம்பிக்கையினாலேயே ஆகும். இவையனைத்தையும் நாம் எமதாண்டவரின் பாதத்தில் முழந்தாளிட்டு சமர்ப்பித்து செபத்தால் எம்மை வழிநடத்தும் படி வேண்டுவோம்.

இவ்வாண்டிலும் எமது தியாக செயற்பாடுகள் குறித்து இறையாசீர் கிடைக்க வேண்டுமென்று பரலோகத்திற்கே எமது செபங்கள் கேட்கும் வண்ணம் இருக்க வேண்டும் என தியாக மனப்பான்மையோடு சேவையாற்றிக் கொண்டிருக்கும் அனைத்துத் துறவிகளுக்கும் அழைப்புவிடுக்கின்றேன். மேலும் இவ்வனைத்து செயற்பாடுகளையும் எம் இலங்கை அன்னையின் பாதத்தில் வைத்து, அவரது அன்பார்ந்த மகனும், எமது ஆண்டவரும், நல்லாயனுமான இயேசுக்கிறிஸ்துவிடம் பரிந்து பேசி ஆழமான விசுவாசத்திற்கு புத்துணர்வூட்டும் எம் கிறிஸ்தவ நம்பிக்கையை ஆழப்படுத்த எம் உயர் மறைமாவட்டத்தினருக்காக மன்றாடும் படி தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறோம்.

ஓ அன்புள்ள தாயே! இலங்கை அன்னையே, எமது இத்தாழ்மையான கோரிக்கைகளின் வெற்றியை எமக்கு உறுதியாகப் பெற்றுத் தரும் தயாளமுள்ள திவ்விய ஊற்றின் மத்தியஸ்தர் நீரல்லவோ, உம் மைந்தனும் எங்கள் ஆண்டவருமான இயேசுக்கிறிஸ்துவிடம் எமது குருக்கள் துறவிகள் அனைவருக்கும் தம் மந்தைகளை பேணிக் காக்க தேவையான சக்தியைப் பெற்றுத்தந்தருளும். அப்போது உம் அன்புள்ள பிள்ளைகள் வாழ்வில் வெற்றியை உம் மைந்தனின் உதவியால் பெறுவார்கள் ஆமென்.

**பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை,**

**கொழும்பு உயர்மறைமாவட்டம்.**

**தை 2018.**

# மதிப்புக்குரிய பெல்லன்வில தேரர் அவர்கள் நித்திய இளைப்பாற்றியை அடைய வேண்டுமென பிரார்த்திக்கின்றோம்



மதிப்புக்குரிய பெல்லன்வில விமலரத்ன தேரரின் திடீர் மரணத்தால், ஒற்றுமை, ஒருமைப்பாடு, அன்புறவோடு பணியாற்றும் உயரிய நற்பண்புகளோடு திகழும் பௌத்த மகன் ஒருவர் பௌத்த மதத்தினருக்கு இல்லாமல் போய்விட்டது. எம் நாடு பெருமதி வாய்ந்த துறவற தேரர் ஒருவரை இழந்துவிட்டது. எம் நண்பர் எம்மை விட்டு போய்விட்டார்.

நான் அவரோடு பழகிய காலத்தில் அவரின் குணாதிசயங்களை பற்றி நன்கு அறிந்து கொண்டேன். மிகவும் நேர்மையான, பக்கச்சார்பற்ற, சொல்ல வேண்டிய விடயங்களை ஒழிவுமறைவின்றி வெளிப்படையாகக் கூறும் பண்புகளை நான் அவரிடத்தில் கண்டேன். அவர் என்னுடன் ஓர் சகோதரனைப் போல் நெருக்கமான முறையில் பழகினார். அவருடன் சென்ற வெளிநாட்டு, உள்நாட்டு பயணங்கள், அவருடனான உரையாடல்கள், கருத்துப்பரிமாற்றங்கள் எனது அறிவை வளர்த்துக்கொள்ள ஏதுவாக அமைந்தன. நான் தளுகம பங்கின் பங்குத்தந்தையாக பணியை பொறுப்பேற்ற வைபவத்தில் இவர் கலந்து கொண்டு, ஓர் உண்மையான சகோதரனைப் போல் உரை நிகழ்த்தினார். இந்தியாவில் நடைபெற்ற சர்வ மதச் சம்மேளனத்தில் அவருடன் கலந்து கொண்டமையை என்னால் மறக்கவே இயலாது. அவர் தேவைக்கு மட்டும் பழகி, உறவாடி தேவை முடிந்ததும் கைவிட்டுச் செல்லும் குணத்தை உடையவர் அல்ல. இரண்டு கிழமைக்கு முன் எனது சுகம் விசாரிப்பதற்காக கத்தோலிக்க அச்சகத்திற்கு வந்து என்னை சந்தித்தமை எனக்கு ஆச்சரியத்தை தந்தது.

தமது சொந்த வேலைகளுக்கும், சுயநலத்துடன் செயற்படும் மனிதர்கள் வாழும் இக்காலகட்டத்தில், சமூகத்தில் இலாபத்தை எதிர்பார்த்து, சலுகைகளைப் பெற்றுக்கொள்ள தமது சுயமதிப்பை விற்கும் மனிதர்களிடையில், தைரியமான சேனாதிபதியாக இவர் திகழ்ந்தார்.

தமது திறமைகளினால் மற்றவர்களை கவர்ந்து கொள்ளவும், தமது உயரிய கருத்துக்களால் சாதகமான முறையில் மற்றவர்களின் மனதில் இடம்பிடித்து கொள்ளவும் கூடியதான தகமைகளைக் கொண்ட எம் தேரருக்கு இணையாக வர யாராலும் இயலாது. அவர் இல்லாக் குறையை யாராலும் ஈடுசெய்ய முடியாது.

மதிப்புக்குரிய தேரர் அவர்கள், சர்வமதத்தவரோடும் மற்றும் பல இனத்தவர்களுக்கிடையில் இருக்கவேண்டிய உறவுகளை மதிப்பதற்கும், அவற்றை விளங்கிக் கொண்டு உறவுகளை ஆழப்படுத்திக் கொள்ள முன்மாதிரிகையான நபராக இருந்தார். விசேடவிதமாக, கத்தோலிக்க / கிறிஸ்தவ சபையினர்களோடும், பல்வேறுபட்ட சபைகளின் துறவிகளோடும், பரஸ்பர உறவுடனும், பேருக்கும், புகழுக்கும் அடிமையாகாமல் உண்மையான நட்புறவுடன் பழகினார் என்பதை நான் கண்கூடாகப் பார்த்தேன்.

காலஞ்சென்ற மாதுளுவாவே சோபித தேரரோடு நெருங்கிய தொடர்புகொண்ட விமலரத்ன தேரர், அவரின் படிப்பினைகளுக்கும் ஆலோசனைக்கும் ஏற்ப வாழ்ந்ததோடு, பல்வேறுபட்ட குணாதியங்களுடன் "சித்த அத்த" (நீதியை - உண்மையை) வெளிப்படையாக கதைப்பதற்கு பயப்படவில்லை, பின்வாங்கவில்லை. இவ்வாறான சிரேஷ்ட மனிதர்களின் பிரியாவிடை எதனைக் குறித்தும் ஈடுசெய்ய முடியாத பாரிய இழப்பாகும்.

இது மனித வாழ்வின் யதார்தமாகும். நாம் எந்நிலையில் இருந்தாலும், அவையனைத்தையும் விட்டுச் செல்வதற்கான நேரம் வரும். இதுவே உலக வாழ்வின் யதார்த்தமுமாகும். கல்வியில் உயர்நிலையிலுள்ளவருக்கோ, ஞானிக்கோ, மதத்தலைவர்களுக்கோ, எழுத்தாளர்களுக்கோ, எப்பேர்ப்பட்ட நிலையிலுள்ளவருக்கோ மதத்தை பற்றியதான மிகவும் கடினமாக கேள்விகளுக்கு இலகுவான முறையில் பதில்களையும் விளக்கங்களை கொடுக்கக் கூடியவராகவும், முக்கியமாக ஓர் சிரேஷ்ட மனிதராக தேரர் அவர்கள் திகழ்ந்தார். இவரோடு நெருங்கிய உறவு கொண்டோருக்கு ஓர் நல்ல சகோதரனை, நண்பனை இழந்த கவலை வாழ்நாளெல்லாம் இருக்கும்.

எனவே, எம் நண்பனான தேரர் அவர்களே, உங்களின் இழப்பால் வேதனையுறும் நாம், உங்கள் ஆன்ம விடுதலைக்காவும், மோட்சம் கிடைக்க வேண்டுமெனவும் இறைவனைப் பிராத்திக்கிறோம்.

**எழுத்து**

**அருட்பணி. கலாநிதி. கெமிலஸ் பர்னாந்து**

**தமிழாக்கம் : செல்வி. எனஸ்டிக்கா**




அனைத்து விதமான அச்சுப்பதிப்பு தேவைகளையும் சிறப்பான முறையில் செய்துகொள்ள...

மிகக் குறைந்த விலையில் கூடிய சேவைகளைப் பெற்றுக்கொள்ள...

# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்




## உங்களுக்கான பல்வேறு விதமான சேவைகள்

- நவீன தொழிற்நுட்ப ரீதியில் [ஓப்செட் முறையில்]
- நவீன பிரதியாக்கம் [டுப்ளோ],
- வர்ண போட்டோ பிரதிகள் எடுத்தல் மற்றும் ஸ்கேன் எடுத்தல் பல வணர்ணங்களில் டுப்ளோ பிரதிகள் எடுத்தல்

- பாடற்தாள்கள்
- நினைவு மலர்கள்
- செபப் புத்தகங்கள்
- நவநாள் புத்தகங்கள்
- சிறுகதை புத்தகங்கள்
- பில் புத்தகஙகள்
- ரிசிட் புத்தகங்கள்
- சஞ்சிகைகள்
- சான்றிதழ்கள்
- லெட்டர் ஹெட்ஸ்
- விசிடிங் கார்ட்ஸ்
- ஞாயிறு வழிபாடுகள்
- திருமணம் மற்றும் ஆலயத் திருவிழாக்கள், இறந்தோருக்கான திருப்பலியில் பாடப்படும் பாடற்தாள்கள் ஆகியவையும் அச்சிடப்படும்.

## பல்வேறு விதமான சேவைகளும் அதற்கான விலைகளும்

### திருமண சேவைகள்



பிறந்தநாள், திருமண ஆண்டு, மரண அறிவித்தல், நினைவுநாள், ஏனைய தேவைகள் போன்ற பலவிதமான விளம்பரங்களுக்கு எம்மை நாடவும்.

### வர்த்தக விளம்பரங்களுக்கான அளவுகளும், விலைகளும்




| அளவுகள் Single Column | விலைகள் 1 ½" width | அளவுகள் Double Column | விலைகள் 3 ½" Width | அளவுகள் Trible Column | விலைகள் 5" Widthd |
|---|---|---|---|---|---|
| 1" SC | 450/- | 1" DC | 900/- | 1" TC | 1,350/- |
| 1 ½" SC | 675/- | 1 ½" DC | 1,350/- | 1 ½" TC | 2,025/- |
| 2" SC | 900/- | 2" DC | 1,800/- | 2" TC | 2,700/- |
| 2 ½" SC | 1,125/- | 2 ½" DC | 2,250/- | 2 ½" TC | 3,375/- |
| 3" SC | 1,350/- | 3" DC | 2,700/- | 3" TC | 4,050/- |
| 3 ½" SC | 1,575/- | 3 ½" DC | 3,150/- | 3 ½" TC | 4,725/- |
| 4" SC | 1,800/- | 4" DC | 3,600/- | 4" TC | 5,400/- |
| 4 ½" SC | 2,025/- | 4 ½" DC | 4,050/- | 4 ½" TC | 6,075/- |
| 5" SC | 2,250/- | 5" DC | 4,500/- | 5" TC | 6,750/- |
| 5½" SC | 2,475/- | 5½" DC | 4,950/- | 5½" TC | 7,425/- |
| 6" SC | 2,700/- | 6" DC | 5,400/- | 6" TC | 8,100/- |
| 6 ½" SC | 2,925/- | 6 ½" DC | 5,850/- | 6 ½" TC | 8,775/- |
| 7" SC | 3,150/- | 7" DC | 6,300/- | 7" TC | 9,450/- |

- திருமண விளம்பரங்களுக்கு 1 தொடக்கம் 15 வரையான சொற்களுக்கு ரூபா 600.00உடம் அதனைத் தொடர்ந்து வரும் ஒவ்வொரு சொற்க-ளுக்கும் ரூபா 10.00 வீதமும் அறவிடப்படும்.
- திருமண விளம்பரங்களை கொடுக்கும்போது கொடுப்பவரது தேசிய அடையாள அட்டை தேவை. எனவே அடையாள அட்டையைக் கொண்டுவரவும்.

**சொற்களின் எண்ணிக்கைகளும், அதற்கான விலைகளும்**

| | | | |
|---|---|---|---|
| 15 | 600/- | 23 | 680/- |
| 16 | 610/- | 24 | 690/- |
| 17 | 620/- | 25 | 700/- |
| 18 | 630/- | 26 | 710/- |
| 19 | 640/- | 27 | 720/- |
| 20 | 650/- | 28 | 730/- |
| 21 | 660/- | 29 | 740/- |
| 22 | 670/- | 30 | 750/- |

உங்களது பிள்ளைகளின் திருமண வரன்களை ஞானஒளியின் மூலம் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்.



| பின்பக்கம் (கலர்) | விலை | உட்பக்கம் (கறுப்பு) | விலை |
|---|---|---|---|
| **ஆலய திருவிழா விளம்பரங்களுக்கான விலைகள்** | | | |
| ¼ பக்கம் | 9,000/- | ¼ பக்கம் | 8,500/- |
| ½ பக்கம் | 18,000/- | ½ பக்கம் | 17,000/- |
| முழுப் பக்கம் | 36,000/- | முழுப் பக்கம் | 34,000/- |
| **வர்த்தக விளம்பரங்களுக்கான விலைகள்** | | | |
| ¼ பக்கம் | 16,875/- | ¼ பக்கம் | 12,500/- |
| ½ பக்கம் | 33,750/- | ½ பக்கம் | 25,000/- |
| முழுப் பக்கம் | 67,500/- | முழுப் பக்கம் | 50,000/- |



### தொடர்புகொள்ளுங்கள்

இயக்குனர் அருட்தந்தை
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை
கொழும்பு – 08.
தொ.பே இல. 0112695984, 0112678106, 0114614927 பெக்ஸ் – 0112692586
E-mail : cgnanaoli@yahoo.com
www.colomboarchdiocesancatholicpress.com


அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம், இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்